# உடன்படிக்கைகள், சாபங்கள் வெளியே வரும் வழி

2013

உடன்படிக்கைகள், சாபங்கள்
இவைகளிலிருந்து வெளியே வரும் வழி
(Covenants, curses and the way out)

முகப்புரை (அறிமுகம்)- - - - - - -

மதிப்புரை - - - - - - - - -

முன்னுரை - - - - - - - - -

## பாகம் :A உடன்படிக்கைகள்

அத்தியாயம். 1

உடன்படிக்கை என்றால் என்ன? - - - - -

**உடன்படிக்கையின் வகைகள்**

(1) மறைவான உடன்படிக்கைகள் - - -
(2) கனவு மூலம் உடன்படிக்கைகள் - - -
(3) பாலுறவின் மூலம் உடன்படிக்கைகள் - - -
(4) தவறாக ஏற்பட்ட உடன்படிக்கைகள் - - - -
(5) மதம் சார்ந்த உடன்படிக்கைகள் - - - -
(6) பரம்பரையாக வரும் உடன்படிக்கைகள் - - - - -
(7) இரத்த உடன்படிக்கைகள் - - -
(8) மந்திரவாத உடன்படிக்கைகள் - -

**உடன்படிக்கைகள் எப்படி வருகின்றன - - - -**

(1) பாலுறவு மூலம் - - - -
(2) பழக்கவழக்கங்கள் மற்றும் பாரம்பரியங்கள் மூலம் - - -
(3) சாப்பாட்டுப் பழக்கங்கள் - - - -
(4) வரம்புமீறி / எல்லையை மீறிசெயல்படுவதால் - -
(5) பிறகலாச்சார நடவடிக்கைகள் - - - -

அத்தியாயம். 2

உடன்படிக்கையின் ஆயுள் (Life span )

ஏன் பிசாசுகள் உடன்படிக்கையை மறப்பதில்லை?

அத்தியாயம். 3

உடன்படிக்கைகள் இருப்பதற்கான அடையாளங்கள் (Signs of existing covenants)

(1) தீய கனவுகள்
திருமணத்திற்கு தாமதம், குழந்தை இல்லாமை, நிலையற்ற வீடு

(2) பிறருக்கு புலப்படாததைக் கேட்கும் பார்க்கும் அனுபவங்கள்

(3) பயம், வெறுப்பு, கவலை

(4) பிற காரியங்கள்

## அத்தியாயம். 4

உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டுவருவது எப்படி?

(1) கர்த்தருக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட-பிரதிஷ்டை வாழ்க்கை (Consecrate all)

(2) மனத்திரையில் கொண்டுவருதல் (Visualize)

(3) வேண்டாம் என்று விட்டுவிடுதல் (Renounce them)

(4) கட்டுதலும் துரத்துதலும் (Bind & Cast)

(5) அவைகளை நிறுத்து (Stop them)

(6) நீங்கள் விரும்புகிறதை வரும்படி கட்டளை இடுங்கள் (Decree what you desire)

# பாகம் -B சாபங்கள்

## அத்தியாயம். 5

விளக்கம்

சாபங்கள் சும்மா வருவதில்லை

யாரைச் சபிக்கக்கூடாது? வேதத்தில்

(1) பெற்றோர்கள்
(2) ஆட்சியாளர்கள்
(3) செவிடன்
(4) சத்துருக்கள்
(5) தேவன்
(6) தேவஜனங்கள்

சபிக்கப்பட்டவர்கள் யாராக இருக்கும்?

(1) சமுதாயம் - நிலம்
(2) ஒரு நபர்- குடும்பம்

## அத்தியாயம். 6

சாபங்கள் எப்படி வருகின்றன?

(1) ஒப்பந்த நிபந்தனைகளை காத்துக்கொள்ளாததால் (உடன்படிக்கையை உடைப்பதால்)
(2) பரம்பரைவழியாய் பெற்றோரிடமிருந்து வருகின்றன
(3) வேண்டுமென்றே பெற்றோரால் செய்யப்பட்ட பாவங்களின் விளைவு
(4) எதிர்மறையான வார்த்தைகள்
(5) வேண்டுமென்றே தேவனுக்கு கீழ்படியாததால்
(6) கர்த்தருடைய மகிமையை சுயநலத்திற்காக பயன்படுத்துவதால்
(7) தசமபாக காணிக்கைகளை தனக்கென்று பயன்படுத்துதல்
(8) மந்திரவாதத்தால் பிறரை உபத்திரவப்படுத்துதல்
(9) போலிமதம்
(10) சுயமாய் போட்ட சாபங்கள்
(11) அதிகாரத்திலுள்ளவர்களால் சொல்லப்பட்ட எதிர்மறையான / பாதகமான வார்த்தைகள்.
(12) கள்ளத்தனமான, சட்ட விரோதமான மற்றும் இயற்கைக்குமுரணான பாலுறவு
(13) அநீதியும் அடக்குமுறையும் சாபங்களை கொண்டுவருகின்றன
(14) உண்மையற்ற ஊழியர்கள்
(15) தேவனித்திலிருந்து வரும் சாபங்கள்
(16) தேவஊழியத்தை வஞ்சகமாக செய்தல்

## அத்தியாயம். 7 சாபங்கள் எப்படி செயல்படுகின்றன?

(1) குறிப்பிட்ட காலங்களில் திரும்பத்திரும்ப வரும் வியாதிகள்
(2) பலனற்ற விடுதலைகள்
(3) தானாக கருஅழிதல், மலட்டுத்தன்மை மற்றும் அகால மரணம்
(4) தாமதமான திருமணங்களும் உடைந்துபோன திருமணங்களும்
(5) தரித்திரம்
(6) அடிக்கடி நிகழும் விபத்துகள்
(7) மனநிலை பாதிப்பு

## அத்தியாயம். 8 சாபங்களிலிருந்து வெளிவரும் வழி

(1) விடுவிக்கப்பட வேண்டும் என்ற விருப்பம் வேண்டும்.
(2) மனந்திரும்பி, பாவங்களை அறிக்கையிட்டு, மனந்திரும்புங்கள்.
(3) ஆசாரியனைப்போல செயல்படுங்கள்
(4) உங்களுக்காகவும் முன்னோர்களுக்காகவும் மன்னிப்பு கேளுங்கள்
(5) நிபந்தனையின்றி பிறரை மன்னித்துவிடுங்கள்
(6) பழைய வம்சவாழ்க்கை ஏடுகளைப் புரட்டிப்பாருங்கள்
(7) தீயதொடர்புகள் அனைத்தையும் துண்டித்துவிடுங்கள்
(8) இயேசுகிறிஸ்துவின் நிவாரணபலியிலும், இரத்தத்திலும், அவர் செய்துமுடித்தவைகளிலும் விசுவாசம் வையுங்கள்
(9) திறப்பின் வாசலில் நில்லுங்கள்
(10) சிலரோடு சேர்ந்து ஒரு கூட்டுஜெபம் செய்யுங்கள்
(11) ஒருமனப்பட்டு ஜெபிக்கும் ஜெபம்
(12) உங்கள் மீதும் மக்கள் மீதும் ஆசீர்வாதத்தை கட்டளையிடுங்கள்

# அறிமுகம்

**பிரச்சினைக்கான காரணம் என்ன என்று அறியாமல் அநேகா் அவதிப்படுகின்றனா்; இன்னும் சிலா் பிரச்சினையைத்தீா்க்க எல்லா சிறந்தவழிகளையும் முயன்று பாா்த்தும் பலனில்லாமல் வேதனைபடுகின்றனா். இவா்களில் பெரும்பாலோா் மறுபடியும் பிறந்தவா்களும், ஆவியில் நிறைந்தவா்களுமாக இருக்கிறாா்கள். உங்களுக்கு வரவேண்டிய அற்புதங்களுக்கும் சாதனைகளுக்கும் தடையாக இருக்க சாத்தியமான காரியங்கள் எவைகள் என்பதையும் அவைகளிலிருந்து விடுதலை பெறுவது எப்படி என்பதையும் வெளிப்படுத்துவதே இப்புத்தகத்தின் மையநோக்கமாகும்.**

முதல் பதிப்பைவிடவும் இரண்டாம் பதிப்பானது அதிக தகவல்களைத் தருகிறது. உடன்படிக்கையின் வகைகளையும் சாபங்களை முடிவுக்கு கொண்டுவருவது எப்படி என்பது பற்றிய புதிய உள்ளுணா்வுகளை கிறிஸ்துவின் சரீரத்திற்கு கொடுக்கும்படி கா்த்தா் எனக்கு உதவி செய்தாா்.

இப்புத்தகத்தில் எழுதியவைகளை ஒழுங்கு படுத்தியதற்காகவும் இப்பணி சிறப்பாக அமைய வழங்கிய அனைத்து ஆலோசனைகளுக்காகவும் திருமதி. எமிசி அடிபோயேல் (Mrs.Yemisi Adebowale) அவா்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். கையெழுத்துப் பிரதிகளை படித்தும், ஆக்கபூா்வமான ஆலோசனைகளை அளித்தும் புத்தகத்தில் பெருமளவு தாக்கத்தை ஏற்பட என் மனைவி பேஷியன்ஸ் (Mrs.Patience) பெரும் பங்காற்றியுள்ளாள். தேவன் - இதை - செய்வாா் - ஊழியங்களைச் சோ்ந்த (God-Will-Do-It-Ministries) அனைத்து ஊழியா்களும் நிா்வாகிகளும் பங்காளிகளும் ஒவ்வொரு உறுப்பினா்களும், அவரது ஜெபங்களுக்காகவும் ஆதரவுக்காகவும் விசேஷமான நன்றிக்கு உரியவா் ஆவாா்கள். என்னோடு உண்மையாய் ஒத்துழைத்து இப்புத்தகத்தை ஆயத்தமாக்கிய என் அந்தரங்க காரியதரிசி செல்வி.டூப் ஓலாசுசி (Miss.Dupe Olasusi) நன்றிக்குரியவள். மேலும் ஊழியத்தில், கடந்த காலங்களிலெல்லாம் என்னோடு துணைநின்றதற்காகவும் மதிப்புரை எழுதியதற்காகவும் என் நண்பா் ரெவரன்ட். டி.கே. ஒனுஓகா (ONUOHA) அவா்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

தேவபிள்ளைகளை ஆசீா்வதிப்பதற்காக இப்புத்தகம் எழுதுவதற்கு தேவன் எனக்குத்தந்த வாய்ப்பிற்காக எல்லா மகிமையும் தேவனுக்கே செலுத்துகிறேன்.

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இதைப்படிக்கும்போது உங்களுக்கும் உங்களது பிரியமானவா்களுக்கும் இப்புத்தகம் ஒரு ஆசீா்வாதமாக இருக்கும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

ரேவ. ஜி. எ.ஃப். ஒயாா் (Rev.G.G.OYOR)
ஜனவரி 1994

# மதிப்புரை

ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையை, உடன்படிக்கைகளும் சாபங்களும் பாதிக்க முடியுமா என்பதைக்குறித்து கிறிஸ்தவர்களிடையே கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன.

உடன்படிக்கைகளும் (ஒப்பந்தங்களும்) சாபங்களும் அவிசுவாசிகளைத்தான் பாதிக்கும்; கிறிஸ்தவர்களை ஒருபோதும் பாதிக்காது என்று 2கொரிந்தியர் 5:17லில் எழுதப்பட்ட வசனமாகிய, “ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.” என்பதை ஆதாரமாக காட்டுகிறார்கள். ஆனால் “என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்” என்றும் வேதாகமம் சொல்கிறது (ஓசியா4: 6).

கிறிஸ்தவர்களும் கிறிஸ்தரல்லாதவரும் சந்திக்கும் அநேக பிரச்சினைகளுக்கு காரணம் அவர்களது குடும்பத்தின் மீது போடப்பட்ட சாபங்களும் அவர்களது முற்பிதாக்கள் அறிந்தோ அறியாமலோ செய்து கொண்ட உடன்படிக்கைகளின் (ஒப்பந்தங்களின்) விளைவுதான் என்பதை நான் செய்த சில ஆராய்ச்சிகளினால் அறிந்துகொண்டேன்.

பரிசுத்த ஒயார் அவர்களோடு சுமார் பத்து வருடங்கள் நான் மிக நெருக்கமாக ஊழியம் செய்திருப்பதால் அவரை நான் நன்கு அறிவேன். அவருடைய வாழ்க்கையானது எனக்கும் மற்றும் அநேகருக்கும் ஓர் ஆசீர்வாதமாக இருந்து வருகிறது. ஊழியத்திலிருக்கிற அவரது உறுதியான கொள்கையும் வெற்றியும் இன்னும் அநேகரை சவால்விட்டு எழுப்புவதாக இருக்கிறது,

உங்களுக்கு உதவியாய் இருக்கவே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகத்தில் சொல்லப்பட்ட விதிமுறைகளை கடைபிடிக்கும் போது உங்கள் மீதும் உங்களது குடும்பத்தார் மீதும் முன்னோரது உடன்படிக்கைகளாலும் சாபங்களாலும் நீங்கள் சந்தித்து வருகின்ற பிரச்சினைகளிலிருந்து விடுதலையாக்கப்படுவீர்கள்.

இப்புத்தகத்தை உங்களுக்கும் உங்களது நண்பர்களுக்கும் பரிந்துரை செய்கிறேன். உங்களது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுப்பதற்காக இன்னும் அதிகமான பிரதிகளை பெற்றுக்கொள்ளுங்கள், தேவ ஊழியர்களுக்கு மட்டுமல்ல ஒவ்வொருவருக்கும் இது விலைமதிப்பிடமுடியாத புத்தகமாகும். இதைப் படியுங்கள்; நன்கு தியானியுங்கள்; தீர்வே காணமுடியாததுபோல இருக்கும் பிரச்சினைகளிலிருந்தும் நீங்கள் விடுதலையாவீர்கள்.

ரெவ.டி.கே. ஒனுவோகா (Rev.D.K.Onuoha)
எமான்ஸிபேஷன் மினிஸ்டிரீஸ் (The Emancipation Ministries)
எனுகு (Enugu)

## முன்னுரை-1

### உடன்படிக்கைகளும் சாபங்களும்

தேவன் மனிதனை முதலில் உருவாக்கியபோது அவனுக்காக ஒரு உன்னதமான திட்டத்தை வைத்திருந்தார் என்பதை வேதாகமம் வெளிப்படுத்துகிறது. அதைக்குறித்து ஆதியாகமத்தின் முதல் அத்தியாயம் முழுவிபரத்தையும் கூறுகிறது. அதே அத்தியாயத்தில் தேவன் நிறைவேற்றிய திட்டங்களெல்லாம் நன்றாக இருந்தது என்பதை அவர் ஆறுமுறை கண்டதாக எழுதப்பட்டுள்ளது. இறுதியில் "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது . . ."

தேவன் உருவாக்கின எல்லாவற்றையும், கட்டுபாட்டில்வைத்து ஆளுகை செய்வதற்கு ஒருவன் தேவைப்பட்டதால் அவர் மனிதனைப் படைத்தார்.

தேவன் மனிதனை,

1) கனிகொடுக்கிறவனாக இருப்பதற்கும்
2) பலுகிப் பெருகுவதற்கும்
3) பூமியை நிரப்புவதற்கும்
4) சகலத்தையும் கீழ்படுத்துவதற்கும்
5) ஒவ்வொரு சுழ்நிலை மற்றும் சந்தர்ப்பத்தின் மீதும் ஆளுகை செய்யவும் சிருஷ்டித்தார்.

நான் சேவிக்கின்ற கர்த்தர் உயிரோடு இருப்பதால், உன்னையும் என்னையும் உருவாக்கிய அனைத்து காரணங்களும் நம் இரட்சகர் இயேசுவின் நாமத்தில் நம் நாட்களிலேயே நிறைவேற்றப்படும்.

ஆதியாகமத்தின் முதல் அத்தியாயத்தை நாம் கருத்தூன்றி படித்தோமானால், மனித வாழ்வின் பிரச்சினைகளுக்கு காரணம் தேவன் என்று நாம் ஒருபோதும் குற்றஞ்சாட்டமாட்டோம். மனிதன், வேதனையாலும், தோல்வியாலும், பலவீனத்தாலும், தரித்திரத்தாலும், உடல் ஊனத்தாலும் மற்றும் இது போன்ற அவலங்களால் அவதிப்படவேண்டும் - ஆளப்படவேண்டும் என்பது தேவனுடைய ஆதிகாலதிட்டம் அல்ல. நாம் தேவசாயலாகத்தான் உருவாக்கப்பட்டிருக்கிறோம்.

ஏவாளை வஞ்சித்த சாத்தான் இறுதியில் ஆதாமையும் ஏவாளையும் தேவனுக்கு கீழ்படியாதவர்களாக ஆக்கினான் என்று ஆதியாகமத்தின் மூன்றாம் அத்தியாயம் கூறுகிறது. தேவனுக்கு கீழ்படியாமலிருப்பது என்றால் சாத்தானுக்கு கீழ்படிதல் என்று பொருள். நீங்கள் யாருக்கு கீழ்படியவேண்டுமென்று எவரைத் தெரிந்துகொண்டீர்களோ அவருக்கு வேலைக்காரனாக இருக்கிறீர்கள் என்று வேதாகமம் தெளிவாக சொல்கிறது (ஆதியாகமம் 3:6). மனிதன் எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தி, அரசாளவேண்டும் என்பதே தேவனின் பரிபூரண திட்டமாயிருந்தது. ஆனால் அந்த அதிகாரத்தை மனிதன் சாத்தான் கையில் கொடுத்துவிட்டான். இவ்வாறாக மனிதன், பிசாசின் ஆளுகைக்கு உட்பட்டவனாக மாறினான். உண்மையைச் சொன்னால் நாம் கோபாக்கினையின் பிள்ளைகளாகவும் (எபேசியர் 2:3) பிசாசின்

பிள்ளையாகவும் (யோவான் 8:44) மாறினோம், பிசாசோ இப்பிரபஞ்சத்தின் தேவனாக மாறினான் (2கொரி 4:4).

இவ்வுலகை முற்றிலும் தேவன் அழிக்காமல் ஆதாம் ஏவாளின் சந்ததியாகிய நோவாவையும் அவன் குடும்பத்தாரையும் காப்பாற்றினார். இவ்வாறாக, மனிதநரம்பில் பாவஇரத்தமானது தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தது. நாம் பிறந்த பிசாசின் ராஜ்யத்திற்குள் கஷ்டங்களும் பாடுகளும் உண்டு. நமக்கு வரவேண்டிய பாக்கியமான இடத்தை ஆதாமும் ஏவாளும், பிசாசுக்கு விற்றுவிட்டதால், இயேசுகிறிஸ்துவின் மகிமையான நற்செய்தியின்ஒளி ஒவ்வொருவரையும் சென்றடையும்வரை இந்த இருளான துன்பநிலையே தொடரும். நாம் எல்லோரும் சாத்தானின் இராஜ்ஜியத்தில் பிறந்ததால்தான் குறிப்பிட்ட காலகட்டங்களில் திரும்பத்திரும்ப வரும் வியாதிகளும், பலவீனங்களும், பயங்களும், பல்வகையான குழப்பங்களும், வறுமைகளும், பாவங்களும், அசுத்தஆவிகளால் ஏற்படும் தவறுகளும் கொடுமைகளும் மற்றும் இது போன்ற சாத்தானுக்குரிய தாக்குதல்களும் சர்வ சாதாரணமான நிகழ்ச்சிகளாகிவிட்டன.

மேலே குறிப்பிட்ட உண்மைச் சம்பவங்களையும் அனுபவங்களையும் கருத்தில் கொண்டு, அன்றாட வாழ்வில் மக்களைச் சூழ்ந்திருக்கும் பிரச்சினை என்னும் மலையை இரண்டு பகுதிகளாக பகுத்து ஆராய்ந்துள்ளேன்.

இந்நாளில் அநேக மக்களின் முன் நிற்கும் மலைபோன்ற பிரச்சினைகளுக்கு ஆணிவேராக இருப்பது உடன்படிக்கைகளும் சாபங்களுந்தான்.

பலமுள்ள ஆண்களும் பெண்களும் கூட வேலையில்லாமல், எங்கு செல்கிறோம் என்ற உணர்வும் நோக்கமும் இல்லாமல் தெருவில் அலைந்து திரிவது (*பெல்லும் பிரேக்கும் இல்லாமல் அலைவது*) அன்றாட காட்சிகளாகிவிட்டன. இவர்களிடம் விசாரித்தோமானால், ‘‘முயன்றோம் தோற்றோம்; ஆகவே மீண்டும் முயன்றுபார்ப்பது தேவையற்றது என்று கருதுகிறோம்’’ என்று சுலபமாக கூறுவார்கள். இவர்களைப்பொருத்த அளவு இவர்களது உலகம் முடிந்துவிட்டது. மாபெரும் கால்பந்தாட்டப்போட்டி நடந்துகொண்டிருக்கும் போது ஒரு புறம் ஒதுங்கி அமர்ந்திருக்கும் பார்வையாளர்களைப்போல இருக்கிறார்கள். இவர்கள் மரணத்திற்காக காத்திருப்பதோடு, அது சீக்கிரம் வரட்டும் என்று ஜெபித்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர், பலஆண்டுகள் வேலைசெய்தும் பணமும்இல்லாமல் பலனும் இல்லாமல் காணப்படுகின்றனர். பலர் பலநாட்களாக மருத்துவமனைக்குள்ளே இருந்தும் வெளியேயிருந்தும் சிகிச்சை பெற்றும், குணமானதற்கான அறிகுறியின்றி, முன்னேற்றமடைவதற்குப்பதில் அவர்கள் நாளுக்கு நாள் நலிவடைந்து கொண்டிருக்கிறார்கள்.

நாம் அறிந்தும், அறியாமலும், தெளிந்த புத்தியில்லாமலும் பிசாசின் உலகத்தோடு உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறோம். ‘‘எங்கள் முன்னோர்கள் செய்த காரியங்களைத் தானே நாங்கள் செய்கிறோம். ஆகையால் அதில் பாவம் இல்லை.’’ என்று பலர் அவர்களது பாரம்பரிய பின்னணியை ஆதரித்துப் பேசுவது பழக்கமாகிவிட்டது. ‘‘எங்கள் முற்பிதாக்கள் இரத்தபலிகள் செலுத்தினார்கள் ஆகவே நாங்களும் செலுத்தியாகவேண்டும். எங்கள் முன்னோர்களைவிட நாங்கள் ஒன்றும் பெரியவர்களல்ல.’’ என்று சொல்லி நம் வாயை அடைக்க முயலும் இவர்கள், இருளின் சக்திகளுக்கு அவர்களை ஒப்புக்கொடுத்துவிட்டனர்.

‘உடன்படிக்கைகளும் சாபங்களும்’ என்றால் என்ன என்று கேட்பீர்கள். அதனை இரு பகுதிகளாகப் பிரித்து உங்களுக்கு விளக்கிடுவேன். முதல் பகுதியில் உடன்படிக்கை என்ற வார்த்தையை விளக்குவதோடு பலவகையான உடன்படிக்கைகளைக் குறித்தும் அதிலிருந்து விடுதலைபெற என்ன பரிகாரம் செய்யவேண்டும் என்பதையும் விவரிப்பேன். இரண்டாம் பகுதியில் சாபங்களைப்பற்றி விவரிப்பேன்.

## முன்னுரை-2

## கிறிஸ்தவர்களுக்கு விடுதலை தேவை

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது தெய்வீக சுகத்தையும் அற்புதத்தையும் எதிர்ப்பதைவிடவும் அதிகமாக விடுதலைசெய்தியின் கொள்கையை / போதனையை,எதிர்த்தும் புறக்கணித்தும் வருகிறது. ஆனால் கடந்த சில வருடங்களாக தெய்வீக சுகத்தையும் அற்புதங்களையும் அநேக வேதபண்டிதர்கள் படிப்படியாக ஏற்று வருகின்றனர்.(ஆனால் சிலர் தெய்வீக சுகமும் அற்புதங்களும் இயேசு கிறிஸ்துவின் காலத்தோடு முடிந்துவிட்டது என்று அறியாமையினாலே இன்னும் பிடிவாதமாக கூறிக்கொண்டிருக்கின்றனர்.) ஆனால் நான் தேவவார்த்தையைக் கற்றுக்கொண்டபோதும்,அவைகளைப் பயன்படுத்தி மனுக்குலம் சந்திக்கின்ற பலவகையான பிரச்சினைகளில் வெற்றியான விடுதலை கண்டபின்னர்,‘‘இவ்விடுதலைச் செய்தியினை அடிக்கடி போதித்தாக வேண்டும்’’ என்பதை புரிந்துகொண்டேன்.

விடுதலையைப்பற்றிய தகவலை அறிந்துகொள்வதற்கோ கற்றுக்கொடுப்பதற்கோ அதிகமான புத்தகங்கள் நம்மிடத்தில் இல்லை. ஜெபம், பரிசுத்தம், செழிப்பு, விசுவாசம், தெய்வீக சுகம், அற்புதம் போன்றவை பற்றிய அநேக புத்தகங்களும் ஒலிநாடாக்களும் எங்கும் காணப்படுவது போல விடுதலை பற்றிய செய்திகளை எங்கும் காணமுடிவதில்லை.ஆகவே,தேவ ஜனங்களை சுகப்படுத்துவதற்கும் விடுவிப்பதற்கும் தேவன் என்னை ஊழியத்திற்கு முதன் முறையாக அழைத்ததிலிருந்தே ( 1983 ஜூலை 28 ) அந்த உன்னத பணியை நிறைவேற்றுவதற்கு என்னை முழுமையாக ஆயத்தமாக்கி பலப்படுத்த வேண்டும் என்று கதறி வருகிறேன். இந்நாள் வரை பெற்ற வெற்றியின் அளவில் நான் திருப்தி அடையாவிட்டாலும் கூட இன்னும் நான் நடக்க வேண்டிய வழியில் என்னை நடத்துவதாக கர்த்தர் எனக்கு உறுதியளித்துள்ளார்.

ஆவியில் நிறைந்து அந்நியபாஷையை பேசுகிற ஒரு கிறிஸ்தவனுக்கும் விடுதலை தேவையா? இப்படி ஒரு கேள்வியை 1986ஆம் ஆண்டு ஜனவரி 26இல் எனுகுவிலுள்ள (Enugu, Uiversity of Nigeria) நைஜீரியா பல்கலைகழகத்தில் ஒரு பெண் என்னிடம் கேட்டாள். அக்கேள்விக்கு ‘ஆம்’ என்று பதிலளித்தேன். அதுவே இப்போதும் எனது பதிலாக இருக்கிறது. மறுபடியும் பிறக்கும்போது ஒரு கிறிஸ்தவனின் ஆவிதான் புதிதாக்கப்படுகிறது. ஆகவே அவன் முன்பு நேரடியாக செய்த உடன்படிக்கையாலோ,அல்லது அவனது பெற்றோர் அல்லது முன்னோரால் - அவன் சார்பாக செய்த உடன்படிக்கைகளாலோ பிசாசுகளோடுஏற்படுத்தப்பட்ட தொடர்புகளை – பந்தங்களைத் துண்டித்துவிடவேண்டும்.மேலும் அவனுக்கு மற்றவர்களோடு இருக்கிறஒவ்வொரு தெய்வீகமற்ற தொடர்புகளையும் -பந்தங்களையும் துண்டித்து விடவேண்டும்.***முதலாவது அதுபோன்ற தெய்வீகமற்ற உறவுகளை(பிணைப்புகளை) உடைத்துவிட்டு பின்னர் ஜெபிப்பதைத்தான் விடுதலை ஊழியம்*** *என அழைக்கிறார்கள்.*

நான் மறுபடியும் பிறந்தபோதே விடுதலை ஊழியத்திற்கென்று என்னை அர்ப்பணித்துவிட்டேன்.ஒரு மனிதன் விடுதலைபெறத்தேவையான அடிப்படைத்தகுதி மறுபடியும் பிறந்த அனுபவமே தவிரமதப்பற்றோ மதச்சடங்காச்சாரங்களோ அல்ல.மறுபடியும் பிறக்காத ஒரு மனிதனிடமிருந்து பிசாசுகளைத் துரத்தினால் அவனிடமிருந்து துரத்தப்பட்ட பிசாசு, அதைவிட பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடு கூட்டிக்கொண்டு வந்து, உட்புகுந்து அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த மனிதனுடைய முன்னிலையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும் என்று இயேசு சொல்லியிருக்கிறார்**(மத்தேயு12:43-45)**. கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து செலுத்த வேண்டிய அனைத்து விலைக்கிரயத்தையும்,

பரிகாரத்தையும் செய்து முடித்தபோதும் இரட்சிக்கப்பட்டவர்களில் அநேகர்,அவைகளில் இன்னும் சில காரியங்களில் விடுதலை பெறாமல் அவதிபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

சுமார் 500பேர்களுள்ள கிறிஸ்தவ ஜெபக்குழுவை நடத்தும் என் நண்பரும் ஊழியக்காரருமாகிய ஒருவரை விடுதலை-ஜெபத்திற்காக 1993 ஆண்டு பெப்ருவரி மாதம் என்னிடம் அழைத்து வந்திருந்தனர். அவரது சபைக்கு பிரசங்கிக்க பலமுறை அழைக்கப்பட்டு சென்றிருக்கிறேன். என்னை விடுதலை ஊழியத்திற்கு அழைத்த தேவன் எப்போதும் உண்மையுள்ளவராக இருந்து வருவதால்,இயேசு கிறிஸ்துவால் இரட்சிக்கவும், குணமாக்கவும், விடுவிக்கவும், செழிப்படையச் செய்யவும் முடியும் என்பதை நிரூபிக்கும் அநேக சாட்சிகளை அச்சபையில் கர்த்தர் ஏற்படுத்தினார் என்பதை அந்த சகோதரன் மூலமாக கேட்டிருக்கிறேன்.ஒருநாள் திடீரென்று அந்த அற்புதமான தேவ ஊழியரால் தூங்க முடியவில்லை; சாப்பிடமுடியவில்லை. சகோதரர்கள் ஜெபித்தபோது அதற்குக் காரணம் சரீரபிரகாரமானது அல்ல என்பதையும் விடுதலை ஊழியத்தினால் விடுவிக்கவேண்டிய ஆவிக்குரிய பிரச்சனை என்பதை புரிந்துகொண்டதால் என்னிடம் அழைத்து வந்தனர். நாங்கள் ஜெபிக்கத் துவங்கியதும்,“நாங்கள் பன்னிரண்டு பேராக இருக்கிறோம், அவனைவிட்டு விலக மாட்டோம்” என்று சொன்னவாறு அந்த ஊழியர்சத்தமிடத் துவங்கினார்.

இந்த ஊழியருக்கா இப்படி? என நான் வியப்படைந்தேன்! ஒருவேளை இவர் பாவஞ்செய்த காரணத்தால் பிசாசுகள் எதிர்த்து நிற்கின்றனவோ என்று எண்ணினேன். ஆகவே ‘தேவனே இவரிடம் இரக்கமாயிரும்,இவர் செய்த பாவங்களை தயவாய் மன்னியும்’ என்று நாங்கள் மன்றாடத்துவங்கினோம். ஆனால் பிசாசுகள் மறுபடியும் வியப்படையத்தக்க விதத்தில் பேசத்துவங்கின.“மிகவும் சின்ன வயதாக இருக்கும்போதோ அவனை வழிகாட்டி,பாதுகாத்து, ஆசீர்வதிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு நாங்கள் அவனுக்குள்ளே கொண்டு வரப்பட்டோம். கடந்த வருடங்களெல்லாம்அவனோடிருந்து அப்படி செய்துவந்தோம். ஆனால் அவன் இப்போது போகிறபோக்கைப் பார்த்தால் அவனுக்குள்ளே இனி நாங்கள் இருக்க முடியாது என நாங்கள் பயமுறுத்தப்படுவதால் இவனைக் கொல்வதற்கு தீர்மானித்தோம்.” என்று பேசின.

பிசாசுகள் சொல்வதை உடனே நானும் எனது குழுவிலுள்ள அனைவரும் புரிந்து கொண்டோம். அப்பிசாசுகள் அங்கே நெடுங்காலமாக இருக்கின்றன என்பதையும் அவைகளுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டு வந்திருப்பதால் அவைகளை நாங்கள் துரத்தமுடியாது என்று சொல்கின்றன என்பதையும் புரிந்துகொண்டோம். இறுதியில் நாங்கள் அவைகள் எல்லாவற்றையும் துரத்திவிட்டோம். தேவனுக்கு மகிமை உண்டாவதாக! அந்த சகோதரர் முற்றிலும் விடுதலை அடைந்த பின்னர், நடந்த காரியங்கள்அவரை வியப்படையச் செய்வதாக எங்களிடம் சொன்னார். எங்களை உதைக்கும்படி அந்த அசுத்த ஆவிகள் அவரைத் தூண்டின என்றும் ஆனால் அவரது உள்ளான இதயமோஇந்த ஊழியக்காரர்கள் மனவேதனையடைந்து தன்னை அப்படியே விட்டுவிட்டு விலகிப் போய்விடக்கூடாது என்று இதயத்தின் ஆழத்தில் ஜெபித்துக்கொண்டிருந்ததாக சொன்னார். என்ன நடக்கிறது என்ற உணர்விருந்தும் முரட்டுத்தனமாக செயல்படாமலிருக்கும் கட்டுப்பாடு அவருக்கு இல்லாமலிருந்தது என்றும் சொன்னார். அதாவது அசுத்த ஆவிகள் அவரது குரலை கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு எங்களிடம் பேசியது. அசுத்த ஆவிகள் அவரது கால்களையும் கைகளையும் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டதால்தான் அம்மனிதர் எங்களிடம் சண்டையிடத்துவங்கினார். விடுவிக்கப்பட்ட அவர் இப்பொழுது கர்த்தருக்காய் அக்கினியாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார்.

இந்நிகழ்ச்சியால்,‘ஒரு மனிதன் மறுபடியும் பிறந்தவுடன்விடுதலையை நாடித்தேடியாகவேண்டும்’ என்ற ஒரு பாடத்தை நான் கற்றுக்கொண்டதோடு,விடுதலை ஊழியத்தின் அவசியத்தைக் குறித்த எனது நம்பிக்கையும் இன்னும் பலப்பட்டது. ஒரு நபருடைய கடந்த காலவாழ்க்கையிலுள்ள ஒவ்வொரு அசுத்தங்களும் விடுதலை ஜெபத்தின்

மூலமாக அகற்றப்படுகின்றன. ஏனென்றால் வேத வசனத்தின்படி பார்த்தால் ஒவ்வொரு அவிசுவாசியிடமும் குறைந்த பட்சம் ஒரு பிசாசாவது இருக்கும்.

> ‘‘அக்கிமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்.’’
> (எபேசியர்2:1-2)

மனிதருக்குள் கிரியை செய்த இந்த ஆவி,அவர்களை ஏதாவது ஒரு தீமையைஅல்லது பல தீமைகளைச் செய்யும்படி வழி நடத்தியது. ‘அவர்களது பிதா (பிசாசு) பொய் சொல்வதால் அவர்களும் பொய் சொல்கிறார்கள்’ என்று இயேசு சில பரிசேயர்களைப் பார்த்து சொன்னார்.

> ‘‘நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதி முதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாய் இருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப்பேசுகிறான்.’’(யோவான் 8:44)

மறைந்த ரெவரன்ட் (திருமதி) விக்டோரியா ‘மீந்துபோன அடிமண்டி’என்ற ஒன்று இருப்பதையும் அது விடுதலை ஊழியத்தின் மூலம் அகற்றப் படவேண்டும் என்பதையும் நம்பினார்கள்.கிறிஸ்தவர்களாக இருந்தாலும் ஊழியக்காரர்களாக இருந்தாலும்கூட மனித பலவீனங்களும்,கவனக்குறைவும், அறியாமையும் அவர்களுக்குள் பிசாசு ஆதிக்கம் செய்வதற்கு ஏதுவான வாசலை திறக்கின்றது.திருமதி விக்டோரியாவின் கருத்தின்படி‘மறுபடியும் பிறந்த ஒரு தேவபிள்ளை, பிசாசையும் அவனது நிர்வாகஅமைப்பையும் கடிந்துகொண்டாலும்கூட அவைகள் அவனை எளிதில் செல்ல விடுவதில்லை. அதிலும் குறிப்பாக யாரெல்லாம் பிசாசிடம் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களையும் அவனிடம் ஒப்பந்தம் செய்துகொண்டவர்களையும் அல்லது அவன் ஒரு குறிப்பிட்ட பேய்தனமாக வேலைக்காக அவன் ஆயத்தபடுத்தி வருகிறவர்களையும் அல்லது பயன்படுத்திவருகிறவர்களையும் அல்லது ஒரு காலத்தில் பிசாசின் ஆதிக்கத்திற்குள்ளிருந்த சமுதாயத்தில் பிறந்தவர்களையும் அவன் எளிதில் விடுவதில்லை.இது சத்தியவசனம் கூறும் உண்மை என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுவருவதால் இதை நான் நம்புகிறேன்.

விக்கிரக வழிபாடுகள் . . .போன்றவற்றை விட்டுவிட்டு கர்த்தரிடம் வந்தவர்களுடைய கடந்தகால வாழ்விலுள்ள ‘அடிமண்டி’எஞ்சியிருப்பதால் அவைகள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டாக வேண்டும். மனம்மாறி கர்த்தரிடம் வந்தவருக்காக ஏறெடுக்கப்படும் ஜெபத்தில் அவர்களது சுகத்திற்காகவும் விடுதலைக்காகவும் கண்டிப்பாக ஜெபித்தாக வேண்டும். அந்நபரோடு கலந்துரையாடி பிசாசின் செல்வாக்கு அவரது வாழ்வில் எந்த அளவு இருக்கிறது என்பது தீர்மானிக்கப்படவேண்டும். அதன் பின்னரே அந்நபருக்கு விடுதலை ஊழியத்தை (தேவைபடுமானால்) செய்தாக வேண்டும். அப்போதுதான் அவரால் ஒரு உறுதியான அடித்தளத்தின் மேல் அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையை துவக்க முடியும்.

> ‘‘சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப்போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை

ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்து அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களைவிட்டுப் புறப்பட்டது. அநேகந்திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்த பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. சீமோன் என்று பேர்கொண்ட ஒரு மனுஷன் அந்தப் பட்டணத்திலே மாயவித்தைக்காரனாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப்பண்ணிக்கொண்டிருந்தான். தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி, சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவிகொடுத்து வந்தார்கள். அவன் அநேக காலமாய்த் தன்னுடைய மாயவித்தைகளினாலே அவர்களைப் பிரமிக்கப்பண்ணினதினால் அவனை மதித்து வந்தார்கள். தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரியஅற்புதங்களையும் கண்டு பிரமித்தான்.(அப்8:4-13)

கலப்படமில்லாத சுத்தமான தேவவார்த்தையை பிலிப்பு பிரசங்கித்தான். ஆகையினால் அதை உறுதிப்படுத்தும் அற்புதங்களும் அதிசயங்களும் நடந்தன. அநேகர் பாவங்களை விட்டு மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுத்தார்கள். அதில் ஒருவன் தான் சிமியோன். முன்னொரு காலத்தில் பிசாசுக்கு கீழ்படிந்த விக்கிரக ஆராதனைக்காரனாக இருந்தான். அவனுடைய மனந்திரும்புதல் உண்மையானது என்று பிலிப்பு நினைத்தான். ஆனால் அவனது வாழ்க்கையில் படிந்துகிடந்த ‘மண்டியை’ பற்றி யோசிப்பதற்கு மறந்துவிட்டான். பேதுருவும் யோவானும் பரிசுத்த ஆவியினால் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் ஊழியத்தை செய்தார்கள் என்று வேதாகமம் சொல்கிறது. ஆனால் சிமியோன் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளவில்லை. அவன் ஒருவேளை உபவாசித்து ஜெபித்து விசுவாசத்தை செயல்படுத்தியும் பார்த்தும் ஏனோபலன் கிடைக்காமல் இருந்திருக்கக் கூடும். வந்த அப்போஸ்தலர்கள் விரைவில் எருசலேம் திரும்பிச்சென்றுவிடக்கூடும் என்று அறிந்து,அவன் சுயபுத்திக்கு மிகநல்லகாரியம் போல் தோன்றிய ஒரு காரியத்தைச் செய்தான்.

‘‘அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து : நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி : தேவனுடைய வரத்தை பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்கு சீமோன்: நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான்.(அப் 8:18-24)

பிரியமானவர்களே! அந்த மனிதன் மறுபடியும் பிறந்தவன், பிலிப்புவினால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டவன். பிலிப்புவின் ஊழியமானது உண்மையிலேயே அபிஷேகம் பண்ணப்பட்டதாக இருந்தது.நற்செய்தியாளன் (சுவிசேஷகன்) என்று வேதாகமத்தில் அழைக்கப்படுகிற ஒரே ஒரு மனிதன் பிலிப்புதான். இதே பிலிப்புதான் எத்தியோப்பியனுக்கு ஊழியஞ்செய்யும்படி பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டவன். எந்த வாகனமும் இல்லாமல் அங்கிருந்து ஆசோத்திற்கு பரிசுத்த ஆவியினால் கொண்டு செல்லப்பட்டவன். (அப் 8:34-40)இந்த அனைத்து பின்னணியும்

பார்க்கும்போது,பிலிப்பு ஒரு ஆரோக்கியமான நற்செய்தியைத்தான் பிரசங்கித்திருப்பான் என்று என்னை நம்பச்செய்கிறது.

அந்த மனிதன் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் பேதுரு அவனைக்குறித்து,“நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன்.” என்று சொல்வதால் அவனுக்குள் அடிமட்டத்தில் மீந்திருந்த மண்டியானது விடுதலை ஜெபத்தின் மூலம் விடுவிக்கப்பட்டு இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்படவில்லை. அது மட்டுமல்ல,“உன் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாய் இராதபடியால்” என்றும் பேதுரு சுட்டிக் காட்டுகிறார். சமாரியாவிலிருந்த எவருக்கும் இக்காரியம் தெரியாமலிருந்தாலும் பரிசுத்த ஆவியானவர் அனைத்தையும் அறிந்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவரிடமிருந்து எதையும் மறைக்க முடியாது.

*விக்கிரகங்களுக்கு பணிவிடைசெய்தவர்களும், பிசாசுக்குப் பலியிட்டவைகளை சாப்பிட்டவர்களும்,சத்தியத்திற்கு புறம்பானபல்வகைமதக்குழுக்களைச் சேர்ந்திருந்தவர்களும் முதிர்ந்த, அனுபவமிக்க விடுதலை ஊழியர்களினால் விடுதலைஊழியத்தின் மூலம் இயேசுவின் இரத்தத்தினால் இவர்கள் கழுவப்படாமலிருந்தால் அப்படிப்பட்டவர்கள் சாட்சிசொல்லவோ, செய்தி கொடுக்கவோ, தீர்க்கதரிசனம் சொல்லவோ ஆரம்பிக்கக் கூடாது என்பது எனது கருத்தாகும்.*

விடுதலை ஊழியத்தின் மூலமாக அதிகமான விடுதலையைப்பெற்றாக வேண்டிய அநேகர் இன்று மறுபடியும் பிறந்த உடனேயேஅவர்களுக்கென்று சொந்தமாக, சுயமாக ஊழியத்தை துவக்கி விடுகின்றனர். இவர்கள் ஆவிக்குரிய ஒருவரது தலைமையின் கீழிருந்து – கண்காணிப்பிலிருந்து கற்றுக்கொள்வதற்கு சிறிது காலம் இவர்களுக்கு தேவையாக இருந்தும் இப்படி நடந்துகொள்கின்றனர்.

சில வருடங்களுக்கு முன்பு ஒரு ஊழியர் ஒரு சபையில் ஊழியம் செய்தபோது, அவர் யார் தலைமேலெல்லாம் கைவைத்து ஜெபித்தாரோ அவர்கள் ஒவ்வொருவரிடமும் பாலியல் இச்சை ஆசைகள் தீவிரமாக எழஆரம்பித்தனவாம். அப்படிப்பட்ட சிமியோன் போன்ற நற்சாட்சியில்லாத நபர் கைவைத்து ‘விடுதலையாக்கப்பட்ட’ மக்களை உண்மையாகவே விடுவிப்பதற்காக இன்னொரு விடுதலை ஊழியக்கூட்டத்தை ஏற்பாடுசெய்ய வேண்டியதாயிற்று. தேவன் நமக்கு உதவி செய்வாராக.

புதிதாக தேவனிடம் வந்தவர்களுக்கு அவர்களது முந்தியவாழ்க்கையில் பிசாசோடு இருக்கும் தொடர்புகளைக் குறித்து ஒன்றும் அறியாதவராக இருக்கின்றார்.ஆகையால் அந்த சத்துருவால் பயன்படுத்தப்பட்டுவரும் ஒரு அறியாமையின் கருவியாகக்கூட இருக்கக்கூடும். ஒரு நபர் மறுபடியும் பிறக்கும்போதுதான்,விடுதலைஊழியத்தினால் பலன் பெறுவதற்குதேவையான தகுதியை பெறுகிறார்.பொதுவாக பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள், உண்மையாகவே மனந்திரும்பி பரிசுத்தஆவியானவருக்கு தங்கள் இருதயத்தை திறந்து கொடுத்து தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியும்போது பிசாசுகள் வெளியேறிவிடும்.விசுவாசத்தில் வளரும்போது முந்தைய வாழ்க்கையால் வந்த பின்விளைவுகளும் ‘தேங்கிநிற்கும் மண்டிகளும்’ தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்தஆவியினாலும் கழுவப்பட்டுவிடும். ஆகவேதான் ஜெபிப்பதற்கும் சத்தியவசனத்தை நிதானமாய் பகுத்து படிப்பதற்கும் தேவனோடு ஐக்கியமாயிருப்பதற்கும் நற்செய்தி சொல்வதற்கும் போதுமான நேரத்தை செலவளிப்பவராக இருந்தால் விடுதலை ஊழியம் இல்லாமலேயே குறிப்பிடத்தக்க தீய பழக்கவழக்கங்கள் தானாகவே அவர்கள்வாழ்க்கைவிட்டு வெளியேறியிருப்பதைக் கண்டுகொள்வார்கள்.

ஆனால் சிலவகையான பிசாசுகள், அவைகளால் பாதிக்கப்பட்ட நபர்கள், விசுவாசத்தில் வளரவேண்டிய அளவுக்கு வளரமுடியாதபடி அவர்களை கட்டிவைத்து தடுக்கின்றன.

அப்படிப்பட்ட நபர்கள் யோவான் 11அதிகாரத்தில் சொல்லப்பட்ட உயிரோடு எழுந்த லாசருவைப் போன்றவர்கள். அவர்கள் ஜீவவார்த்தையைக் கேட்டு ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்தெழுந்தவர்கள், ஆனால் அவர்கள் இன்னும் பிரேதசீலைகளால் இறுக்கமாக கட்டப்பட்டவர்கள் போல் இருக்கின்றனர்.

> ‘‘இவைகளைச் சொன்னபின்பு லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது. அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார்.அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.’’ (யோவான் 11:43-45)

மரித்து அடக்கம் பண்ணப்பட்டிருந்த லாசரு,‘‘வெளியே வா’’ என்று சொல்லப்பட்ட ஜீவ வார்த்தையைக் கேட்டு அதற்கு கீழ்படிந்தான். உடனடியாகவே அவனுக்குள் ஜீவன் வந்துவிட்டது. தேவனுடைய ஜீவனால் அந்த கல்லறையைவிட்டு வெளியே வந்தான். ஆனால் அவன் இன்னும் கட்டப்பட்ட நிலையிலேயே இருந்தான். இயேசு அவரோடு இருந்தவர்களை நோக்கி,‘‘இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள்’’ என்றார். அதன் பின்னர்தான் யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். அதேபோல நாமும் இவ்வுலகத்திலிருந்தோம். நாம் நமது பாவங்களினால் மரித்தவர்களாகவும், ஒழுங்கீனங்களாலும் குடிப்பழக்கங்களினாலும் அல்லது குறி சொல்லுகிற வீடுகளுக்கு சென்றதாலும் அல்லது வேறு எதாவது தீய பழக்க வழக்கங்களிலும் அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் இருந்தோம். மகிமையான ஜீவ வாழ்க்கையின் நற்செய்தியை நாம் கேட்டபோது, இயேசுவைப் பின்பற்ற தீர்மானித்தோம். ஆகையால் நாம் தேவனால் ஜீவன் பெற்றவர்களாக மாறினோம். ஆனால் நாம் அங்கேயே நின்றுவிடக்கூடாது. விடுதலை ஜெபத்தினால் ‘கட்டவிழ்க்கப்படும்படி’ நம்மை நாமே விட்டுக்கொடுத்து பழைய தீய காரியங்களுக்கும் தீய விளைவுகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடவேண்டும். அறியாமையினாலோ அக்கரையற்றதன்மையாலோ பெருமையாலோ நாம் தேவன் வகுத்து வைத்திருக்கும் விதிமுறைகளுக்கும், கொள்கைகளுக்கும் உடன்பட மறுத்தால் அதனுடைய விளைவு பயங்கரமாயிருக்கும்.

# பாகம் - A
# உடன்படிக்கைகள்

## அத்தியாயம். 1

## உடன்படிக்கை என்றால் என்ன?

ஆக்ஸ்போர்டு அகராதியின்படி, ‘‘உடன்படிக்கை என்பது சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும் ஒரு ஒப்பந்தம் / உடன்பாடு’’ என்று பொருள். இருநபர்களிடையோ அல்லது இரண்டுக்கும் மேலான நபர்களிடையே அல்லது கட்சிகாரர்களிடையே செய்யப்பட்ட ஒரு

ஒழுங்குமுறையான - விதிமுறையான உடன்படிக்கையாகும். பொதுவாக, உடன்படிக்கை செய்துகொண்டதற்கான காரணங்களையும், நிபந்தனைகளையும் அதில் ஈடுபட்டவர்கள் திட்டமும் தெளிவுமாக அறிந்திருப்பார்கள்.

வேதாகம காலங்களில் உடன்படிக்கைகள் எப்படி நிறைவேற்றப்பட்டன என்பதை வேதாகமத்தில் பார்ப்போம். ஆதியாகமம் 31:50-52இல் யாக்கோபு, லாபான் என்ற இருதரப்பினரிடையே சமபாதுகாப்புக்காக உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. யோசுவா 9:15,21இல் யோசுவாவுக்கும் கிபியோனியருக்குமிடையே பாதுகாப்புக்காகவும் 1சாமுவேல் 18:3இல் தாவீதுக்கும் யோனத்தானுக்குமிடையே ஒருவருக்கொருவர் கொண்ட நட்பின் நிமித்தமாகவும் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டன.

## உடன்படிக்கையின் வகைகள்

அருகிலும் தொலைவிலும் உள்ள மக்களுக்கு பலகாலங்களாக ஊழியம் செய்ததால் நான் பெற்ற அனுபவ அறிவின்படி சுமார் எட்டுவகையான உடன்படிக்கைகள் உள்ளன என்று என்னால் சொல்ல முடியும். **அநேகமக்கள் ஏற்னெவே பிசாசோடு செய்துகொண்ட சில உடன்படிக்கைகளைக் குறித்த அறிவில்லாததால், அம்மக்களை வேதனைப்படுத்துவதற்கும், உபத்திரவப்படுத்துகிறதற்கும் சத்துரு அவைகளை சாதகமாக பயன்படுத்துகிறான்..**

### (1) மறைவான உடன்படிக்கைகள் (Hidden Covenants)

மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள் உட்பட அநேகர் இந்த மறைவான உடன்படிக்கையின் விளைவால் பலபாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். இது, மற்றவர்களது தூண்டுதலால் சொல்லும்படியும், செய்யும்படியும், அல்லது கையெழுத்திடும்படியும் வந்த விளைவால் ஏற்பட்டது. ஆனால் இந்த உடன்படிக்கையினால் நேரிடும் உண்மையான பின்விளைவுகளை முன்னதாக அறிந்திருந்தால் ஒருபோதும் இதில் உடன்பட்டிருக்க மாட்டார்கள். அவர்கள் ஏற்கெனவே செய்த காரியத்தாலும், வரும் விளைவுகள் என்னவென்று அறியாமலிருப்பதோடு, அதன் விளைவால் வாழ்வில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு முன்னமே தீயஉலகத்தோடு உடன்படிக்கை செய்துவிட்டனர்.

**கனவு காண்பேன் ஆனால் என்னால் கனவுகளை நினைவில் வைக்கமுடியாது என்று சொல்பவர்கள் பொதுவாக மறைவான உடன்படிக்கைக்குள் சிக்கிக்கொண்டவர்களாகவும் சிக்கிக்கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர்.** சிலவேளைகளில் ‘கனவு கண்டது’ அவர்களுக்குத் தெரியும். ஆனால் எதைக்குறித்து கண்டோம் என்பது பற்றி நினைவுபடுத்த முடிவதில்லை. 1990இல் 33வயதான ஒரு பெண் ஜெபிக்கவந்தாள். அவளது வாழ்க்கைக்கு ஒரு துணைவர் தேவையாக இருந்தது. அவளிடம் சிலகேள்விகள் கேட்டேன். அவள் கனவு காண்பது உண்டு, ஆனால் அக்கனவுகளில் எதையுமே அவளால் நினைவுக்கு கொண்டுவர முடியவில்லை என்பதை அறிந்து கொண்டேன். அவள் மீது பிசாசினால் போடப்பட்ட மறைவான முகத்திரையை கிழித்துவிட்டு அவளுக்கு எதிராக எதிராளி என்ன தந்திரத்தை வைத்திருக்கிறான் என்பதை தேவனே அவளுக்கு வெளிப்படுத்திகொடுக்கும்படி ஜெபிப்போம் என்று அவளிடம் சொன்னேன்.

**அவள் கண்களின் மீது கைகளைவைத்து அவள் முகத்தில் போடப்பட்ட பிசாசின் திரையைக் கிழித்தேன்.** அடுத்த முறை அவள் ஆலோசனை நாடி என்னிடம் வந்தபோது, ஒரு கனவு கண்டதாகச் சொன்னாள்; அதில் அவளுடைய கணவன் என்று உரிமைபாராட்டும் ஒரு மனிதனுக்கு பெற்றெடுத்த குழந்தையோடு அவள் ஒரு ஸ்தோத்திர கூட்டத்திற்கு செல்வதாக சொன்னாள். அந்த மனிதன் அவளை சட்டபூர்வமாக திருமணம் செய்து கொண்டதாக உரிமைபாராட்டினான் என்றும் அவளுக்காக அவன் எல்லாவற்றையும் ஆயத்தம் செய்து

வைத்திருப்பதாகவும் சட்டத்தின்படி அவள் அவனுடைய மனைவி என்று அவன் சொன்னதாகச் சொன்னாள். அவளுடைய பிரச்சினைக்குக் காரணமான வேர் கிடைத்துவிட்டது என்று அவளிடம் சொன்னேன். *கனவில் சட்டத்துக்கு புறம்பாக பிசாசோடு செய்யப்பட்ட திருமணத்தினால் ஏற்பட்ட மறைக்கப்பட்ட உடன்படிக்கையை நாங்கள் ஜெபித்து உடைத்தோம்; பின்னர் அவளுடைய உண்மையான, கணவன் மாம்சமானரீதியில் அவளிடத்திற்கு வருவானாக என்று நாங்கள் கட்டளையிட்டோம்.*

சில மாதங்கள் கழிந்தபின் அவள் வந்து சொன்ன காரியம் எனக்கு ஒரு வேடிக்கையாக இருந்தது. வல்லமையாகவும் வெற்றிகரமாகவும் ஊழியம் செய்யும் ஒரு சுவிசேஷகர் அவளை திருமணம் செய்யும் விருப்பத்தை அவளிடம் தெரிவித்திருப்பதாக கூறினாள். தேவனுடைய வழிநடத்துதலுக்காக நாங்கள் ஜெபித்தோம். தேவன் உறுதிப்படுத்தியபோது அத்திருமணத்திற்கு அவள் ஒத்துக்கொண்டாள். கர்த்தருக்கு மகிமை உண்டாகும்படி அவர்கள் இப்பொழுது திருமணம் செய்துகொண்டார்கள்.

நமக்குத் தெரியாத எதாவது ஒரு மறைவான உடன்படிக்கையின் மூலமாக நம் வாழ்க்கையின் எதாவது ஒரு பகுதியை பிசாசு பிடித்து வைத்திருந்தால், அதை தேவன் நமக்கு வெளிப்படுத்திக்கொடுக்கும்படி தேவனிடம் நாம் கேட்டுக்கொள்ளவேண்டியது அவசியமாகும். நாம் மனதார ஜெபத்தோடும் உபவாசத்தோடும் நாம் கேட்போமானால், நமது அற்புதங்களுக்கு தடையாயிருக்கிற எதையும் நம் தேவன் நமக்கு வெளிப்படுத்திக் காட்டுவார்.

## (2) கனவு மூலம் உடன்படிக்கைகள் (Dream Covenants)

> ‘‘சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.’’ 1தெசலோனிக்கேயர் 5:23

மனிதன் ஒரு ஆவியாயிருக்கிறான்; அவனுக்கு ஒரு ஆத்துமா உண்டு. அவன் சரீரத்திற்குள் வாழ்கிறான். ஆவிதான் உண்மையான மனிதன். அவன் மரிப்பதில்லை. சரீரம் ஓய்திருக்கும்போது கனவில் இந்த ஆவியே அங்குமிங்கும் போகிறது. கனவில் என்ன நடந்தாலும் அதை அலட்சியப்படுத்தாதபடி அக்கரையுடன் நிதானித்து அறிய வேண்டும். கண்ட கனவு எப்படிப்பட்டதோ, அதன் அடிப்படையில் அதனை ஜெபத்தின் மூலம் உடனே நிராகரிக்க வேண்டும் அல்லது அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சிலர் அவர்களை அறியாமலேயே கனவில் பிசாசோடு உடன்படிக்கை செய்து கொள்கின்றனர். பலவருடங்களுக்குமுன் இறந்துபோன தாத்தா கனவில் வந்து மக்களைக் குணமாக்க ஒரு குறிப்பிட்டவகை பச்சிலையை பயன்படுத்தச்சொன்னார் என்று சிலர் கூறலாம்; பணம் மறைத்துவைக்கப்பட்டிருந்த இடத்தை இறந்துபோன தாத்தா கனவில் வந்து சொன்னார் என்றும் சிலர் கூறலாம். விழித்தெழுந்த பின்னர் அந்த பச்சிலையால் நோய் குணமானதாலும், சொன்னபடியே பணம் பத்திரமாய் கிடைத்ததாலும் அப்பாவோ, தாத்தாவோ, சரீரபிரகாரமாக இறந்துபோனாலும் ஆவியில் அவர்களோடு இன்னும் வாழ்ந்துகொண்டும், அவர்களை கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற தவறான முடிவுக்கு வந்துவிடுகின்றனர்.

அருமை நண்பனே! கவனி! நீ பிசாசோடு உடன்படிக்கை செய்யவேண்டும் என்று உன்னை வஞ்சிப்பதற்காக அவன் என்னவேண்டுமென்றாலும் செய்வான். ஆம் அவனால் பணத்தை ஒரு இடத்தில் வைக்கமுடியும். அவனால் இறந்துபோன தாத்தா உருவத்திலோ அல்லது அப்பா உருவத்திலோ உன்முன் கனவில் தோன்றமுடியும். வேதாகமம் சொல்கிறது, ‘‘அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே. . . .’’ **(எபிரேயர் 9:27) (லூக்கா 19:19-31). செத்த மனிதன்**

**ஒருபோதும் பூமிக்குத் திரும்பிவந்து எந்த செய்தியையும் தெரிவிக்க முடியாது; ஆகவே சொப்பனத்தில் நீங்கள் பார்த்த நபர் இறந்துபோன உங்களுக்குத் தெரிந்த ஒருவரின் தோற்றத்தில் வந்த பிசாசாகும், சாத்தானோடு ஒரு உடன்படிக்கை செய்யும்படி அதனால் உங்களை வழிநடத்த முடியும்.**

1992 ஆண்டு பெப்ருவரி மாதத்தில் ஒரு சகோதரி என்னிடம் வந்து கண்ணீரோடு அவள் கதையைச் சொன்னாள். ஒரு மனிதனோடு அவளுக்கு திருமணம் நிச்சயம் பண்ணப்பட்டிருந்தது. திருமணத்திற்காக இருவரும் ஆயத்தமாகிக் கொண்டிருந்த நேரம். பொருட்கள் வாங்குவதற்காக, மணமகன் அவளை வெளிநாட்டிற்கு அழைத்துச் சென்றான். அவர்களிடமிருந்த பணத்தில் திருமணத்திற்குத் தேவையான பொருட்களையெல்லாம் வாங்கிக்கொண்டு வீடுவந்தாள். திருமணத்திற்கு சில நாட்களுக்கு முன் ஒரு மனிதன் கனவில் அவளிடம் வந்து, 'அந்த சகோதரனை மறந்துவிடு; நான் உன்னை நன்றாக கவனித்துக் கொள்வேன்.' என்று சொன்னான். அக்கனவில் அம்மனிதன் ஒரு திருமணமோதிரத்தை கொண்டுவந்து அவளது விரலில் போட்டான். உடனே அவள் விழித்துக் கொண்டதாகச் சொன்னாள். அப்பெண் மறுபடியும் பிறந்தவளாகவும் ஆவியில் நிறைந்தவளாகவும், ஒரு பெந்தேகோஸ்த் சபைக்கு போகிறவளாகவும் இருந்தாள். ஆனால் 'விடுதலை'யைப்பற்றி (deliverance) அவளுக்கு ஒன்றுமே தெரியாது, ஏனென்றால் அவளுடைய சபையில் அதை பிரசங்கிப்பதில்லை. இது என்னவகையான கனவு என்று ஆச்சரியப்பட்டு இதற்காக உண்மையாகவே ஜெபித்தாள். இதை அவளுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த மணமகனிடம் கூறினாள். கனவின்படி அவள் இன்னொருவருடைய மனைவியாக இருப்பதால் இன்னொருவருடைய மனைவியை திருமணம் செய்வது சரியில்லையே என்று கருதி திருமணத்தைக் குறித்து மறுபரிசீலனை செய்வதாக கூறினான். திருமணகாரியத்திற்காக எவ்வளவோ ஆயத்தம் செய்துவிட்டோம், பணமும் செலவளித்து விட்டோம் என்று அவனிடம் சொன்னாள். இன்னொருவருடைய மனைவியை மணமுடித்து உபத்திரவத்தில் மாட்டிக்கொள்வதைவிட பணத்தை இழப்பதுமேல் என்று அவன் அவளிடம் பதிலளித்தான். இதைக் கேட்டவுடனே பிரச்சினையை புரிந்துகொண்டு நான் அவளுக்கு விடுதலை ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். சாத்தானுடைய திருமணமோதிரமானது அவளது நான்காவது விரலைவிட்டு அகற்றப்படுவதாக என்று நான் கட்டளையிட்டதும் அந்த சகோதரி திடீரென்று கொடூரமாகவும் கட்டுக்கடங்காதவளாகவும் மாறிவிட்டாள். பல சகோதரர்களும் சகோதரிகளும் ஒனறுசேர்நது அவளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவேண்டியதாயிற்று. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இறுதியாக அவள் விடுதலையாக்கப்பட்டாள்.

அவளை கனவில் கலியாணம் செய்த மனிதன் யார் என்பது கேள்வி? பிசாசுதான் என்பது பதில். இதுபோன்ற ஒரு பிரச்சினை உங்களுக்கு உண்டென்றால் அந்த சகோதரியை விடுவித்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உங்களையும் விடுவித்து உங்களை ஆசீர்வதிப்பார்.

## (3) பாலுறவின் மூலம் உடன்படிக்கைகள் (Sexual covenants)

அநேகர் பிறநபரோடு ஒரு முறையோ அல்லது பலமுறையோ முறைகேடான பாலியல் பாவத்தில் ஈடுபட்டுவிட்டு இறுதியில் அந்நபரை திருமணம் செய்யாமல் விட்டுவிடுகின்றனர். இவ்வகையான பாவம் அப்படியொன்றும் பயங்கரமானதல்ல என்று தோன்றும்படி பலர் பலபெயர்களில் அழைக்கின்றனர். சில ஆண்கள் விபச்சாரிகளைச் சந்திக்க ஹோட்டல்களுக்குச் செல்கின்றனர். இன்னும் சிலர் பிறருடைய மனைவிகளோடு அல்லது கணவன்களோடு வேசித்தனம் செய்கின்றனர். இதனால் அவர்கள் தேவனுடைய உடன்படிக்கையை உடைக்கின்றனர் என்பதையோ தேவனுடைய உடன்படிக்கையை உடைக்கும்போது சாபங்களுக்கு வாசலை திறக்கிறார்கள் என்பதையோ கொஞ்சமும் அறியாமலிருக்கின்றனர்.

“ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள்.” ஆதி 4:1

“ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தால், பிறன் மனைவியோடே விபசாரம் செய்த அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலைசெய்யப்படக்கடவர்கள்.” லேவி 20:10

உடலுறவினால் ஒரு விசேஷமான இரத்தஉடன்படிக்கை ஏற்படுகிறது. திருமணம் செய்யாமல் உடலுறவு செய்யும்போது அது தேவனுக்கு முன்பாக பெரிய பாவமாக இருப்பதோடு இதில் ஈடுபட்டவர்கள் தேவசட்டத்தையும் மீறியவர்களாக இருக்கின்றனர். பாவத்திற்கு உயிர் இருப்பதால் அது வளருகிறது. இதனால்தான் வேசித்தனம் (adultery) அல்லது மணமாகாத ஆணும் பெண்ணும் உடலுறவு செய்யும் (fornication) பாவமானது கருக்கலைப்பு போன்ற பாவங்களுக்குள் வழிநடத்துகிறது. கருக்கலைப்பு என்பது ஒரு கொலையாகும், இவ்வுலகில் பிறக்க இருந்த ஒன்றுமறியாத அப்பாவிக்குழந்தையை சாகடிக்கும் ஒரு செய்கையாகும். ஒரு ஆண் அல்லது ஒரு பெண் யாரோடு ஒழுக்கக் கேடான உறவு வைத்திருந்தார்களோ அந்நபர் வருங்காலத்தில் இன்னொருவருக்கு கணவனாக அல்லது மனைவியாக ஆகப்போகிறார். ஆகவேதான் வேதாகமம் சொல்கிறது, “ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தால், பிறன் மனைவியோடே விபசாரம் செய்த அந்த விபச்சாரனும் அந்த விபசாரியும் கொலைசெய்யப் படக்கடவர்கள்.”

இயேசுகிறிஸ்துவை நம்முடைய சொந்த கர்த்தரும் இரட்சகருமாக நாம் ஏற்றுக்கொள்ளும் போது நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, *(நீதிமொழிகள் 28:13*இன்படி தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்*)* பரலோகத்திற்கு தகுதி பெற்றவராகிறோம். கர்த்தர் நம்மை சுத்தப்படுத்துகிறார். நம்மை மன்னித்துவிட்டதை நிரூபிப்பதற்காக அவருடைய ஆவியைக்கூட நமக்குத் தருகிறார். ஆனால் நாம் செய்த பாவங்களால் ஏற்பட்ட பலனையும் பக்கவிளைவுகளையும் நாம் உடைத்தாக வேண்டும். பாதிக்கப்பட்ட நபரால் சொல்லப்பட்ட சாபங்களை செயலற்றுப்போகச் செய்தாக வேண்டும். அத்தீய விளைவுகள் முறிக்கப்படும் வரை பிசாசு, ஒரு நபரின் அறியாமையை சாதகமாக்கி ஆதாயம் பெற்றுக்கொள்வதோடு வரவேண்டிய அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் வரவிடாமல் பிடித்து வைத்துக்கொண்டு உபத்திரவப்படுத்துவான்.

இக்கருத்தை ஆதரிக்கும் ஒரு மெய்யான கதாபாத்திரத்தை வேதாகமத்தில் பார்ப்போம். இக்காலத்தில் சிலர் விழுவது போல தாவீது ஒழுக்கக்கேடான பாவத்திற்குள் விழுந்தான். கர்த்தரை அறிகிறதற்கு முன்னர் வாழ்க்கையில் அநேகர் செய்வதுபோல் அவன் தேவனுடைய சட்டத்தை மீறினான். பாவஞ்செய்கிற எந்த நபர்மீதும் தேவன் சாபத்தை கூறுவதுபோல அவன் மீது தண்டனையை கூறினார். தேவன் என்ன சொன்னார் என்பதை பார்ப்போம்,

“இப்போதும் நீ என்னை அசட்டைபண்ணி, ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டபடியினால், பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான். நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் என்றார் என்று சொன்னான். அப்பொழுது தாவீது

நாத்தானிடத்தில்: நான் கர்த்தருக்கு விரோதமாயப் பாவஞ்செய்தேன் என்றான். நாத்தான் தாவீதை நோக்கி: நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச்செய்தார்.'' 2 சாமுவேல் 12:10-13

அருமை நண்பரே! தாவீது அவனுடைய பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்பினான். அவன் உண்மையாகவே மனந்திரும்பிவிட்டான் என்பதை தேவன் கண்டு, தீர்க்கதரிசியாகிய நாத்தான் மூலமாக 'நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்' அதாவது கர்த்தர் அவனை மன்னித்துவிட்டதாக பேசினார். அவர் அவனை மன்னித்துவிட்டார் என்று காட்டுவதற்காக, வேசித்தனத்தால் உருவான பிள்ளை இறந்த பின்னர், அவனுக்குப் பிறந்த பிள்ளையாகிய சாலமோனை இஸ்ரவேலின் ராஜாவாக ஆக்கியதோடு அவனது சந்ததியில் நம் கர்த்தர் இயேசு கிறிஸ்து அநேக தலைமுறையினருக்கு பின்னர் பிறந்தார். அவரது மாட்சிமையும் மன்னிப்பும் எவ்வளவு பெரிதாயிருக்கிறது! **ஆனால் தேவனுடைய சட்டத்தை மீறினதால் வந்த பலனையும் பின்விளைவுகளையும் தாவீது உடைத்துப்போட மறந்துவிட்டான்**. அதன் விளைவாக, அவனது பாவங்களை அறிக்கைசெய்யும்முன் அவன் மீது தேவனால் சொல்லப்பட்ட சாபங்களால் துன்பத்தை அனுபவித்தான்.

*அ) பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்.*

தாவீதின் மகனாகிய அப்சலோம் அவனுக்கு எதிராக ஆயுதம் தரித்தான். (2சாமுவேல்15)

*ஆ) உன் வீட்டிலே பொல்லாப்பு*

தாவீதின் மகன் அம்மோன் அவனது மகள் தாமாரை கற்பழித்தான் (2சாமுவேல் 13:14-17)

*இ) அங்கே அப்சலோம் சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக, தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசித்தான். (2சாமு16:21,22)*

அகித்தோப்பேல் அப்சலோமுக்கு ஆலோசனை கொடுத்தபடியே (2சாமு 15:16), அவன் அவனுடைய தகப்பனாரின் 10மறுமனையாட்டிகளுடன் வேசித்தனம் பண்ணினான் (2சாமு16:21,22) என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது.

இப்போது, தாவீது மனந்திரும்பி அவனுடைய பாவங்களை அறிக்கையிட்டுவிட்டான். அவனை மன்னித்துவிட்டதாக தேவனே சொன்னார் (2சாமு12:13). அப்படியானால் எங்கே தவறு நடந்துள்ளது?

நாம் உடன்படிக்கையில் தவறும்போது, மூன்று நபர்கள் காயப்படுகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்தியாகவேண்டும்.

அ) **தேவன்** - நாம் தேவனிடத்தில் பாவங்களை அறிக்கையிட்டு, மனந்திரும்பி, மீண்டும் அப்பாவத்தை நாடிச்செல்லமாட்டேன் என்று வாக்குறுதி செய்ய வேண்டும். அதுதான் பாவத்தைவிட்டு விலகுவதாகும். அதன் பின்னர் நாம் இரக்கம் பெறுகிறோம் (நீதி 28:13).

ஆ) **மனிதன்** - நாம் யாரை துன்புறுத்தினோமோ, அவமானப்படுத்தினோமோ, யாரைக்குறித்து கோள்சொன்னோமோ அவர்களிடம் மன்னிப்பு கேட்டாக வேண்டும். ஏற்பட்ட நஷ்டத்திற்கு சில வேளைகளில் ஈடாக கொஞ்சம் பணமும் கொடுத்தாக வேண்டும். அவர்களோடு சமாதானமாயிருக்க வேண்டும். (அப்24:16; மத் 5:23-26; எபி 12:14).

இ) **பிசாசு** – பின்விளைவுகளை உடைத்துப்போடுங்கள். நாம் செய்த தீமையால் ஏற்பட்ட பின் விளைவுகளை உடைத்துப்போட வேண்டும். நாம் கிறிஸ்தவர்களாக இருந்தோமோ இல்லையோ, அப்பாவத்தில் நம்மை வழிநடத்திய அப்பிசாசிடம் ஒரு தீய திட்டம் இருக்கிறது. நாம் கவனமாக இல்லாவிட்டால் அவன் போட்ட திட்டங்களின் படியே நடந்துவிடும் ஆகவேதான் அந்த பாவத்தால் ஏற்பட்ட பலன்களையும் பின்விளைவுகளையும் உடைத்தாக வேண்டும்.

ஒரு நபர், அபிஷேகிக்கப்பட்ட அவருடைய பாஸ்டரிடம் அல்லது விடுதலை ஊழியரிடம் அல்லது வேறு யாரிடமாவது பாவங்களை அறிக்கையிட்டபின், அவர்கள் ஜெபித்து, பிசாசிடம் 'அவன் கொண்டுவந்த சரக்குகளை எடுத்துக்கொண்டு வெளியேறும்படி கட்டளையிடும்போது', பின்விளைவுகளெல்லாம் பொதுவாக உடைக்கப்பட்டுவிடும். அந்நபரிடம் கிரியைசெய்ய ஆரம்பித்திருக்கும் 'குற்றஉணர்வை' உடைத்து பிசாசுகளிடமிருந்து அவனை விடுதலையாக்குவார்கள். இதை சீக்கிரமாக செய்யாவிட்டால் அந்த நபர் விரைவில் இச்சையுள்ளவராக மாறத் துவங்கக்கூடும் அல்லது ஆவிக்குரிய வாழ்வில் விழுந்துகொண்டும் எழுந்துகொண்டும் இருப்பார்.

> ''நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.'' யாக்கோபு 5:16

***இன்று தயவுசெய்து கவனித்து குறித்துக்கொள்ளுங்கள்.*** தேவனுக்கு எதிராக தீய காரியங்களை செய்யத்தூண்டுகிறவன் பிசாசுதான். அவன் பாவஞ்செய்யத் தூண்டும் முன்னதாகவே, அந்நபர் அவன் கையில் சிக்கினால், என்ன தீமைகளையெல்லாம் கட்டவிழ்த்துவிடலாம் என்று அவன் ஏற்கெனவே தீர்மானித்துவைத்திருப்பான்.

பொதுவாக, மக்கள் பாவம் செய்தபின், அப்பாவவாழ்க்கையை விட்டு வெளியேவர விரும்பி, தேவனிடம் பாவஅறிக்கை செய்து மனந்திரும்பி, அக்குறிப்பிட்ட பாவத்தை விட்டுவிடுகின்றனர், ஆனால் அப்பாவத்தால் பாதிக்கப்பட்ட நபரோடு அவர்கள் சமாதானம் செய்யமாட்டார்கள். இந்நபர் தேவனோடு மட்டும் சமாதானமாகிவிட்டான் ஆனால் இவனால் வஞ்சிக்கப்பட்டு வேலையிழந்த அந்த வாலிபபெண்ணின் வாழ்க்கைக்கு இவர் என்ன சொல்லப் போகிறார்? இவருடைய ஒழுங்கங்கெட்ட செய்கைகளின் விளைவை அவள் மட்டும் சுமக்கட்டும், நான் தேவனிடம் மன்னிப்பு கேட்டுவிட்டேன் என்று சொல்லி இன்னொரு புதிய பெண்ணை திருமணஞ்செய்ய நாடி ஓடுவது எப்படி நியாயமாகும்? ஒருவேளை இந்த ஏழைப்பெண் தன்னால் இயன்ற மட்டும் அவனது மேல்படிப்பிற்காக உதவியிருக்கக் கூடும். இப்பொழுது அவன் திடீரென்று டாக்டராகிய எனக்கு இவள் மனைவியாக வரத்தகுதியில்லை என்று அவன் படிப்புக்கு ஏற்ற இன்னொரு பெண்ணை திருமணம் செய்ய தீர்மானித்தால் எப்படி? மனிதனே! அவளை துன்பப்படுத்தியதற்காக அவளிடம் மன்னிப்பு கேட்டாயா? ஒருவேளை அவளைத் திருமணம் செய்வேன் என்று நிச்சயம் செய்து கொஞ்ச வருடங்கள் ஆகியிருக்கக்கூடும்; இந்த வருடங்களெல்லாம் உனக்கு உண்மையாக இருந்தவளைத் திடீரென்று விட்டுவிட்டு அவளைவிட அழகான இன்னொருத்தியை சந்தித்து எவ்வித காரணமும் இல்லாமல் முதலில் செய்த அந்த திருமணநிச்சயத்தை நிராகரிக்கலாமா? அவளிடம் மன்னிப்பு கேட்டு அவளோடு சமாதானமாயிருக்க முயன்றாயா?

1985 ஆம் ஆண்டு ஒரு சகோதரி என்னை ஜெபிக்க அழைத்தாள். மரிக்கும் தருவாயில் ஒரு மருத்துவமனையில் இருந்தாள். அவ்வேளையில் அவள் சென்ற சபை ஐக்கியத்திற்கு நான் தலைவராக இருந்தேன். அவள் மிகவும் சுகவீனமாக இருந்ததோடு அவளிருந்த நிலையைப் பார்த்தால், சீக்கிரம் இறந்து போய்விடுவாள் போலத்தோன்றியது. மரணமடையும் முன்னால் அவளுடைய வாழ்க்கையை சரிசெய்து கொள்ள அவள் விரும்பியதால் கடந்த காலத்தில் செய்த அனைத்து பாவங்களையும் அறிக்கை செய்தாள். அவள் செய்த முறைகேடான பாலியல் பாவத்தை அறிந்தால் சபையார் விரும்பமாட்டார்கள் என்று அறிந்து அதை இவ்வளவு

காலமாக மறைத்து வைத்திருந்தாள். ஆனால் இப்போதே அவளுக்கு சமாதானமில்லை; மனதில் ஒரு அமைதியில்லை; மரணம் அவளை நெருங்கிக்கொண்டிருந்தது. தேவனோடு ஒப்புரவாகி, சமாதானமாயிருக்கும்படி அவளை வழிநடத்தினேன். “சபை ஐக்கியத்தின் சார்பாக நான் உன்னை மன்னிக்கிறேன்” என்று அவளிடம் சொன்னேன். அதன் பின் பாலியல் பாவத்தால் ஏற்பட்ட விளைவுகளை உடைத்து அவளை இயேசுவின் இரத்தத்தால் மூடினேன். அருமை நண்பனே! அந்த எளிய ஜெபம் பலன்கொடுத்தது. வெகுசீக்கிரத்தில் அவள் குணமாகி மருத்துவமனையை விட்டு சென்றாள்.

பாலியல் பாவங்களின் விளைவாலும் அதை மறைத்ததாலும் ஏற்பட்ட நோய்களால் அநேக கிறிஸ்தவர்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பிரச்சினையின் மூலகாரணத்தை (ஆணிவேரை) அவர்கள் அறிந்திருந்தும் விடுதலைக்காக ஜெபிக்கவரும் போது அவர்கள் ஒருபோதும் முழு உண்மையையும் சொல்வதில்லை. பாதி உண்மை என்பது பொய்தான் *(பாதி கிணறைத்தாண்டி பயனில்லை).* விடுதலைபெறுவதற்கு குறுக்குவழி எதுவும் இல்லை. கடந்த காலத்தில் செய்த எல்லா பாவங்களையும் அறிக்கைசெய்து விட்டுவிடவேண்டும்; அவைகளால் ஏற்பட்ட பின்விளைவுளை உடைத்துப் போடவேண்டும்; குற்றவுணர்வை மனச்சாட்சியைவிட்டு நீக்க வேண்டும் *(சவுல் பாவமன்னிப்பின் நிச்சயத்தோடு பவுலாக பிரகாசித்தான்)*; உங்களது ஆசீர்வாதங்களையும் அற்புதங்களையும் எத்தடையுமில்லாமல் உங்கள் வாழ்க்கையில் பெருகும்படி கட்டவிழ்த்து விடுங்கள். சிலர் வாழ்க்கையில் எதுவுமே நன்றாக இல்லாவிட்டாலும் எல்லாம் நன்றாக இருக்கிறதாக சொல்லி அவர்களையே ஏமாற்றிக் கொள்கிறார்கள்.

## (4) தவறாக ஏற்பட்ட உடன்படிக்கைகள் (Mistakenly made covenants):

மக்கள் தவறுதலாக செய்துவிடும் உடன்படிக்கைகள் இருக்கின்றன. பிசாசோடு ஒரு உடன்படிக்கைக்குள் ஈடுபடவேண்டும் என்ற சிந்தையோ திட்டமோ இல்லாத சிலரும் இதில் சிக்கிக்கொள்கிறார்கள். ஆனால் அவர்களை அதில் ஈடுபடுத்தவேண்டும் என்று பிசாசு திட்டமிட்டான் ஆகவே என்ன நடந்தது என்று அவர்கள் அறிந்துகொள்ளும் முன்பே அதில் அவர்கள் பிடிபட்டுக்கொள்கின்றனர். சூனியஞ்செய்கிறவர்களுடைய ஆடைகளை அணிந்த அநேகர் அவர்களையே அறியாமல் சூனியக்காரர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். இயேசுவை ஏற்றுக் கொள்ளாத சிலர், பிசாசுக்கு ஏஜென்ட்டாக (கையாளாக) இருந்த நபரோடு கைகுலுக்கிக் கொண்டதால் பலவகையான உபத்திரங்களையும் பாடுகளையும் அனுபவிக்கும் நிலைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அந்த ஏஜென்ட் ஒரு உறவினராகவோ, நண்பராகவோ அல்லது தன்னுடன் படிக்கும், தன்னுடன் பணிசெய்கிறவராகவோ இருக்கக்கூடும். அந்நபர் இளவயதினராகவோ முதிர்வயதினராகவோ இருக்கக்கூடும். பிசாசுக்கு பிரயோஜனமானவன் என்று கருதப்படுகிறவனும் பிசாசுக்காக ஆட்களை வேலையில் சேர்ப்பதற்கும் மக்களின் வாழ்க்கையில் பேரழிவுகளை ஏற்படுத்துவதற்கும் இவன் விஷேச வல்லமையும் சாத்தானின் அபிஷேகமும் கொடுக்கப்பட்டவனாகவும் இருக்கிறான்.

1991இல் ஒரு பயங்கரமான பிரச்சிளையுள்ள நபரை விடுதலைக்குள் நடத்தினேன். இந்த இளைஞன் இப்பூமியில் நரகவேதனையை அனுபவித்தவனாக இருந்தான். சொந்தக்காரப் பெண்ணொருத்தி கொடுத்த ஆகாரத்தை சாப்பிடுவதற்கு அவன் மறுத்துவிட்டான். அந்த ஆகாரத்திலுள்ள இறைச்சித்துண்டையாவது ருசிபார்க்க வேண்டும் என்று அவனை அவள் வற்புறுத்தினாள். “உனக்குத் திருப்தியாக இருக்குமானால் இறைச்சித்துண்டையாவது சாப்பிட்டுப்பார்”என்று சொன்னாள். சாத்தானின் ஆலோசனைபடி ஆயத்தமாக்கப்பட்ட ஒரு விசேஷமான சூப் பாத்திரத்திலிருந்து இறைச்சித்துண்டை எடுத்துவந்து கொடுத்தாள். அந்த இளைஞன் அதைச்சாப்பிட்டான். அதே இரவில் அப்பெண் அவன் கனவில் வந்து, ‘நேரமாயிற்று’ என்றாள். ‘எதற்கு நேரமாயிற்று?’ என்றான். ‘கூட்டத்திற்கு’ என்றாள். ‘எந்த கூட்டத்திற்கு?’ என்றான். ‘சூனியக்காரர்களின் கூட்டத்திற்கு’ என்றாள். அந்த மனிதன் மறுப்பு தெரிவிக்க விரும்பினான் ஆனால் அவனால் முடியவில்லை காரணம் அந்த இறைச்சியை

சாப்பிட்டதால் அவன் ஏற்கெனவே அந்த குழுவோடு சேர்ந்துவிட்டான். ஒருவேளை நீங்கள் கேட்கலாம், ‘‘அவன் தெரியாமல் தானே அதை சாப்பிட்டான்.’’ சட்டம் தெரியாது என்று தப்பமுடியுமா? அந்த நடுஇரவுக்கூட்டத்திற்கு அவர்களை சந்திக்க வருவதற்கு ஒரு மறைவான உடன்படிக்கையின் அடையாளமான அந்த இறைச்சியை சாப்பிட்டுவிட்டான்.

ஆகவே அவர்கள் இருவரும் கூட்டத்திற்கு சென்றார்கள். அவர்கள் ஒரு பெரிய மரத்தில் ஏற வேண்டியிருந்தது. ஆனால் அந்த மனிதனால் ஏறமுடியவில்லை ஆகவே அவள் அவனுக்கு உதவிசெய்வதாக வாக்களித்தாள். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அந்த வாலிபனை முதுகில் சுமந்துகொண்டு அப்பெரிய மரத்தில் ஏறினாள். அந்த கூட்டத்தின் நடுவில் ஒரு பெண்பிள்ளை கொண்டுவரப்பட்டு கொல்லப்பட்டாள். அவன் அதைக்கண்டு கத்தியபோது அமைதியாக இருக்க வேண்டும் என்று சொன்னார்களாம். புத்துணர்வுக்காக அங்கு இருந்த அனைவரும் அப்பெண்பிள்ளையின் இரத்தத்தைக் குடித்தார்கள். அன்றிலிருந்து அக்கூட்டத்திற்கு அவனாகவே சென்றுவந்தானாம். அவனுக்கு உதவ வேறுயாரும் தேவைப்படவில்லையாம். இவ்வாறாக லூசிபர் அந்த வாலிபனை பயன்படுத்தத் துவங்கினான். அவன் ஏழையாகி தரித்திரத்தில் உழன்றான். பிசாசுக்கு ஏஜென்ட் ஆக இருக்கிறவர் எவரும் ஒரு அடிமையைப் போலிருப்பார்கள். பிசாசு ஒரு நபரை பயன்படுத்திவிட்டு, அந்நபர் ஏதாவது ஒரு காரியத்தில் தவறினால் அந்நபரை அழித்துவிடுவான். அவ்வாலிபன் பின்னர் கர்த்தர் இயேசுகிறிஸ்துவைச் சந்தித்து மறுபடியும் பிறந்தான். பிற சூனியக்காரருடைய ரகசியங்களை அவன் வெளிப்படுத்திவிடாமல் இருப்பதற்காக அவனை அழித்திட முடிவுசெய்தனர். அவ்வேளையில்தான் அவன் விடுதலைக்காக என்னிடம் வந்தான்.

அவனை விடுதலைக்குள் நடத்துவதற்கு அதிக நேரமாயிற்று. நாங்கள் மணிக்கணக்காக அசுத்தஆவிகளை கட்டுவதிலும் அவிழ்ப்பதிலும் செலவளித்தபின்னர் அவன் திடீரென்று பின்னால் நகர்ந்து நின்றுகொண்டு, ‘‘அந்த நீதிமானை (இயேசுகிறிஸ்துவை) மறந்துவிட்டு வந்துவிடு. நான் உனக்கு உயர்பதவியைத் தருவேன்’’ என்று சொல்லிக்கொண்டு சாத்தான் இங்கே நிற்கிறான் என்று சொன்னான். நான் அந்த பக்கம் போய்பார்த்தபோது அவன் பார்த்த சாத்தானை என்னால் காணமுடியவில்லை. கடந்த காலத்தில் அசுத்தஆவிகளோடு அவன் வைத்திருந்த ஒவ்வொரு தொடர்பையும் நான் அதிகாரத்துடன் துண்டித்தேன். அலைக்கழிப்படுவது குறைந்தாலும் முற்றிலும் தீரவில்லை. சில வேதாகம பகுதிகளின் வழியாக அவனை போதித்து நடத்திவிட்டு நாங்கள் ஒன்றுசேர்ந்து உபவாசித்து ஜெபித்தோம். தேவனுக்கு மகிமையாக அவன் இப்பொழுது முழுமையாக விடுதலையாகிவிட்டான். இபதான் என்ற பகுதியிலுள்ள என் ஆவிக்குரிய மிக நெருக்கமான பிள்ளைகளில் அவனும் ஒருவனாக இருக்கிறான். பிசாசுபிடித்தவர்களுக்கு விடுதலையளிக்கும் ஊழியத்தை எளிதாக செய்துவருகிறான். கடந்தகாலத்தில் எந்த பிசாசுகளோடு வேலைசெய்துவந்தானோ அவைகளின் பெயர்கள் அவனுக்கு தெரியுமாதலால் அவைகளுக்கு எதிராக இயேசுவின் நாமத்தை பயன்படுத்தும் போது அற்புதமான காரியங்கள் நடக்கின்றன. விடுதலை ஊழியம் செய்யும்படி பிசாசுபிடித்த பலரை அவன் பொறுப்பில் நான் கொடுத்தபோது அவன் அவ்வூழியத்தை வல்லமையாகவும் வெற்றியாகவும் செய்து நிறைவேற்றினான்.

இப்பொழுது கேள்வி என்னவென்றால், ‘‘ஒரு உறவுப்பெண் கொடுத்த ஒரு சாதாரண உணவானது எப்படி அவன் அறியாத, நினைத்திராத ஒரு உடன்படிக்கைக்குள் அவனை கட்டிப்போட்டு அவனை ஒரு சூனியக்காரனாக மாற்றியது?’’ சாத்தான் கேடான சிந்தையும் செயலும் கொண்டவன். **ஆகவேதான் நீங்கள் சாப்பிடும்முன் எந்த இடத்திலும் எந்த ஆகாரத்தையும் தயவு செய்து ஜெபித்து தூய்மைப்படுத்தி, பரிசுத்தப்படுத்தி அதை ஆசீர்வதித்து சாப்பிடுவது முக்கியமாகும்.** ‘‘என் தாய் தானே, என் சகோதரன் தானே . . .’’ என்று நீங்கள் சொல்லக்கூடும். அந்நபர் ஒருவேளை பிசாசின் ஏஜென்ட்டாக இருக்கக்கூடும். ஆகவே பாதுகாப்பைக் கருதி சாப்பிடும் முன் ஒவ்வொரு ஆகாரத்தையும் ஜெபித்து பரிசுத்தம் பண்ணவேண்டும். நானும் அப்படித்தான் செய்கிறேன்.

## (5) மதம் சார்ந்த உடன்படிக்கைகள் (Religious covenants)

சாத்தானின் சபைக்கு எதாவது ஒரு காரணமாகவோ, ஜெபிப்பதற்காகவோ, திருமண நிகழ்ச்சிக்காகவோ, நன்றி செலுத்துவதற்காகவோ அறுவடை அல்லது உபவாசத்திற்காகவோ, தூங்குவதற்காகவோ, ஆற்றில் மதசடங்காச்சாரமான குளியலுக்காகவோ அல்லது ஆராதிப்பதற்காகவோ சென்றிருந்தால் அல்லது முழுநேர அங்கத்தினராகவோ இருந்திருந்தால் இவர்கள் மதம்சாாந்த உடன்படிக்கைக்குள் இருக்கிறார்கள் என்று பொருள். அறியாமையினாலே அநேகர் இச்சபையில் அங்கத்தினராக மாறியுள்ளனர்.

அங்கு சென்ற பாவத்திற்காக மனந்திரும்புங்கள், ஜெபித்து உபவாசியுங்கள் என்று சொன்னால் அம்மாதிரி இடங்களும் சபைகள் தானே என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சபையைச் சார்ந்த மததலைவர்களில் ஒருவர் கொஞ்சகாலங்களுக்கு முன்பு தொலைகாட்சியில் சூனியக்காரர்களையும் தேவன் பயன்படுத்துகிறார் என்று அறிக்கையிட்டார். ஆனால் நான் அதை நம்புகிறதில்லை.

> ‘‘ இனி வீண் காணிக்கைகளைக் கொண்டுவரவேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது; . . . . ‘‘ - ஏசாயா 1:13

மனுக்குலத்தின் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து மரித்து தேவனுக்கும் நமக்குமிடையே சமாதானத்தை கொண்டுவந்த போதும்கூட இவ்வகையான மதப்பிரிவுகள் இன்னும் பிசாசுகளுக்கு தூபங்காட்டிக்கொண்டு அதை தேவனுக்கு செலுத்துவதாக நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விண்ணக அரசிக்கு அதாவது வானராக்கினிக்கு (சாத்தானுக்கு) தூபங்காட்டிக் கொண்டிருப்பதாக வேதாகமம் சொல்கிறது.

> ‘‘எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின்படியேயும் நாங்கள் செய்து, வானராக்கினிக்கு *(விண்ணக அரசிக்கு)* தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்ப்போம்; நாங்களும், எங்கள் பிதாக்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், யூதா பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் செய்ததுபோலவே செய்வோம்; அப்பொழுது நாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம். நாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டாமலும், அவளுக்குப்பானபலிகளை வார்க்காமலும் போனது முதற்கொண்டு, எல்லாம் எங்களுக்கு குறைவுபட்டது; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்துபோனோம்.’’ - எரேமியா 44:17,18

சபைகள் என்று அழைக்கப்படுகின்ற இப்படிப்பட்ட இடங்களுக்கோ வீடுகளுக்கோ சென்றவர்களையும், அங்கே அங்கத்தினாராக இருந்தபோது அறியாமையினாலே உடன்படிக்கை செய்துகொண்டவர்களையும் மதபிசாசுகளிடமிருந்தும், மதசம்பந்தமான உடன்படிக்கைகளிலிருந்தும் அவர்களை அவசரமாக விடுதலைசெய்ய வேண்டியது தேவையானது. அதற்கு அவர்கள் மறுத்தால் காரியங்கள் மிகவும் சிக்கலாகிவிடும். .

மற்றவர்கள் இலகுவாக பெற்றுக்கொள்கிற காரியங்களைக்கூட இப்படிப்பட்டவர்கள் உபவாசித்து ஜெபித்து பிசாசுகளை கட்டி துரத்தித்தான் பெற்றுக்கொள்வார்கள். 18ஆம் வசனத்தில் (விண்ணக அரசிக்கு= queen of heaven) <u>வானராக்கினிக்கு தூபங்காட்டுவதை நிறுத்திய உடனே அந்த மக்கள் துன்பப்படத் துவங்கினார்கள்</u> என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மக்கள் வாழ்நாள் முழுவதும் அவளையே வழிபடவேண்டும் என்றும் உண்மையான தேவனை வணங்கக்கூடாது என்று விண்ணக அரசி விரும்பினாள். <u>அப்படிப்பட்ட சபைகளில் சபையைவிட்டுப் போனவர்களின் பெயர்களை சொல்லி</u>

அழைப்பார்களாம், அப்போதுதான் அவர்களது பிசாசுகள் அவர்களை சபைக்கு திருப்பிக்கொண்டு வருமாம். அதாவது அந்த நபர்கள் செய்த உடன்படிக்கையானது பிசாசுகளை தொடர்ந்து நினைப்பூட்டிக்கொண்டே இருப்பதோடு உரிய நடவடிக்கை எடுக்கும்படி அவைகள் அவசரப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்டவர்கள் மறுபடியும் பிறக்காதவர்களாக இருந்தால் அவர்களது நிலைமை மிக மோசமாக இருக்கும், அவர்கள் மறுபடியும் பிறந்தவர்களாக இருந்தும் விடுதலை ஊழியத்தை அறியாதவர்களாக இருந்தால் அவர்களது வாழ்க்கையானது மிககரடுமுரடானபாதை போலிருக்கும். அவர்கள் விடுதலை பெற்றுக்கொள்வதற்காக செல்வார்களானால் அவர்களது பெயர்களானது அச்சபையாரின் பட்டியலிருந்து இயேசுவின் இரத்தத்தால் அழிக்கப்பட்டுவிடும்.

1993 ஆண்டு டிசம்பர் 30 வியாழன் அன்று அப்படிபட்ட வெண்வஸ்திரம் சபைகளால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்திற்கு விடுதலை ஊழியத்தை நடத்தினேன். அக்குடும்பத்தை பிசாசுகள் விடாபிடியாக உபத்திரவப்படுத்தியது. அவர்கள் மறுபடியும் பிறந்தபோது அவர்களது வாழ்க்கையே ஒரு ஸ்தம்பித்த நிலைக்கு வந்துவிட்டது. அக்குடும்பத்தில் நான்கு பிள்ளைகள். திருமணவயதை அடைந்தவர்களாக இருந்தும் எவரும் அவர்களை திருமணம் செய்ய முன்வரவில்லை. அந்த நான்குபேரில் மூவர் பட்டதாரிகளாக இருந்தும் அவர்களுக்கு வேலைகிடைக்கவில்லை. அவர்களது நிலைமை முற்றிலும் மோசமானதாக இருந்தது. சிலவேளைகளில் அவர்கள் ஒருநாளில் மூன்றுதடவை சாப்பிடுவதே ஆச்சரியமானதாக இருந்தது. அவர்கள் பிரச்சினைகள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்று அவர்களுக்குச் சொன்னேன். நான் ஜெபித்தேன் விடுதலை ஊழியம் செய்தேன், அவர்களை உபத்திரவப்படுத்தும்படி பிசாசின் சபையினரால் ஏவிவிடப்பட்ட (*demons of slavery and servitude*) அடிமைத்தனம் என்னும் பிசாசையையும் அடிமைத்தன மனப்பான்மைக்கு காரணமான பிசாசையையும் வறண்ட இடங்களுக்கு செல்லும்படி அதிகாரத்துடன் கட்டளையிட்டேன். வானராக்கினியால் (விண்ணக அரசியால்) அம்மக்களிடமிருந்து திருடப்பட்ட வருடங்களின் செழிப்பை பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்கு ஆசீர்வாத வாசல்கள் திறக்கப்படுவதாக என்று கட்டளையிட்டேன்.

> “நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப்புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன். நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள் என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை.” - யோவேல் 2:25,26

இக்குடும்பத்திற்காக ஜெபித்த இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர்கள் ஒரு புதிய நிசான் காரை எனது வீட்டிற்கு கொண்டுவந்தார்கள். யாரோ அவர்களுக்கு அந்த காரையும் பணத்தையும் அனுப்பியிருந்தார்கள். நம் தேவன் அதிசயமானவரல்லவா? அவர் ஜெபத்தைக் கேட்டு பதிலளிக்கிற தேவன். சிக்கலான சூழ்நிலைகளில் அடிக்கடி விடுதலைபெற்றுக்கொள்வது அவசியாக உள்ளது. பிசாசுகள் நம்வாழ்க்கையை கசப்பானதாக்க முயல்கிறான் ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம், நாம் சேவிக்கும் தேவன் - நம்மைவிட்டு விலகாத, நம்மை கைவிடாத தேவன், அதிலிருந்து தப்புவதற்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஒரு வழியை வைத்திருக்கிறார்.

## (6) பரம்பரையாக வரும் உடன்படிக்கைகள் (Inherited covenants)

> ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியை குற்றமற்றவனாகவிடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப்

பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும விசாரிக்கிறவர் என்று கூறினார்.”      யாத்திராகமம் 34:7

நம்மில் அநேகர் விக்கிரக்கங்களை வழிபட்ட குடும்பங்களில் வளர்ந்தவர்களாக இருப்பதால் விக்கிரகங்களுக்கு பலியிட்டு வணங்குகிறதைக் குறித்த செய்தி புதியதல்ல. இப்படி இரத்தபலி செலுத்தும் வேளையில் நமது பெற்றோர்கள், (தெரிந்தோ தெரியாமலோ) நம் வாழ்க்கையில் நாம் பாதுகாத்து வழிநடத்தப்பட வேண்டும் என்பதற்காக அறியாமையினாலே அப்பிசாசுகளோடு உடன்படிக்கை செய்திருப்பார்கள். சிலவேளைகளில் சமாதானத்தைத் தேடி, பாதுகாப்பைத்தேடி, குழந்தை பாக்கியம் கிடைப்பதற்காக, அல்லது வல்லமை, வெற்றி, புகழ், ஐசுவரியம் போன்றவைகள் கிடைப்பதற்காக நமது பெற்றோர்கள் ‘குறிசொல்கிற’ என்ற வீடுகளுக்கு சென்றிருப்பார்கள். அவர்களில் சிலர், நன்றி செலுத்தும்படி பிள்ளைகளை இங்கு கொண்டுவருவோம் என்றோ அல்லது அந்த பிள்ளையானது அப்பிசாசுக்கு வேலைசெய்யும் என்றோ அல்லது பாராட்டு தெரிவிக்கும் அடையாளமாக சில பொருட்களை அல்லது பலிகளை கொண்டுவருவோம் என்றோ (பொருத்தனை) வாக்கு கொடுத்திருப்பார்கள். இப்படிச்சொன்ன நமது பெற்றோர்கள் மறந்தார்களோ மறக்கவில்லையோ இப்பிசாசுகள் ஒருபோதும் மறப்பதில்லை, அந்த உடன்படிக்கையால் எற்பட்ட விளைவே அவர்களுடைய பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் கடந்துசெல்கிறது (தங்கள் பெற்றோர்களோ முன்னோர்களோ என்ன உடன்படிக்கை செய்தார்கள் என்பதை அறியாமலிருந்தாலும் கூட அவர்கள் அறியாமையால் விதைத்தது விளைகிறது, அப்பாவி சந்ததியார் அத்துன்பத்தை அறுவடை செய்துகொண்டிருக்கிறார்கள்) அவர்களுக்காகவோ, அவர்களது குடும்பங்களின் சார்பாகவோ அல்லது பிள்ளைகளின் சார்பாகவோ அவர்கள் செய்த உடன்படிக்கையினால் அல்லது ஏற்படுத்திய அசுத்த ஆவிகளோடுள்ள உறவினால் அக்குடும்பத்திற்கு அல்லது பிள்ளைகளுக்கு நற்பலனோ அல்லது தீமையான பலனோ வருகிறது.

1993 டிசம்பர் மாதம் வெகுதொலைவிலுள்ள ஒரு கூட்டத்திற்கு ஊழியஞ்செய்ய சென்றிருந்தேன். மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணை விடுவிக்கும்படி கொண்டுவந்திருந்தார்கள். அப்பெண்ணின் விடுதலைக்காக அநேக தேவ ஊழியர்களிடம் கொண்டு சென்றதாக சொன்னார்கள். அவர்களில் சிலர் எனக்கு தெரிந்த அபிஷேகம் பண்ணப்பட்ட தேவஊழியர்கள். நான் இவர்களிடம் விசாரித்தபோது இவர்கள் தெரிவித்த தகவல்கள் கொஞ்சமாகத்தான் இருந்தது. அதன் பின் நாங்கள் ஜெபித்தோம். எந்த ஒரு பெரிய வித்தியாசமும் தெரியவில்லை. அவள் குழந்தையை பெற்றெடுத்த சில நாட்களுக்குப் பின்னர்தான் மனநிலை பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்ற அறிகுறியை முதன்முறையாக உணரமுடிந்தது. அவள் குழந்தை அழுதுகொண்டே இருந்தாலும் அதைக்குறித்து அக்கரையின்றி இருப்பாள். குழந்தையை எடுப்பதற்கும் குளிப்பாட்டுவதற்கும்கூட மறுத்துவிடுவாள். வற்புறுத்தாவிட்டால் அவள் ஒருபோதும் குழந்தையைக் குளிப்பாட்ட மாட்டாள். சிலவேளை அவள் சாப்பிடமாட்டாள். ஒரு நாள் காலையில் அவளிடம் ‘சாப்பிட்டாயா என்று கேட்டேன்?’. கொஞ்சநேரம் அமைதியாக இருந்தபின், ‘அப்படித்தான் நினைக்கிறேன். ஆனால் என்னால் உறுதியாக கூறமுடியவில்லை.’ என்றாள். அவள் சாப்பிட்டாளா இல்லையா என்பதில்கூட அவளுக்கு நிச்சமில்லை. அவள் இன்னொரு உலகத்தில் இருந்தாள். சிலவேளைகளில் நாம் பேசினாலும் எந்த பதிலும் சொல்லாமல் இருப்பாள்.

ஜெபித்தபின்னரும் விடுதலைஊழியம் செய்தபின்னரும் கூட அவளது மனவியாதி எங்களுக்கு எதிராக சவால் விட்டுக்கொண்டிருந்ததுபோல இருந்ததால் அவர்களது குடும்பப் பின்னணியைக் குறித்து தேவையான அனைத்து விபரங்களையும் சொல்ல வேண்டும் என்று அவளுடைய தாயாரிடம் கேட்டுக் கொண்டேன். அதன் பின்னர் தான் அவர்கள் வாய்திறந்து இக்கதையைச் சொன்னார்கள். அப்பெண்ணின் தாத்தா அப்பகுதியின் இனத்தலைவராக முன்பு இருந்தார் என்றும் அவர் மனக்குழப்பத்தால் அவதிப்பட்டதாகவும் அதனால் அக்கிராமத்து மக்களும், கிராமதலைவரை (ஒரு குறிப்பிட்ட இனத்துக்கு ராஜாவை) நியமிக்கும் அதிகாரம் பெற்றவர்களும் அவரை அங்குள்ள ஒரு பிசாசுகோயிலுக்கு எடுத்துச் சென்றார்களாம்.

அப்பிசாசு, ‘இரண்டுகாரியங்களில் ஒன்றை நீ தெரிந்துகொள். ஒன்றில் நீ ராஜாவாக இருப்பாய். ஆனால் இம்மனநோயானது உனது பிள்ளைகளுக்கும் உன் பேரப்பிள்ளைகளுக்கும் கடத்திவிடப்படும் அல்லது நீ ராஜாவாக மாட்டாய் ஆனால் மனநோயிலிருந்து குணமாவாய்’ என்று சொன்னதாம். அந்த மனிதனோ ராஜாவாகும் வாய்ப்பை தெரிந்துகொண்டார். ஆகவே ஆவிக்குரிய ரீதியில் அந்த மனவியாதியானது அவனது வருங்கால சந்ததியினருக்கு கடத்திவிடப்பட்டது.

அதன்பின்னர் அவனது வாழ்க்கையில் பிள்ளைகள் பிறந்தனர், பிள்ளைகளுக்கும் பிள்ளைகள் பிறந்தனர். ஆனால் அந்த புண்ணியஸ்தலத்திலுள்ள பிசாசோடு அவர் செய்துகொண்ட உடன்படிக்கை இன்னும் நிலைநிற்கிறது. அன்று அவர் நீண்ட காலம் ராஜாவாக இருந்தாலும் அவரால் ஏற்பட்ட மனக்குழப்பமானது அவரின் பிள்ளைகள் எங்கு சென்றாலும் தொடர்ந்தது. <u>பெண்கள், திருமணம் செய்துகொண்டவர்களோடு எவ்வளவு கடினமாக முயன்றும் தொடர்ந்து வாழ முடியாதபடி இறுதியில் அவர்கள் துரத்திவிடப்பட்டனர். அவருடைய பிள்ளைகளில் சிலர் பிள்ளையற்றவர்களாக இருந்தனர், சிலர் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். நான்குவருடத்தில் படிக்கவேண்டிய பட்டப்படிப்பை முடிப்பதற்கு பத்து வருடங்களாயிற்று</u> என்று அவருடைய பிள்ளைகளில் ஒருவன் சொன்னான்.

ஆனால் <u>அவர்கள் எல்லாரும் கிறிஸ்தவர்கள்</u>, அவர்கள் அறியாத ஒரு காரியத்திற்காக ஏன் அவர்கள் துன்பம் அனுபவிக்கவேண்டும்? <u>மனநிலைசரியில்லாமல் மாறிய அப்பெண் ஒரு பட்டதாரி, மறுபடியும் பிறந்தவள், ஆவியில் நிறைந்தவள், ஆனால் முன்னோர்கள் செய்த உடன்படிக்கையின் விளைவால் பிசாசுகள் அவளை ஒரு பணயக்கைதியாக பிடித்துவைத்திருந்தன</u>. நான்கு மாதங்களாக அவளுடைய கணவனால் அவளுடன் உரையாட முடியவில்லை. ஏனென்றால் அவள் இன்னொரு உலகத்திலிருந்தாள். மனநிலைபாதிப்புக்கான மூலகாரணம் அவளது குடும்பப் பின்னணியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதால் அவளுக்கு விடுதலை ஊழியம்செய்வது மிக எளிதாயிற்று. இயேசுவின் நாமத்திலிருக்கும் வல்லமையால் நான் ஜெபித்து அவளுடைய ஐம்புலன்களும் ஆதிநிலையை அடைவதற்கு கட்டளையிட்டேன். இயேசுகிறிஸ்துவை மரணத்திலிருந்து எழுப்பிய வல்லமையானது அனைத்து முன்னோர்களின் உடன்படிக்கைகளை கட்டுப்பாட்டில் வைத்திருந்த பரம்பரை ஆவியை (*spirit of inheritance*) உடைத்துப்போட்டது. அதுமட்டுமல்லாமல் எப்பொழுதும் அவளை அழைத்துக்கொண்டிருந்த ஒரு சத்தமானது விடுதலை ஜெபம் செய்த பிறகு நின்று விட்டது என்றும் சாட்சிசொன்னாள். அப்படிப்பட்ட சத்தங்கள் உங்கள் வாழ்க்கையிலும் இயேசுவின் நாமத்தில் நிறுத்தப்படும். இப்பொழுது அவள் நன்றாக இருக்கிறாள். **மனநிலை மருத்துமனைகளால் சரிசெய்ய முடியாத நோயை இயேசு சுலபமாக சரிசெய்தார்.** கர்த்தருக்கு துதி உண்டாவதாக.

ஒரு நபர் இயேசுகிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட உடனேயே முன்னோர்கள் மூலமாக ஏற்படுத்தப்பட்ட அனைத்து உடன்படிக்கைகளுக்கும் முடிவுகட்டுவதற்கு அந்நபர் விடுதலை ஜெபத்திற்கு சென்றாக வேண்டும். அதற்கு மறுப்புதெரிவிப்பாரானால் அந்நபர் பின்னடைவுகளையும் சிரமங்களையும் பின்மாற்றங்களையும் சந்தித்து வேதனைப்படக்கூடும். சிலநபர்களின் வாழ்க்கையில், அவர்கள் மறுபடிபிறந்தவர்களோ இல்லையோ, அவர்கள் சார்பாக முன்னோர்களால் செய்யப்பட்ட உடன்படிக்கையின்படி அப்பிசாசுகள் செய்யவேண்டிய பங்கை நிறைவேற்றுகின்றன. பிசாசுகளோடு நம் பெற்றோர்கள் செய்துகொண்ட எல்லா உடன்படிக்கைகளையும் தொடர்புகளையும் நிராகரித்துவிடுவது தேவையானதாகும். எவ்வளவு சீக்கிரத்தில் நிராகரிக்கின்றோமோ அவ்வளவு நல்லதாகும்.

## (7) இரத்த உடன்படிக்கைகள் (Blood Covenants)

கடந்தகாலத்தில் அநேகர் தெரிந்தோ தெரியாமலோ இரத்த உடன்படிக்கை செய்தவர்களாக இருக்கின்றனர். காதலிக்கின்ற சிலர் ஒருவருக்கொருவர் திருமணஞ்செய்வதை உறுதிப்படுத்திக்கொள்ளும்படியும் *(இரத்தக்கையெழுத்து போட்டுக்கொள்கின்றனர்)* சிலர்

அவர்களது உறவை உறுதிப்படுத்திக்கொள்ளும்படி இருவரது இரத்தத்தையும் பானத்தில் கலந்து பின்னர் இருவரும் சேர்ந்து குடிக்கின்றனர். ஊசியை பயன்படுத்தியோ அல்லது கூரான கருவியைப் பயன்படுத்தியோ சரீரத்திலிருந்து இரத்தம் எடுக்கின்றனர். சில நேரங்களில் இந்த இரத்தமானது மதுபானத்தில் கலக்கப்பட்டு அதை இருவரும் பகிர்ந்து கொள்கின்றனர். நான் உடைத்திருக்கிற அனைத்து உடன்படிக்கைகளிலும் இரத்த உடன்படிக்கைதான் உடைப்பதற்கு மிக கடினமான ஒன்று என்பதை கண்டறிந்திருக்கிறேன். ஏனென்றால் இந்த உடன்படிக்கையில் ஜீவனிருக்கிறது. இரத்தமே ஜீவனாயிருக்கிறது.

1991ஆண்டில் ஒரு வாலிப பெண் விடுதலைநாடி என்னிடம் ஜெபிக்க வந்திருந்தாள். மேற்கு ஆப்பிரிக்கா பள்ளிகூட சான்றிதழ் பெறுவதற்காக ஒரு தேர்வை எழுதியிருந்தாள். மூன்று முறை எழுதியிருந்தாள் மூன்று முறையும் அவள் விடை எழுதியதாள்கள் சான்றிதழ் வழங்கும் அலுவலகத்திற்கு செல்லவில்லை. மர்மமான முறையில் மறைந்து விடும். அவள் ஒரு தேவனுடைய பிள்ளை, மறுபடியும் பிறந்தவள், பரிசுத்த ஆவியினால் நிரம்பியவள், ஆனால் அவளாலோ அவளுடைய பாஸ்டராலோ என்ன நடக்கிறது என்பதை விவரிக்க முடியவில்லை. அவள் தேர்வு எழுதினாள் என்பதற்கான ஆதாரங்கள் இருந்தன ஆனால் அவள் கொடுத்த விடைத்தாள்களோ காணாமல் போய்விடும். அவள் ஏமாற்றமடைந்திருந்த பட்டியலில் திடீரென்று அவளிடம் எவ்வித அக்கரையும் காட்டாத அவளுடைய தகப்பனாரும் உண்டு. தன் மகள் தன்னோடு ‘ஜு ஜு’ வீட்டிற்குப்போய் பிரச்சினைக்கான காரணம் என்ன என்று விசாரிக்க வரமறுத்ததால் அவர் எரிச்சலடைந்திருந்தார். நான் அவளுடன் சேர்ந்து ஜெபித்தேன் ஆனால் ஏதும் நிகழவில்லை. மரணத்தின் ஆவி அவளை தொடர்ந்து வேட்டையாட முயன்றது. வேகமாக செல்லும் வாகனத்திற்கு குறுக்கே ஓடணும்போல அவளுக்கு உணர்வுவரும். பிசாசுகள் அவளை எப்படியாவது அழித்துவிட வேண்டுமென்றிருந்தன. ஒருமுறை ஒரு சிறப்பு உபவாசக்கூட்டத்தை நியமித்து நாங்கள் உபவாசித்து ஜெபித்தோம் அதுவும் தோல்வியடைந்தது.

ஒருநாள், அவள் என்னிடம் வந்து இரட்சிக்கப்படும் முன் ஒரு ஆண் நண்பனோடு (பாய் பிரண்ட்) இரத்த உடன்படிக்கை செய்துகொண்டதாகவும், ஒருமுறை மறுபடியும் பிறந்துவிட்டால் பழையவை எல்லாம் ஒழிந்துபோய்விடும் என்று நினைத்ததாகச் சொன்னாள். ஆனால் அந்த பையன் அவளிடம் வந்து நீ நேரத்தைக் வீணடித்துக்கொண்டிருக்கிறாய். அவள் அவனிடம் திரும்பிபோகாவிட்டால், அவர்களது இரத்தத்தை குடிப்பதற்கு முன்னால் ஒருவருக்கொருவர் சத்தியம் பண்ணிக்கொண்ட உடன்படிக்கையானது அவளை பாதிக்கும் என்று சொல்லியிருக்கிறான். அவளது பிரச்சினையை அவளுடைய சபையிலுள்ள வாலிபகுழுவின் தலைவரிடம் சொன்னபோது அவர் ரெவரெண்ட் ஒயாரைப் போய் பார் என்று ஆலோசனை அளித்ததாக சொன்னாள். “ஆனால் உங்களிடம் சொன்ன இக்கதையை அவரிடம் சொல்லவில்லை.” என்றாள். அந்த சகோதரர் என்னை பார்ப்பதற்கு அவளை உற்சாகப்படுத்தியதால் இறுதியில் என்னிடம் வந்திருக்கிறாள். மேலும் கீழும் நோக்கிவிட்டு என் மனபாரத்தை அவளிடம் சொன்னேன். **விடுதலை பெறுவதற்காக வரும் மக்களில் அநேகர் விடுதலைபெறுவதற்கு ஆயத்தமில்லாதவர்களாக இருக்கிறார்கள். முக்கியமான தகவல்களை வெளியே சொல்லாமல் மறைத்துவைத்துக்கொள்கிறார்கள் அப்போதுதானே நீதிமான்களைப்போல அவர்களைக் காட்டிக்கொள்ள முடியும். இன்னும் சிலர் விடுதலை ஊழியர் உண்மையிலேயே ‘ஆவிக்குரியவர்’தானா என்று கண்டுபிடிக்க விரும்புகின்றனர். தீர்க்கதரிசனம் சொன்னாலோ ஏதாவது தரிசனம் பார்த்து சொன்னாலோ அல்லது அவர்கள் கடந்த காலத்தில் செய்தவைகளையெல்லாம் சொன்னால்தான் ஆவிக்குரியஊழியர் என்று கருதுகின்றனர்.** தேவன் இம்மாதிரி செயல்படமாட்டார். அவர் அச்சடித்ததுபோல எப்போதும் ஒரே மாதிரியாக செய்கிறவர் அல்ல. மாயஜாலம் செய்கிறவர்களைப் போல உங்களால் நினைத்தநேரம் ஒரு தரிசனத்தை பார்க்கமுடியாது அல்லது உங்கள் விருப்பம்போல தீர்க்கதரிசனம் சொல்லவும் முடியாது. உங்கள் விருப்பப்படியல்ல, பரிசுத்தஆவியானவர் தமது சித்தத்தின்படி உங்களுக்கு தரிசனங்களையும் தீர்க்கதரிசனங்களையும் கொடுக்கிறார். பரிசுத்த தேவன் சில நபர்களின் பிரச்சினைக்கான காரணத்தை எனக்கு வெளிப்படுத்திய தருணங்கள்

உண்டு, அதுவே பெரும்பாலான பிரச்சினைக்கு தீர்வை அளிக்கும் திறவுகோல்களாக இருந்தன. ஆனால் தேவனிடமிருந்து ஒரு வெளிப்பாடும் வராதபோது, விடுதலைநாடி வந்தவர்கள் பயனுள்ள தகவலை மறைத்துவைக்க தீர்மானித்திருந்தால் நாம் எவ்வளவு ஜெபித்தாலும் அதனால் ஆக்கப்பூர்வமான எப்பலனும் நேரிடாது.

மீண்டும் அந்த இளம்பெண்ணின் காரியத்தைப் பார்ப்போம். அதுவரை அவள் மறைத்துவைத்திருந்த தகவலை வெளிப்படுத்தியதன் மூலம் அவளது பிரச்சினையின் காரணத்தை அறிந்து கொண்டேன். அவளுடன் ஜெபித்து, இயேசுவின் நாமத்தில் அந்த இரத்த உடன்படிக்கையை உடைத்துப்போட்டேன். இப்பொழுது அவள் உயர்கல்வி கற்று வருகிறாள். நமது கர்த்தர் என்றும் நல்லவர்.

### (8) மந்திரவாத உடன்படிக்கைகள் (Occultic Covenants)

வேலையில் பதவி உயர்வை அடைவதற்கும், செல்வ செழிப்பும், பெயரும், புகழும், பாதுகாப்பும் பெறுவதற்காக ஒரு நபர் மாந்திரீக, வசியமுறைகளை பயன்படுத்தியிருந்தாலும் அவ்வகை இரகசிய குழுக்களில் அங்கம் வகித்திருந்தாலும் இவ்வகை உடன்படிக்கை ஏற்படுகிறது. பொதுவாக இவ்வகை இயக்கத்தில் இணையும்போது, ‘ஒருபோதும் அக்குழுவைவிட்டு விலகமாட்டோம் என்றும் அக்கூட்டத்தாரின் ரகசியங்களை வெளிப்படுத்த மாட்டோம் என்றும் அதை மீறினால் அநேக சாபங்கள் அவர்கள்மீது கூறப்படும்’ என்றும் அவர்கள் இரத்தத்தை பயன்படுத்தி உறுதிமொழி எடுத்துக்கொண்டு உறுப்பினராக மாறுகிறார்கள். இம்மாந்திரீக குழுவைவிட்டு விலகுபவர்கள் உடனே விடுதலை ஊழியத்தை நாடி செல்லாமலிருந்தால் அவர்களது வாழ்க்கையே ஏமாற்றந்தான். இவர்களில் சிலர் பச்சையான பருந்தையும், பாம்பையும், ஆயிரங்கால் அட்டையையும் சாப்பிட்டவர்களாகவும் அல்லது ஏதாவது ஒன்றையும் பலியிட்டவர்களாகவும் இருப்பார்கள். வாய்ப்பு கிடைத்தால் எதிராளியான பிசாசு என்ன செய்வான் என்பதை குறித்து நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது.

1991 ஆண்டில் ஒருபெண் அவளுடைய கணவனை என்னிடத்தில் அழைத்துவந்தாள். அவன் பொறுப்புணர்வற்ற சுபாவமுள்ளவன். அவன் மனைவிதான் குடும்பத்தின் எல்லா தேவைகளையும் சந்திப்பதும் அவனுக்கு உணவளிப்பதும், பிள்ளைகளுடைய படிப்புத் தேவைகளுக்கான பணம் செலவளிப்பதும் மற்றும் வீட்டை நடத்தும் பொறுப்பையும் கவனித்து வந்தாள். எவ்வளவு பணம் கணவனுக்கு கிடைத்தாலும் அவன் வீட்டிற்கு வரும்போது அவனது மனைவிக்கு கொடுப்பதற்கு அவனிடம் ஒன்றும் மிஞ்சி இருக்காது, எப்படி செலவாயிற்று என்றும் அவனால் சொல்லவும் தெரியாது. அவன் சம்பளம் வாங்கி வீட்டிற்கு ஒருபோதும் கொண்டுவந்ததில்லை அந்த அளவுக்கு அவன் நிலைமை மோசமாக இருந்தது. அந்தப் பணத்தைவைத்து அவன் என்னதான் செய்கிறான் என்று நாம் கேட்கக்கூடும். ஒன்றுமில்லை! அவனுடைய அறிக்கையின்படி அவனது மனைவி பிரயாணத்திற்கு பணம்கொடுக்காததால் ஒரே நாளில் வாங்கின சம்பளமெல்லாம் செலவளிந்துவிட்டதால் மறுபடியும் வேலைக்கு செல்லமுடியாததால் அவனை வேலையை விட்டு நீக்கிவிட்டார்களாம். அவன் எங்கே வேலைக்கு சென்றாலும் இதே கதைதான்! ஒரு நாள் அவர் தகப்பனார் 4000 நைரா (நைஜீரியா நாட்டு பணம்) கொடுத்தார். அவன் வீட்டிற்கு வரும்போது கையில் ஒன்றுமில்லையாம்.

இவைகளையெல்லாம் அழுதுகொண்டே அவனுடைய மனைவி என்னிடம் சொன்னாள். இதே நிலைமை தொடரவேண்டுமென்று விரும்புகிறாயா என்று அவனிடம் கேட்டேன். “பாவங்களை எல்லாம் அறிக்கையிட்டு அழுது ஆண்டவரிடம் ஜெபம்பண்ணிய பிறகும் இந்த பிரச்சினை இன்னும் தொடர்கிறது என்றான். பொறுப்புள்ளவனாக வாழவிரும்புகிறேன் ஆனால் ஏன் இப்படி பிசாசினால் உபத்திரவப்படுத்தப்படுகிறேன் என்று எனக்குப் புரியவில்லை” என்றான். அதன் பிறகுதான் அவனிடம் இப்பிரச்சினை எப்படி துவங்கியது என்று கேட்டேன். அவன் விளக்கிச்சொன்னான். ஓசுன் (Osun) மாநிலத்திலுள்ள இலி-இ.்.பி (Ile-Ife) என்ற இடத்திலிருக்கும் போது ஒரு மாந்திரீக இரகசிய குழுவில் சேர்ந்ததாகச் சொன்னான். சேர்ந்த

முதல் நாள் அவன் தலைமேல் ஒரு புறாவானது கொல்லப்பட்டது என்றும், சில மந்திரத்தை சொல்லிக்கொண்டே அவனது முகத்தை கழுவுதற்காக அப்புறாவின் இரத்தம் பயன்படுத்தப்பட்டது என்றும் சொன்னான். இப்பொழுது கர்த்தர் இயேசுகிறிஸ்துவை அவனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு மறுபடியும் பிறந்தவனாக இருந்தாலும் கடந்தகாலத்தில் அவன் செய்துகொண்ட மாந்திரீக உடன்படிக்கைகளால் அவனால் பணத்தை சரியாக பயன்படுத்த முடியாதபடி பிசாசுகள் அவனை உபத்திரவப்படுத்திக் கொண்டிருக்கின்றன. **நான் அவனை பாவஅறிக்கை ஜெபம் செய்யவைத்து, அந்த மாந்திரீக குழுவோடு அவனுக்கு இருந்த தொடர்பையும், அக்குழுவோடு சேர உடன்படிக்கை பண்ணும்போது அவன் சொன்ன உறுதிமொழிகளையும் பொருத்தனைகளையும் ரத்துசெய்யச்செய்தேன்.** நாங்கள் ஒன்றாக ஜெபித்தோம், பிசாசுகள் வெளியேறின, முற்றிலும் அவன் விடுதலைபெற்றவனாகிவிட்டான். ஏதோ ஒன்று அவனைவிட்டு வெளியேறியதை உணர்ந்ததாக அவன் பிறகு சொன்னான். இருவாரங்களுக்குப்பின் அவர்களது சபையிலுள்ள ஒரு சகோதரர் அவருடைய கம்பெனியில் அவரை ஒரு (மானேஜராக) மேலாளராக நியமித்தார். இன்று அவர் ஒரு கிளைச்சபையில் (பாஸ்டராக) மேய்ப்பராக இருக்கிறார். மற்றவர்களை விடுதலைசெய்வதில் கர்த்தர் அவரை வல்லமையாக பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். கர்த்தருக்கு துதி உண்டாவதாக.

## உடன்படிக்கைகள் எப்படி வருகின்றன?

உடன்படிக்கைகள் பல்வேறு பரிமாணங்களில் வருகின்றன (Covenants come in different dimensions). அது நேர்முகமானதாகவோ (தெய்வீகமானதாகவோ) எதிர்மறையானதாகவோ (தெய்வீகமற்றதாகவோ) இருக்கக் கூடும்; இரத்தத்துடனோ அல்லது இரத்தமில்லாமலோ கூட உடன்படிக்கை செய்யப்படும். ஆனால் ஆதியாகமம் 15ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டதுபோல இரத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை பொதுவாக மிக பலமுள்ளதாக இருக்கிறது. உடன்படிக்கை செய்வது பெருமளவில் நமது பாரம்பரியவழக்கத்தில் காணப்படுகின்றன. கணவன் மனைவிக்கு இடையே, சகோதரர்களுக்கிடையே, உறவினர்களுக்கிடையே, நண்பர்களுக்கிடையே மற்றும் முன்னொரு காலத்தில் சத்துருக்களாக இருந்தவர்களிடையேயும் உடன்படிக்கை செய்யப்படக்கூடும்.

ஒரு உடன்படிக்கை செய்யும்போது, அதில் ஒருவர் சொல்வது,

> “இப்போதும் இதோ, உமது கையிலிருக்கிறோம், உம்முடைய பார்வைக்கு நன்மையும் நியாயமுமாய்த் தோன்றுகிறபடி எங்களுக்குச்செய்யும் என்றார்கள்.”
>
> - யோசுவா 9:25

எங்கே இரத்தத்தினால் உடன்படிக்கைசெய்யப்படுகிறதோ அதற்கு அர்த்தம்:

1. இந்த நபரின் ஜீவன் இன்னொரு நபரின் கையிலிருப்பதால் இவர் இறந்தால் அதற்கு அவன்தான் பொறுப்பெடுத்தாக வேண்டும்
2. “நீ எனக்குரியவன் நான் உனக்குரியவன்” என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்கிறார்கள். அதாவது ஒரு அற்பணிப்பான பலிசெலுத்தியதுபோல, உன் வாழ்க்கை இனி உனக்குரியதல்ல என்ற அர்த்தத்தில் சொல்லிக்கொள்கிறார்கள்.
3. நல்லதோ கெட்டதோ உங்கள் வருங்கால முழுவாழ்க்கையையும் இன்னொருவரது கரத்தில் சமர்பித்துவிட்டீர்கள் என்று அர்த்தம்.

வேறுபலவழிகளிலும் உடன்படிக்கைகள் ஒப்பந்தம் செய்யப்படுகின்றன:

1) உடலுறவு மூலமாக

2) பாரம்பரியங்கள் மற்றும் சடங்காச்சாரங்கள் மூலமாக: பால்காய்ப்பு போன்ற துவக்கவிழாவில் செய்யப்படும் சடங்காச்சாரங்கள் மூலமாக, இனத்தலைவனாக அமர்த்துவதற்காக செய்யப்படும் சமயச்சடங்காச்சாரங்கள் மூலமாக, பெயர் சூட்டும் சடங்குகள் மூலமாக, விருத்தசேனம் செய்யும் சமயச்சடங்குகள் மூலமாக
3) சாப்பாட்டு பழக்கவழக்கங்கள் மூலமாக
4) மீறுதலினால்
5) பிற கலாச்சார செயல்பாடுகள் மூலமாக

## (1) பாலுறவு மூலம் (Through Sexual intercourse)

வாலிப வயதினருக்கு உற்சாகமான காரியமாக இருப்பதால் சற்று விளக்கமாக எழுதுகிறேன். அநேகர் எளிதில் பரவசப்பட்டு உடலுறவின் மூலம் இவ்வகை உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்கின்றனர் (இவ்வுடன்படிக்கையின் விளைவை அறியாமல்).

ஒரு ஆணும் இன்னொரு பெண்ணும் சேர்ந்துபடுக்கும்போது, இருவரும் இவ்வாறாக சொல்லுகிறார்கள்: “நாம் ஒருவரையொருவர் திருமணம் செய்துகொள்ளும் அளவுக்கு மிக நேசமாக இருக்கிறோம். ஆகவே உடலுறவு மூலமாய் நம் உறவை உறுதிப்படுத்துகிறோம்.” இதுபோன்ற உடன்படிக்கைகள் பிற உடன்படிக்கைகளைவிட வலுவானது. ஒரு ஆண் அல்லது ஒரு பெண் தங்களுடைய விலையேறப்பெற்ற பொக்கிஷத்தை பகிர்ந்துகொள்வதைவிட அதிக ஆழமான உறவு இருக்கமுடியுமா?

எல்லாம் சொல்லிவிட்டு செய்துவிட்டு இறுதியில் அவனோ அல்லது அவளோ அறிந்தோ அறியாமலோ இந்த உறவை முறிப்பார்களானால் அந்த நபர்கள் அவர்களை அறியாமலே அவர்கள் மீது சாபத்தை வருவித்துக்கொள்கிறார்கள்.. இந்நிலையை சரிபடுத்துவதற்காக நமக்காக சாபமான இயேசுகிறிஸ்துவை அழைக்காவிட்டால் பாதிக்கப்பட்டவரின் பரிதாப நிலைமையை கற்பனை செய்துகொள்ளலாம்.

## (2) பழக்கவழக்கங்கள் மற்றும் பாரம்பரியங்கள் (Through Customs & traditions)

இவ்வகையான உடன்படிக்கைகளில் அநேகர் அறியாமலே சிக்குண்டுகிடக்கிறார்கள். நமது கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் சில பகுதிகள் வேதவசனத்திற்கு முற்றும் புறம்பாக இருப்பதின் விளைவாக இவ்வகை உடன்படிக்கை ஏற்படுகிறது. மந்திரவாதம் அல்லது சத்தியத்திற்கு புறம்பான சடங்குகளால் ஒருநபர் இக்குழுவில் சேர்த்துக்கொள்ளப்படும் போது இத்தகைய உடன்படிக்கைகள் ஏற்படுகின்றது. இவ்வகையான மாந்திரீகமான ரகசியகுழுக்களில் ஒருவர் சேர்ந்துகொள்ளுவதற்கு முன்பாக உறுதிமொழி எடுக்கிறார்கள். உறுதிமொழி எடுக்கும்படி ஒருவர் வற்புறுத்தப்படும்போது, அது அந்நபரை ரகசியவழிபாட்டுக் குழுக்களோடு இணைத்துக் கட்டுகிறது என்பதையும் பயங்கரமான சாத்தானுக்குரிய காரியங்களில் சிக்கிக்கொள்ளவைக்கிறது என்பதையும் அறியாமல் வற்புறுத்துவதால் சிலர் உறுதிமொழி எடுத்துவிடுகிறார்கள்.

பாரம்பரியமான சடங்காச்சாரங்களின் மூலமாக அநேகஉடன்படிக்கைகள் ஒப்பந்தம் செய்யப்படுகின்றன. எடுத்துக்காட்டாக:

1. பெண்கள் வயதுக்கு வரும் சடங்கு
2. இனத்தலைவனாக அல்லது ஊர்த்தலைவனாக்குவதற்காக செய்யப்படும் விசேஷ மதச்சடங்குகள்
3. விருத்தசேதனம் செய்யும் மதச்சடங்குகள்
4. அடக்க ஆராதனை மதச்சடங்குகள்.
5. பெயர் சூட்டும் மதச்சடங்கு முதலியன.

சில சமுதாயங்களிலுள்ள பாரம்பரிய வழக்கத்தின் படி ஒவ்வொரு வாலிபனும் வாலிப பெண்ணும் பருவகாலத்தை அடையும்போதும் அதற்கான துவக்ககால சடங்குகள் நடத்தும்படி இருட்டில் தனியே ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட காட்டிற்குச் சென்றாகவேண்டும். வயதுக்கு வந்தவர்களுக்கான சடங்காச்சாரங்களின் படி, இரத்தம் சிந்தப்படவேண்டும் என்றும் அவர்கள் அந்நாட்டிலுள்ள தெய்வங்களின் ஆசீர்வாதங்களோடு அவர்கள் திருமணம் செய்துகொள்ளப்போகும் நம்பிக்கையோடு அக்காட்டுக்குள் சென்று சில குறிப்பிட்ட காரியங்களை செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்ட வழிகளில் நடக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

தேவனுடைய ஆலயத்தில் தலைவனாக இருப்பதோ அல்லது மக்கள் மத்தியில் தலைவனாக இருப்பதோ தவறு இல்லை ஆனால் அந்த தலைமைப்பொறுப்பானது எப்படி தெரிவுசெய்யப்படுகின்றது என்பது முக்கியம். சில சமுதாயங்களில் தலைவரைத் தெரிந்தெடுக்கவும் நியமனம் செய்யும்போது நடத்தப்படுகின்ற காரியங்களும் துவக்கவிழா சடங்குகளும், தேவனை மகிமைப்படுத்துவதாக இல்லை. **தேவனை மகிமைப்படுத்தாத எந்த நடவடிக்கையும் பிசாசை மகிமைப்படுத்துகின்றது.** ஒரு நபர் தேவனை மகிமைப்படுத்தாத காரியங்களை அதிகமாக செய்யும்போது இறுதியில் அந்நபர் சத்துருவுக்கே தன்னை விற்றுப்போடுகிறான்.

நைஜீரியாவிலுள்ள ஒரு சமுதாயத்தில் தலைமைப்பதவியைப் பெற்றுக்கொள்ளும் முன் தனி அறையில் அடைத்துவைப்பார்கள், அங்கே அவன் அநேக தடைகளை மேற்கொண்டாக வேண்டும். ஒரு கட்டத்தில் அவன் வாயினால் மெல்லுவதற்காக சிறிது பச்சிலைகளும் அவன் நுகர்வதற்காக சில பச்சிலைகளும் கொடுக்கப்படும். அதே வேளையில் அவனுக்காக சில பலிகளும் செலுத்தப்படும். இன்னொரு கட்டத்தில் அந்த நபர் முற்றிலும் உணர்விழந்த நிலையில் செத்ததுபோல காணப்படுவார். அந்நபரின் கண்கள் சிவப்பாக மாறும்; அவன் திடீரென்று உணர்வுபெற்று எழும்பும் போது பத்து ஆட்களுக்கு சமமான வல்லமையோடும் பலத்தோடும் காணப்படுவான். இதனால், தெரிந்தெடுக்கப்பட்ட தலைவனையும் பலிகளையும் தெய்வங்கள் ஏற்றுக்கொண்டன என்றும் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவன் யுத்தகாலத்தில் மக்களை விடுதலையாக்குவதற்குத் தேவையான மகாவல்லமையும் அதிகாரமும் கடைசியாக கொடுக்கப்பட்டுவிட்டன என்பதையும் மக்கள் அறிந்துகொள்வார்கள். ஆனால் அந்த மனிதன் விழித்தெழும்பும்போது சாதாரணமாக எழும்பினால், அவர்கள் நம்பிய தெய்வங்களும், செத்துப்போன முற்பிதாக்களும் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை என்று பொருள். ஆகவே அவர்கள் இன்னொரு நபரை தேடிகண்டுபிடிக்கவேண்டும்.

வேறு சில பாரம்பரிய வழக்கத்தின்படி, இக்கட்டான சூழ்நிலைகளில் இறந்துபோன முற்பிதாக்களின் ஆவிகள் வந்து உதவட்டும் என்று அவர்களை எழுப்புவதற்காக கோழி இறைச்சியை பச்சையாக மென்றுசாப்பிடுவார்கள்; இன்னும் சில பாரம்பரிய வழக்கத்தின்படி இளம்பெண்களின் மீது பலிசெலுத்தப்பட்ட பொருள், நீர், இரத்தம் போன்றவை ஊற்றப்படும், இளம்பெண்கள் மதச்சடங்காச்சார நடனத்தில் ஆடும்போது அதில் ஒருத்தி பிசாசினால் பிடிக்கப்பட்டு குறிசொல்லத் துவங்குவாள். இன்னும் சில பாரம்பரியங்களில் ஒரு மனிதன் இறந்து போனால் அந்த சமுதாயத்தார் அந்த செத்துபோன மனிதனின் ஆவியை எழுப்புவார்களாம். அதற்கான காரியங்கள் செய்யும் வேளையில் இறந்துபோனவர் மிகவும் நேசித்த மகளை செத்துப்போனவரின் ஆவி பிடித்துக்கொள்ளுமாம்.

இவ்வாறாக பிசாசினால் ஆட்கொள்ளப்பட்ட அவள், அம்மனிதன் எப்படி கொல்லப்பட்டான் என்பதையும் அந்த நபரின் பணம் எங்கே இருக்கிறது என்பதையும் செத்துப்போன அந்த நபரின் ஆவியை சந்தோசப்படுத்த தொடர்ந்து என்ன செய்யவேண்டும் என்பதையும் அந்த ஆவியை சாந்தப்படுத்த என்ன பலியிடவேண்டும் என்பதையும் ஆண்டுதோறும் எப்படி உணவுபடைக்க வேண்டும் என்பதையும் அந்த சமுதாயத்தாருக்கு

தெரிவிக்குமாம். இவ்வாறாக மனித குடும்பத்தில் எப்போதெல்லாம் ஒரு நபர் இறக்கிறார்களோ அப்போதெல்லாம் உடனே கடவுள் குடும்பத்தில் புதிதாக ஒரு குட்டிக்கடவுள் பிறக்கிறது *(தன்னை காப்பாற்றிக்கொள்ள முடியாமல் வியாதியில் விபத்தில் இறந்தவனை மக்கள் தெய்வமாக்கி என்னை காப்பாத்து என்கின்றனர்)-* இதனால் பிசாசுகளை வணங்குவதற்காக கட்டப்பட்ட புனித ஸ்தலங்களின் எண்ணிக்கை பெருக ஆரம்பிக்கிறது.

நைஜீரியாவில் முன்பும் இப்போதும்கூட அனேக குடும்பத்தார் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்யும்போதும் அல்லது பெயர்சூட்டும் சடங்கின் போதும் 'எப்போது கிடைக்கும் என்று காத்துக்கொண்டிருக்கும் பிசாசின் கரங்களில்' தங்கள் இளம்பிள்ளைகளை அற்பணிக்கின்றனர்.

தேவனிடமிருந்து வந்த பரிசுகளாகிய இப்பிள்ளைகளை தூக்கிச்சென்று நன்றி செலுத்துவதற்காகவும் வியாதியோ பலவீனமோ வராமலிருப்பதற்காகவும் பிசாசிடம் கொண்டு செல்கிறார்கள். பிசாசே தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியாமலிருக்கும் போது அது எப்படி இன்னொருவரை பாதுகாக்க முடியும்? ஒரு நபர் எங்கிருந்து உருவானார் என்பதை அறியாத இவன் எப்படி அந்த நபரை காப்பாற்ற முடியும்? தேவனால் மட்டும்தான் முழுபாதுகாப்பைக் கொடுக்கமுடியும்.

'இயேசுவின் நாமத்தில் முழுமையான விடுதலையும் தெய்வீக சுகமும்' (Complete Deliverance and Healing in Jesus Name) என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள உண்மையான ஒரு சாட்சியை உங்களுக்குச் சொல்கிறேன்.

ஒரு நாள் அதிகாலை சுமார் 4மணிக்கு என் கதவை சிலர் தட்டினார்கள். சாகும்தருவாயில் இருக்கும் 16வயது பையனை சிலர் என்னிடத்தில் கொண்டுவந்தார்கள். அவனைப்பின் தொடர்ந்து 'குறிசொல்கிற' கோயில் பூசாரியும் வந்திருந்தார். முந்தின இரவில் நடத்தப்பட்ட கூட்டத்தில் கர்த்தர் செய்த காரியங்களைப் பார்த்த ஒரு கிறிஸ்தவ சகோதரி அவர்களிடம் சாட்சி சொல்லியிருக்கிறாள். ஆகவே கடைசி முயற்சியாக அந்த பையனை இங்கே கொண்டுவந்தார்கள். 'குறிசொல்கிற' கோயில் பூசாரியாகிய நானே இவனைக் காப்பாற்ற முடியாது என்று நம்பிக்கையற்றநிலையில் கைவிட்ட இந்த பையனைக் காப்பாற்ற இன்னொரு சக்தி இருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்காக அந்த பூசாரி வந்திருந்தார்.

தேவனுக்குப் பிரியமானவர்களே, விடுதலை ஊழியத்தை அந்த பையனுக்கு செய்து கொண்டிருந்த போது திடீரென்று, ''அவனைப் பாருங்கள். ஒரு உயரமான கறுப்புமனிதன் கையில் ஒரு ஈட்டியை வைத்துக்கொண்டு நிற்கிறான்'' என்று சத்தமிட்டான். அங்கு யாரையும் என்னால் காணமுடியாவிட்டாலும் 'ஆயுதத்தோடு அவன் என்ன செய்ய வந்திருக்கிறான்' என்று அவனிடம் கேட்டோம். அந்தபையன் மூலமாக அந்த பிசாசு பேசியது. 'பலவருடங்களுக்கு முன்பு இந்த பையன் பிறந்த அந்நாளில் அவனை பாதுகாத்துக்கொள்ளும்படியாக என்னிடம் கொண்டுவந்தார்கள். ஆனால் இப்பொழுது இவனது மரணத்திற்காக முன் குறிக்கப்பட்ட நேரம் வந்துவிட்டது.' என்றது. சத்துருவால் போடப்பட்ட திட்டத்தை இயேசுவின் நாமத்தில் ரத்துசெய்துவிட்டு அப்பிசாசுக்கு எதிராக இயேசுவின் நாமத்தை பயன்படுத்தினோம். பிழைப்பது கேள்விக்குறியாக இருந்த அப்பையன் இன்று இயேசுவின் நாமத்தில் பலசாலியாக இருக்கிறான்.

<u>பிறந்து முதல்நாளே அவனது பெற்றோர்கள் அவனை அப்பிசாசிடம் ஒப்படைத்த காரியம் அவனுக்கு தெரியாது</u>. நீங்கள் இளவயதாயிருக்கும்போது என்னவகையான சடங்காச்சாரங்களில் எல்லாம் உங்களை ஈடுபடவைத்தார்கள் என்பது உங்களுக்கும்கூட தெரியாமலிருக்கலாம்.

சில தாய்மார்கள் கர்ப்பம் தரிக்கவேண்டும் என்று பிசாசின் கையாட்களிடம் அல்லது விக்கிரகங்களிடம் ஆலோசனை கேட்கிறார்கள். இதன் விளைவாக அநேக பலிகள் அல்லது சடங்காச்சாரங்கள், பூஜைகள் போன்றவைகள் அவர்களால் செய்யப்படுகின்றன. அதன்பின்னர் அவர்கள் பிசாசின் வல்லமையின் கீழ் நடத்தப்படுகிறார்கள். இறுதியாக இவர்கள் கருவுற்று பிள்ளை பெற்றாலும் அத்தகைய சூழலில் கருத்தரிக்கப்பட்ட குழந்தைகள் பெரும்பாலும் மிகவும் தீயகுணம் உடையதாகவும், பாதி மனிதசுபாவமும் பாதி பிசாசின் சுபாவமும் கொண்டதாகவும், அழிக்கும் மனப்பான்மையுள்ளதாகவும் இருக்கும்.

> “கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி,அவர்; நான் உன்னைத்தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன். நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கத்தரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்.” - எரேமியா 1:4,5

> “அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சைரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்.” - லூக்கா 1:15

மேலே குறிப்பிடப்பட்ட வேதவசன ஆதாரங்களின்படி விசுவாசிகளின் பிள்ளைகள் கற்பத்திலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட முடியும், அதுபோல அவிசுவாசிகள் தங்கள் பிள்ளைகளை விக்கிரகங்களுக்கு அற்பணிப்பதால் அவர்கள் தாயின் கற்பத்திலிருக்கும் போதே தீயஆவிகளை பெற்றுக்கொள்கின்றன.

1983 ஆண்டில் ஒரு பெண் மனந்திரும்பி ‘குறிசொல்கிற’ வையும் விக்கிரகவழிபாட்டை விட்டு விட்டு இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்ய வந்தாள். பிசாசுக்கு உரிமைப்பட்டது என்று அவள் எங்களிடம் ஒப்படைத்த அனைத்தையும் நாங்கள் எரித்துவிட்டோம், ஆனால் அவளைக்குறித்து எங்களுக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. அவள் பழைய வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்த போது அவளுக்கு பெண்பிள்ளைகளே பிறந்தன. ஒரு ஆண்பிள்ளையை பெற்றெடுக்க வேண்டுமென்று மிக ஆவலாக இருந்தாள். அதைக்குறித்து ஆலோசனை கேட்பதற்காக பிள்ளைகொடுக்கும் தெய்வம் என்று மக்களால் சொல்லப்படுகின்ற மிகபயங்கரமான ஒரு தெய்வத்தை நாடி போனாளாம்.

அந்த புண்ணிய ஸ்தலத்தில் அவள் இருக்கும்போது அவள் இரட்டைஆண்பிள்ளைகளை பெற்றெடுப்பாள் என்பதை குறிக்கும்படி ‘சேர்ந்து இருந்த இரண்டு நத்தைகள்’ அவளுக்கு காட்டப்பட்டன. சேர்ந்தநிலையில் அந்நத்தையை எடுக்க அவள் மறுத்துவிட்டு தனக்கு ஒன்றன் பின் ஒன்றாக ஆண்பிள்ளைகள் வரட்டும் என்ற அர்த்தத்தில் அந்நத்தையை ஒவ்வொன்றாக பிரித்தெடுத்தாள். பிசாசு அவளிடம் சொன்ன நிபந்தனையின்படியே அவள் ஒரு வீடு கட்டிக்கொடுத்தாள். அதன்பின்னர் முதல் ஆண்குழந்தையை பெற்றெடுத்தாள், பின்னர் இரண்டாவதாக ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்த இரண்டு குழந்தைகளும் ஒரு சாபமாக மாறி பெற்றோர்களை உபத்திரவப்படுத்தினார்கள். முதல் மகன் மிக மோசமானவனாக இருந்தான். அவனை கண்டிப்பதற்காக சவுக்கினால்கூட அடித்துப்பார்த்தும் மாற்றமில்லை. அவன் எல்லாரின் மீதும் கல்லெறிந்தான். யாராவது அவனை மீண்டும் அடிக்கவந்தால் அவன் செத்துபோவேன் என்றும் அவனது தம்பியையும் சேர்த்து கொண்டுபோய்விடுவேன் என்றும் சத்தியம் பண்ணுவான். அந்த எட்டுவயது பையன் அனைவருக்குமே ஒரு பயங்கரமூட்டும் திகிலாக இருந்தான்.

இப்பெண் மனந்திரும்பியதும் பிசாசோடுள்ள ஐக்கியத்திற்கு அடையாளமாய் இருந்த ‘குறிசொல்கிற’ வைக் சுட்டெரித்துவிட்டாள். ஆனால் அவளையோ அவளது பிசாசுத்தனமான பிள்ளைகளையோ இயேசுவின் நாமத்தில் விடுதலைக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. கொஞ்ச காலத்திற்குப் பிறகு மூத்த மகன் வயிற்றுவலி வந்து சிலமணிநேரங்களில் இறந்துவிட்டான்.

அடுத்த பையனும் இறந்துபோவான் என்று அவர்கள் அறிந்திருந்தனர். அதுபோலவே விரைவில் அடுத்தபையனும் இறந்துபோனான். அதன் பிறகு நான் அழைக்கப்பட்டேன். நான் அங்கு சென்றபோது நூற்றுக்கணக்கான மக்கள் அந்த பையனைச் சூழ்ந்திருந்தனர். சிலர் அழுதுகொண்டிருந்தனர், மற்றவர்கள் ஜெபித்துக்கொண்டிருந்தனர். பிசாசின் மீது கோபம் கொண்டு அந்தபையனின் உயிரை திரும்பவரச்செய்தேன். சுமார் இரண்டு நிமிடங்களுக்குள் அந்த பையன் உயிரோடு எழுந்தான். என் வீட்டிற்கு வந்தான். கதை அதோடு முடிந்துவிட வில்லை.

என் வீட்டிலிருந்துகொண்டு, ‘‘எட்டு பேர் நிற்கிறார்கள். அவர்கள் என்மீது கல்லெறிகிறார்கள். அவர்கள் பின்னே போகமாட்டேன். நான் அவர்களைச் சேர்ந்தவன் (அவர்களுக்குரியவன்) என்று சொல்கிறார்கள்.’’ என்று அப்பையன் சத்தம் போட்டான். துயரமான காரியம் என்னவென்றால் பலநாட்கள் கழித்து இறுதியில் அப்பையன் இறந்துவிட்டான்.

என்னுடைய நிலை எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். இப்பொழுது அறிந்த அளவுக்கு அப்போது எனக்கு நற்செய்தி தெரியாது. அப்பையனை கர்த்தர் உயிரோடு எழுப்பாவிட்டால் நான் நற்செய்தியை பிரசங்கிக்கக் கூடாது என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் ஜெபம் பண்ணும்போது கர்த்தர், ‘‘என் மகனே, இந்த பிள்ளையை மறந்துவிடு. அப்பையனின் தாயாருக்கு என்னுடைய சொந்த பிள்ளையையே கொடுப்பேன்’’ என்றார். அந்த பையனின் மூத்தஅக்கா, அவளுடைய தம்பியின் மரணம் என்னை பாதிக்கும் என்றுணர்ந்து என்னை ஒரு ஓரத்தில் அழைத்து முன் நிகழ்ந்த எல்லா காரியங்களையும் என்னிடம் சொன்னாள். அவன் நிச்சயமாய் இறந்துபோவான் என்பது அவர்களுக்கு முன்பே தெரியும் என்றாள்.

கர்த்தருக்கு மகிமைஉண்டாகும்படி, அப்பெண் கற்பமுற்று இன்னொரு பையனை பெற்றெடுத்தாள். கர்ப்பத்திலேயே குழந்தையை தேவனுக்கென்று அற்பணித்துவிட்டாள். இன்று கர்த்தர் எவ்வளவாய் அவளை ஆசீர்வதிருக்கிறார் என்று பார்க்கும்போது, கர்த்தருடைய வெகுமதியில், ஈவில், ஆசீர்வாதத்தில் வேதனை இராது என்பதை நினைவு கூறுகிறேன்.

### (3) சாப்பாட்டுப் பழக்கங்கள் (Through Eating Habits):

விக்கிரகங்களுக்கு பலியாக படைத்த உணவுப்பொருட்களை உண்பதினாலும் உடன்படிக்கைகள் ஏற்படமுடியும்.

> ‘‘எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும் நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்க வேண்டுமென்பதே. அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள் மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாக கண்டது; இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள்.’’
> -அப்போஸ்தலர்15:28,29

நாம் சாப்பிடுமுன் எப்பொழுதெல்லாம் நமது ஆகாரத்தை ஆசீர்வதிக்கிறோமோ, அப்போதெல்லாம் அந்த ஆகாரமானது நமது சரீரநலத்திற்காக அது பரிசுத்தமாக்கப் பட்டிருகிறது என்றும் அந்த ஆகாரத்தை பகிர்ந்து சாப்பிடுகிற அனைவரும் அந்த ஆசீர்வாதத்தில் பங்கெடுக்கிறார்கள் என்று அறிக்கைசெய்கிறோம். அதேபோல எப்போதெல்லாம் ஒரு ஆகாரமானது விக்கிரகங்களுக்கு படைக்கப்படுகிறதோ அப்போது இருளின் பூசாரி, அவன் மீது இருக்கிற பிசாசின் சக்தியால் அவனது அனைத்து தீயவல்லமையோடு அந்த ஆகாரத்தை ஆசீர்வதிக்கிறான். அந்த ஆகாரத்தை பகிர்ந்து சாப்பிடும் அனைவரும் அதன்மீது இருக்கும்

பிசாசின் வல்லமையையும் பகிர்ந்துகொள்வதால் அவ்வாறாக அதனோடு உடன்படிக்கை செய்துகொள்கிறார்கள். ஆகவே தண்ணீர் சம்பந்தமான அசுத்த ஆவிகள் (விரைவாக பரவக்கூடியது) பிசாசின்மக்களால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஆகாரத்தின் மூலமாகவும் குளிர்பானங்கள் மூலமாகவும் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் மற்றும் குடும்பத்தார் அனைவருக்கும் பரிமாறப்படும்போது அவர்கள் அனைவரும் இந்த உடன்படிக்கைக்குள் சிறைப்படுத்தப்படுகிறார்கள்.

### (4) வரம்புமீறி / எல்லை மீறிச்செல்வதன் மூலம் (Through Trespassing the boundary):

ஜு ஜு வீடுகளுக்கும், வெண்வஸ்திர சபைகளுக்கும், குறிசொல்லுபவர்களிடமும், கைரேகை பார்ப்பவர்களிடமும், நட்சத்திரத்தை பார்த்து பலன் சொல்கிறவர்களிடமும், ஜெபிக்க கல்லறைத் தோட்டங்களுக்கும் (பாதுகாப்புக்காகவோ, சமாதானத்திற்காகவோ, தகவல் பரிமாறிக்கொள்வதற்காகவோ, ஆசீர்வாதத்திற்காகவோ) சென்றிருந்தாலோ மெய்யான தேவன் போட்ட எல்லையை மீறி அவர்கள் பிசாசின் ஆபத்தான எல்லைக்குள் நுழைந்தவிட்டார்கள் என்று அர்த்தம். அதற்கான பின்விளைவுகளை அவர்கள் சந்தித்தே ஆகவேண்டும்.

எல்லையைத்தாண்டி, இப்பகுதிக்குள் நுழையும்போது இந்த அசுத்த ஆவிகளோடு (சாத்தான் என்ற லூசிபரைத் தலைவனாக கொண்ட அசுத்தஆவிகளோடு) உடன்படிக்கை செய்துவிட்டார்கள் என்று அர்த்தம். சாத்தான் மன்னிப்பதும் இல்லை, மனிதர்கள் காரியங்களை லேசாக எடுத்துக்கொள்வதுபோல அவன் லேசான எடுத்துக்கொள்வதில்லை. அப்படி செய்வது நியாயமல்ல என்று அவன் நினைக்கமாட்டான். அவனுடைய தீய திட்டங்களையும் செயல்களையும் மனிதர் வாழ்வில் கட்டவிழ்த்துவிட சின்ன வாய்ப்பு கிடைத்தாலும் அவன் விடுவதில்லை காரணம் அவனது தலையாய ஊழியமே ‘திருடுவதும், கொல்வதும், அழிப்பதுமே’யாகும் யோவான் 10:10.

### (5) பிறகலாச்சார நடவடிக்கைகள் மூலம் (Through Other cultural activities)

மக்கள், இருளின் வல்லமைகளுக்கு பல்வேறு வழிகளில் தங்களை அர்ப்பணிக்கின்றனர், அவைகளில் மிகபிரபலமாக இருக்கும் ஒன்று இசையாகும் - அதாவது உலகபிரகாரமான இசைப்பாடல்கள். நாம் விரும்பும் இசையும், பாடவிரும்பும் பாட்டும், ஆடவிரும்பும் நடனமும் நாம் எவரை பிரதிபலிக்க விரும்புகிறோம் என்பதையும் எவ்வகையான துதியையும், ஆராதனையையும் அல்லது காரியங்களை விரும்புகிறோம் என்பதையும் நிர்ணயிக்கிறது. “இதயத்தின் நிறைவால் வாய் பேசும்” யோவான் 8:44. பிசாசினால் உண்டான பிசாசின் பிள்ளை, பெரும்பாலும் அவனது அல்லது அவளது எஜமானாகிய சாத்தானை புகழ்வதற்காக பாடுகிறான் - பாடுகிறாள்.

இயற்கை சம்பந்தமான காரியங்களைக்குறித்தோ, நமது முன்னோர்களைக் குறித்தோ அல்லது விக்கிரகங்களைக் குறித்தோ பாடத்தீர்மானித்த நபர், எல்லா துதிக்கும் பாத்திரராகிய தேவனை விட்டுவிட்டு பொருட்கள் மீதோ மனிதர்கள் மீதோ நம்பிக்கை வைக்கும் போது அந்நபர் தெரிந்தோ தெரியாமலோ பொல்லாங்கனோடு உடன்படிக்கை செய்துகொள்கிறான் என்று அர்த்தம். பிசாசுகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பாடல்களில் பிசாசின் அபிஷேகம் இருப்பதால் அவைகளை கேட்பவர்கள் மீதும் அல்லது அத்தகைய பாடல்களின் பிரதிகளை சொந்தமாக வைத்திருப்பவர்கள் மீதும் அது கிரியை செய்கிறது.

# உடன்படிக்கையின் ஆயுள்காலம்
**(Life span of Covenants)**

> ‘‘ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்.’’ - **யாத்திராகமம் 34:7**

முந்திய அத்தியாயங்களில் பட்டியலிடப்பட்ட காரியங்களில் நமது முற்பிதாக்களோ அல்லது முன்னோர்களோ ஈடுபட்டிருந்தால், அதன் விளைவுகளை செயலற்றுப்போகப் பண்ணாமலிருந்தால் அத்தீயவிளைவுகளானது மூன்றாம் நான்காம் தலைமுறைவரைக்கும் தொடர்ந்து செல்கின்றன. அதாவது நம் முன்னோர்கள் நம்மையறியாமல் செய்த உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் சட்டபூர்வமாக நம்மை உபத்திரவப்படுத்துவதற்கும் வேதனைப்படுத்துவதற்கும் ஏதுவாக இருக்கின்றன. இவ்வகை ஒப்பந்தங்களில் நீங்களோ அல்லது உங்கள் தகப்பனோ நேரடியாக ஈடுபட்டிருப்பீர்களானால் அந்த உடன்படிக்கை புத்தம் புதியதாக செய்யப்பட்டிருப்பதால் முன்னைவிட அதிக வேதனையை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றன.

ஆதியாகமம் 14: 18—20 படிக்கும்போது சகோதரனாகிய லோத்தை மீட்டு வரும் வழியில் ஆபிராம், மெல்கிசிதேக்கை சந்தித்தார் என்று படிக்கிறோம்.

> ‘‘அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்.’’

அவர்கள் எதிர்பாராதவிதமாக சந்தித்தது போலிருந்தாலும் கர்த்தர் அச்சந்திப்பை முன்னரே திட்டமிட்டிருந்தார். அவர்கள் இருவரும் ஒரு உடன்படிக்கை செய்து ஆசீர்வாதங்களையும் பரிசுப்பொருட்களையும் ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்வதன் மூலம் உடன்படிக்கையினை உறுதிபடுத்திக்கொள்கின்றனர். அதாவது அதற்கு முத்திரை போடுகின்றனர். ஆனால் இந்த உடன்படிக்கையானது மூன்றாம் நான்காம் தலைமுறை வரையிலும் வலுவுடையதாக உள்ளது. ஆபிரகாம் ஈசாக்கைப்பெற்றான். ஈசாக்கு ஏசாவையும் யாக்கோபையும் பெற்றான். யாக்கோபு பன்னிரண்டு மகன்களைப் பெற்றான். அதில் ஒருவன் தான் லேவி (ஆபிரகாமின் மூன்றாம் அல்லது நான்காம் தலைமுறை).

எபிரேயர் 7:1இல் ஒரு இரகசியம் - ஒரு மர்மம் மறைந்திருக்கிறது.

> **‘‘**அன்றியும், மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால், தசமபாகம்

வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்.” - எபிரேயர் 7: 9, 10

ஆபிராமும் மெல்கிசேதேக்கும் உடன்படிக்கை செய்தபோது ஈசாக் பிறக்கவில்லை; ஈசாக் பிறந்தால்தானே யாக்கோபு பிறப்பான்; யாக்கோபு பிறந்தால் தானே லேவி பிறப்பான். ஆனால் அவர்கள் பிறக்கும் முன்னதாகவே ஆபிராம் செய்த உடன்படிக்கையானது மூன்றாம் தலைமுறைக்கு பிறகும்கூட செயல்பாட்டில் இருந்தது. இது உண்மையானால் நம்முடைய தாத்தா ஜூ ஜூ வீட்டில் பூசாரியாக இருந்திருப்பாரானால் அவருடைய அரைக்குள் நாம் அப்போது இருந்ததால் அவர் விக்கிரகங்களுக்கும் குலதெய்வத்திற்கும் மற்றும் சமுதாயத்தைச் சார்ந்த பிறதெய்வங்களுக்கும் பலிசெலுத்தியபோது நாமும் அப்பலிகளில் பங்கெடுத்திருக்கிறோம் என்று அர்த்தம்.

தகப்பன் என்ற பொறுப்பிலிருக்கும் ஒருவன் ஒரு உடன்படிக்கை செய்யும்போது அவ்வுடன்படிக்கையின் முழுவல்லமை அல்லது அதன் பின்விளைவுகள் நிறுத்தப்படும் முன்னர் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் தொடர்கிறது. இவ்வுடன்படிக்கைக்குட்பட்ட அல்லது உடன்படிக்கையானது ஆதிக்கம் செய்கின்ற உயிர்களின் மீதும், வியாபாரங்களின் மீதும், தொழில்கள் மீதும், பிள்ளைகளின் மீதும், திருமணங்களின் மீதும், கல்வியின் மீதும் இதுபோன்றவற்றின் மீது, பிசாசுகளுக்கு சில குறிப்பிடப்பட்ட அதிகாரங்களைக் கொடுக்கிறது.

என் அன்பு நண்பனே! இவ்வேளையில் சற்று நிதானித்து உங்களிடம் சில கேள்விகள் கேட்கிறேன்.

1. குழந்தை பாக்கியம் கிடைக்கவேண்டும் என்று உங்கள் தாத்தாக்களில், பூட்டாக்களில் எத்தனைபேர் ஜுஜு வீட்டிற்குச் சென்றார்கள்?
2. அவர்களில் எத்தனைபேர் நதிதேவதையுடனும், இரும்பு கடவுளுடனும் அல்லது ஜூ ஜூ வீட்டிலுள்ள ஒரு பிசாசோடும் அல்லது சமாதானமும் பாதுகாப்புக்காக மற்றபிசாசுகளோடும் உடன்படிக்கை செய்ததுண்டா?
3. அவர்களில் எத்தனைபேர் மந்திரவாதம் செய்யப்பட்ட அல்லது பூஜிக்கப்பட்ட பொருட்களை வீடுகளுக்குள் புதைத்து வைத்தனர் அல்லது அவைகளை வாசல் நிலைக்கால்களில் தொங்கவிட்டனர் அல்லது காம்பவுண்டின் நுழைவாயிலில் தொங்கவிட்டனர்?
4. அவர்களில் எத்தனைபேரின் முகங்கள், மார்புகள், மடிகள், கைகள் போன்றவைகளில் அடையாளங்கள் போட்டிருந்தனர்.

இவ்வாறாக கேள்விக்கேட்டுக்கொண்டே போனால் பிசாசுகளின் கட்டுப்பாட்டுக்குள் நம் முற்பிதாக்களும் தாய்மார்களும் எந்த அளவு அவைகளோடு ஈடுபடுத்தும்படி நம்மை இழுத்துச்சென்றிருக்கிறார்கள் என்பது வெளிப்படும். பெரும்பாலான உடன்படிக்கைகள் அனைத்தும் அவர்கள் பிள்ளைகளுக்கு சமாதானமும், பாதுகாப்பும், ஆசீர்வாதமும் வந்து சேரவேண்டும் என்ற நல்ல, நேர்மையான நோக்கத்தோடு செய்யப்பட்டவைகள்தான். ஆனால் இவைகளெல்லாம் அவர்களது அறியாமையினால் செய்யப்பட்டது. இன்று நமக்கு இருப்பது போன்று சபைகள், ஜெப மையங்கள், வீட்டுஜக்கியங்கள், நற்செய்தி புத்தகங்கள், ஒலிநாடாக்கள் போன்றவை அன்று இல்லை.

## ஏன் பிசாசுகள் உடன்படிக்கையை மறப்பதில்லை?
(Why demons do not forget covenants?)

> ‘‘ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.’’ எபேசியர் 6:12

ஒரு நாட்டின் குடியரசுத்தலைவர் ஒரு உடன்படிக்கை பத்திரத்தில் (ஒப்பந்தத்தில்) கையெழுத்துபோடும் போது ஒரு மில்லியன் டாலர் கடனோடு அந்த நாட்டை கட்டிப்போடுவதோடு, அதைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பானது அவருக்கு மட்டுமல்ல அந்நாட்டில் பிறந்த ஒவ்வொரு குடிமகன் மீதும் இன்னும் பிறக்காதிருக்கிற அந்நாட்டின் குடிமகன்மீதும் சுமருகின்றது. அவர் இறந்துபோனாலும் அல்லது ஆட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்டாலும் அல்லது அவர் தாய்நாட்டைவிட்டு வேறு அயல் நாட்டிலே வாழ்ந்தாலும் அக்கடன் திருப்பி செலுத்தியாக வேண்டும். காரணம் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களும் கோப்புகளும் (files) அந்த உண்மையை நிரூபிக்கின்றது.

வேதாகமம் சொல்கிறது- உயர்ஸ்தலங்களை தலைமையகமாகக்கொண்டிருக்கிற பிசாசோடுதான் நமக்குப் போராட்டம். உயர்ஸ்தலங்களில் மனிதன் இஷ்டம்போல் நடக்கமுடியாது. சாத்தான் ‘இந்த பிரபஞ்சத்தின் தேவனாக’ மாறியது முதலே நம் அனைவரது எல்லாவகையான உடன்படிக்கை நகல்களும் அவனிடம் உண்டு. ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட மரத்தின் ஒரு கனிக்கு ஆசைபட்டு இம்முழுஉலகையும் சாத்தானிடம் விற்றுவிட்டனர் (ஆதியாகமம்:3). அக்கோப்புகளின் மீது ‘உடன்படிக்கையின் நிறைவுறும் நாட்கள்’ (Maturity Dates) பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. அந்நாள் வரும்போது ஏதாவது ஒன்று எங்கிருந்தாவது நிகழும். யாராவது இறக்கிறார்கள் அல்லது பொருட்கள் களவாடப்படுகிறது அல்லது ஒரு விபத்து நிகழ்கிறது, தேர்வில் தோல்வி ஏற்படுகிறது, வறுமை வருகிறது, குருட்டுத்தன்மை, செவிட்டுத்தன்மை, கைகால் அல்லது நரம்பு செயலிழத்தல் போன்றவை நிகழ்கின்றன. கஷ்ட நஷ்ட சம்பவங்களுக்கு பரிகாரம் காணும்படி சிலர் மீண்டும் ஜூ ஜூ வீடுகளுக்கு செல்கின்றனர். அதன் மூலம் பழைய உடன்படிக்கை இன்னும் புதிப்பிக்கப்பட்டு வலுவடைந்து அப்பிரச்சினைக்கு பதிலாக வேறு பிரச்சினை வருகிறது.

# அத்தியாயம். 3

# உடன்படிக்கைகள் இருப்பதற்கான அடையாளங்கள்
**(Signs of existing covenants)**

பெரும்பாலானவர்களின் அன்றாட வாழ்வில் சூழ்ந்திருக்கும் நிலைமைகளுக்கெல்லாம் காரணமான வேர் முந்நாளில் நடந்த நிகழ்ச்சிகளுக்குள் - உடன்படிக்கைக்குள் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகின்றன. ஒரு நபர் அனுபவிக்கும் அவலங்களைக் காணும்போது அந்நபருக்கு இருக்கும் சாபம் அல்லது அந்நபரோடு தொடர்புடைய ஒரு குறிப்பிட்ட உடன்படிக்கையினை உடைத்துப்போட வேண்டியது அவசியம் என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

*சிலர் உடன்படிக்கையில் சிக்குண்டு இருக்கிறார் என்பதற்கான அடையாளங்கள் பின்வருமாறு:*

## (1) தீய கனவுகள் (Evil dreams):

மறுபடியும் பிறந்து, ஆவியில் நிறைந்த கிறிஸ்தவர்கள் உட்பட அனேக மக்கள் தீய கனவுகளைக் காண்கின்றனர். சிலர் ஆறுகளின் குறுக்காக கடந்து செல்வதுபோலவும், பரந்த பயமூட்டும் நீர்நிலைகளில் நீந்துவதுபோலவும், சண்டையிடுவதுபோலவும், பறப்பதுபோலவும், சிலர் மாறுவேடதோற்றத்தில் துரத்துவதுபோலவும், நாய்கள் துரத்துவது போலவும், சிலவேளைகளில் எதிரிகளால் பிடிபட்டது போலவும் கனவு காண்கின்றனர். சிலர் கனவுகளில் காதலிப்பது போலவும் காண்கின்றனர். இவைகள் எல்லாம் கனவில் வருமானால், அந்நபர் ஆவிக்குரிய உலகில் திருமணமாகியிருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. ஆவிஉலக கணவர்கள் அல்லது ஆவி உலக மனைவிகள் தங்களால் வஞ்சிக்கப்பட்டிருப்பவர்களோடு உடலுறவு கொள்கின்றனர். இம்மாதிரி கனவுகளால் பொதுவாக மூன்று காரியங்கள் நிகழ்கின்றன.

i. **திருமணத்திற்கு தாமதம் : (Late Marriage):** இக்கனவின் மூலம் பாதிக்கப்பட்டவர்களால் திருமணத்தில் நிறைவடையக்கூடிய வகையில் எந்த உறவோ பழக்கமோ அமைவது மிகச்சிரமம். ஏனென்றால் தங்கள் கணவனையோ அல்லது மனைவியையோ வேறொரு நபருக்கு திருமணம் செய்துகொடுக்கக் முடியாது என்று பிசாசுகள் விசுவாசிக்கின்றன.

ii. **குழந்தை இல்லாமை (No Child):** இப்பிசாசினால் வஞ்சிக்கப்பட்ட நபர், இதற்குத் தெரியாமல் அல்லது இதை மேற்கொண்டு மனித உலகில் ஒரு திருமணம் செய்தாலும், அசுத்தஆவிமண்டலத்திலுள்ள கணவன் அல்லது மனைவியானது இவர்கள் கர்ப்பமடையாதபடி தடுப்பதில் உறுதியாக இருக்கின்றன. ஆவிமண்டலத்திலுள்ள இந்த அசுத்த ஆவிகள் இந்த மனிதனையோ அல்லது பெண்ணையோ அடிக்கடி வந்து சந்தித்து கர்ப்பமடைய அனுகூலம் இல்லாதபடி பார்த்துக்கொள்கின்றன. மலட்டுத்தன்மையோடு இந்நாளில் அநேகர் காணப்படுவதற்கு காரணம் இவ்வகையான பிசாகளோடுள்ள தொடர்புகள்தான்.

iii. **நிலையற்ற வீடு (Unstable Home):** ஜெபம், உபவாசம் போன்றவற்றின் பலனாக உலகில் தம்பதியர்களாக வாழ்பவர்களை பிள்ளைபெறவிடாமல் தடுக்க இப்பிசாசுகளால் முடியவில்லை என்றால் அவைகள் அக்குடும்பத்தை அழிக்க முயற்சிக்கின்றன. அப்படி அக்குடும்பம் அழியும்போது அதற்கான காரணத்தை எவரிடம் சொன்னாலும் நம்பமுடியாத அளவுக்கு அற்பமான விசயமாக இருக்கும்.

1990இல் ஒரு நபருக்கு ஆலோசனை அளித்தேன். அவள் அவளது கணவனை நன்றாக நேசிக்கிறவள்; அவனும் அவளை நேசிக்கிறான். ஆனால் ஒருநாள் அவள் சமையலறையிலிருக்கும்போது அந்த இடத்தின் பாரம்பரியத்தின்படி ஊர்த்தலைவராக

இருக்கிறவர் அவளை அழைக்க ஆள் அனுப்பினார். அவள் அங்கு சென்றபோது அவளது கணவன் அவளை விவாகரத்து செய்வதற்காக வழக்கு தொடுத்திருப்பதாக சொன்னார். தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி இரண்டு பிள்ளைகளையும் விட்டுவிட்டு அவள் அந்த வீட்டைவிட்டு வெளியேற வேண்டும். அந்த பெண்மணி முடியாது என்றாள்; இப்படி ஒரு தீவிரமான முடிவெடுக்கும்படி அவர்களிடையே எச்சண்டையும் கிடையாது என்று அவள் வாதாடினாள். அவளுடைய கணவனின் தகப்பனாருக்கு அவளைப் பிடிக்கவில்லை என்று அவள் கணவன் சொன்னதாகச் சொன்னாள். எல்லாம் ஒரு தமாஷ் மாதிரி இருந்தது. ஆனால் அவளுடைய திருமணவாழ்க்கை அதனால் ஒரு முடிவுக்கு வந்தது.

இப்பிரச்சினையை தீர்த்துவைக்க அனேகர் அழைக்கப்பட்டனர், ஆனால் ஒரு பயனும் இல்லை. அப்பெண்ணோடு கலந்தாய்வு (counselling) செய்தபோதுதான் மூலகாரணம் வெளிப்படலாயிற்று. அவளுடைய தாத்தா பலபெண்களை மணந்துகொண்டவர். அவளுடைய அம்மா அவளுடைய அப்பாவை எக்காரணமும் இல்லாமலே விவாகரத்து செய்திருக்கிறாள். அவள் தாய்மாமனும் விவாகரத்து செய்தவர்; அதோடு பலதாரங்கள் கொண்டவர். இப்படிப்பட்ட பிசாசின் சக்திகள் அவளுடைய குடும்பத்தை சூழ்ந்திருந்தது.

## (2) பிறர் பார்க்கமுடியாததை பார்க்கவும் பிறர் கேட்கமுடியாததை கேட்கவும் முடியும் என்ற அனுபவம்

(Seeing or hearing what others do not see or hear):

பிறரால் காணவும் கேட்கவும் முடியாததை காணவும் கேட்கமுடிந்த நபர்கள் சிலர் இருக்கிறார்கள். ஒருவர் மறுபடிபிறந்தவராகவும் பரிசுத்தஆவியில் நிறைந்து அந்நியபாஷை பேசுபவராக இருந்தாலும், அந்நபரின் சரீரத்தில் போடப்பட்ட பிசாசின் அடையாளங்களை உடைத்துப்போட்டு, முற்றிலும் அதனை நிராகரிக்காவிட்டால் அதன் விளைவு அழிவுக்கேதுவாயிருக்கும். நிச்சயமாகவே இத்தகைய அனுபவம் உடையவர்களுக்கு விடுதலை தேவையாக இருக்கிறது.

## (3) பயம், வெறுப்பு, கவலை (Fear. Hatred and Worry):

சிலர் தங்கள் வாழ்க்கையில் வருகின்ற எல்லாவற்றிலும் பார்ப்பதும் பயப்படுவதும் மரணமாக இருக்கிறது. தங்களது வாழ்க்கைக்கு பயங்கரமான ஆபத்தாக மற்றவர்கள் மாறிவிடுவார்களோ என்று கருதி மற்றவர்களை வெறுப்பவர்களாகவும் எளிதாக கவலைப்படுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஒரு சிலரைப் பார்த்தால், இவர்கள் நமக்கு ஆபத்தான ஆளாகிவிடுவாரோ என்று கருதி அவர்களை வெறுப்பவர்களாகவும் காணப்படுவார்கள்.

1991. அக்டோபர் 23இல் இதுபோன்ற பின்னணியில் உள்ள ஒரு பெண்ணுக்கு விடுதலை ஊழியம் செய்தேன். எக்காரியமானாலும் அவள் கண்ணில் தெரிவதெல்லாம் பிரச்சினையும் ஆபத்தும்தான். நான் அங்கு வீட்டில் இருக்கும்போதே அவளுடைய மகளைப்பார்த்து, கட்டிலின்மேல் இருக்கக்கூடாது. ஏனெனில் பொல்லாதவர்கள் அவளை துன்புறுத்துவதற்காக பதுங்கியிருக்கக்கூடும் என அறிவுரை சொன்னாள். இவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முழுஇரவு விழிப்பு ஜெபமோ அல்லது நீண்ட ஜெபமோ தேவையில்லை. இவர்களுக்குத் தேவை விடுதலை. அவளுக்கும் அவள்மீது கிரியை செய்கின்ற பிசாசுகளுக்கும் உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டாகவேண்டும்.

## (4) பிற காரியங்கள் (Others):

வெளிப்படையாக சொன்னால் ஒரு நபர் கேடுசெய்கின்ற உடன்படிக்கைக்குள் கட்டுண்டுகிடக்கிறாரா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க உதவும் அறிகுறி என்ற அடையாளப்பட்டியல் நீண்டுகொண்டே போகும். கண்டுபிடிப்பதற்கு கீழே குறிப்பிடப்பட்ட வேதவசனங்கள் வழிகாட்டும்:

1. "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை." யாக்கோபு 1:17

2. "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத்தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்." நீதிமொழிகள் 10:22

உங்கள் வாழ்வில் நிகழும் சில குறிப்பிட்ட காரியங்கள் ஏன் நடக்கிறதென்று உங்களால் எளிதில் காரணம் சொல்ல முடியவில்லை என்றால், நீங்கள் விடுதலையடைச் சென்றாக வேண்டும் என்பதைக் காண்பிக்கிறது. இரவாக இருந்தாலும் பகலாக இருந்தாலும் மணவாழ்க்கையிலும், பொருளாதார ரீதியிலும், சமூகரீதியிலும், சரீரபிரகாரமாகவும் அல்லது வேறு ரீதியாக இருந்தாலும், மேற்குறிப்பிட்ட இந்த இரண்டு வேதவசனங்களுக்கு ஒத்திருக்காவிட்டால் அது பிசாசிடமிருந்து வந்தது என்று அறிந்து அதனை நிராகரித்துவிடவேண்டும். ஆகவே இவ்வேதவசனங்களே நம்மை வழிகாட்டும் கொள்கைகளாக இருக்கட்டும்.

## அத்தியாயம். 4

## உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டுவருவது எப்படி?

(How To End a Covenant?)

உடன்படிக்கைகளை ஒழித்திடும் காரியத்தை ஜெபத்துடன் செய்தாக வேண்டும். இத் தீயஉடன்படிக்கைகளுக்கு முடிவுகட்ட வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் (வஞ்சிக்கப்பட்டவர்கள்) விரும்பவேண்டும்; கொடுக்கப்பட்டிருக்கிற வேதாகம ஆலோசனைக்கு முழுமையாய் இணங்குவதன் மூலம் அது வெளிப்படுத்தப்படுகிறது.

.

பலவருடங்களாக உதவியாக இருந்துவரும் ஆறு ஆலோசனைகள்:

### (1) முதற்படி: **அனைத்தையும் அவருக்கென்று அற்பணித்துவிடுங்கள்(Consecrate all):**

"நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள்; தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள்; உங்கள் தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள்; கர்த்தர் வந்து உங்கள் உங்கள்மேல் நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது." - ஓசியா 10:12

அன்பு நண்பனே! உழாமலும் விதைக்காமலும் தரிசாய் கிடக்கிற நிலத்தைப்போன்ற வாழ்க்கையின் நிலைமையை உடைக்கவேண்டும். பாசாங்கும் நடிப்பும் நம்மை வெகுதூரம் சுமந்து செல்லாது. அனேகர் மதஈடுபாடுள்ளவர்களாக இருப்பதால் அற்பணிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் மதபற்றுடையவர்களுக்கு இடையே உள்ள வேறுபாட்டை கண்டுகொள்வது

சிரமமாகிவிட்டது. கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறவர்களே பாவம் செய்கிறார்கள். ஒருவரும் கண்டு கொள்வதில்லை என்று ரகசியமாக பாவஞ்செய்கின்றனர். நீங்கள் யாரை ஏமாற்றிக்கொண்டிருக்கிறீர்கள்? தேவன் கண்பார்வையற்றவர் என்று எண்ணிவிட்டீர்களா? அல்லது நீங்கள் பாவம் செய்ததால் உங்களுக்குள் வந்து உங்களைப்பிடித்துக்கொண்ட பிசாசு, உங்களது அனைத்து பலவீனபகுதிகளையும் மறந்துவிட்டான் என்று நினைத்துவிட்டீர்களா? பாவங்களை மறைப்பதால் உங்களுக்கு எவ்விதத்திலும் பயனில்லை. இயேசுவின் நாமத்தில் தரிசு நிலத்தைப் பண்படுத்தி நீதிக்கென்று விதைவிதையுங்கள் அப்போது பாவம் உங்களை மேற்கொள்ள முடியாது. முதலாவது **முழுமையாய் உங்களை கர்த்தருக்கென்று பிரித்தெடுத்து பரிசுத்தப்படுத்திக் கொள்ளாவிட்டால் கீழ்குறிப்பிட்ட வேறு எந்த நிபந்தனைகளையும் கடைபிடிக்க வேண்டாம்; ஏனென்றால் அவைகள் பலிக்காது.** அனைத்தையும் இயேசுவிடம் அர்ப்பணித்துவிடுங்கள்.

## (2) இரண்டாம் படி: **அகத்திரையில் காணுங்கள் (Visualize):**

> "இவைகளெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின் மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்." - எபிரேயர் 11:13

எபிரேயர் 11ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் எல்லாம் வெற்றிபெற்றவர்கள். ஏனெனில் அவர்கள் வெகுதொலைவிலுள்ள இலக்கை கண்டு முன்னோக்கிக் செல்லும்படியாய் தூண்டப்பட்டனர். தீயகனவுகள், பிரச்சினைகள், மாற்றமுடியாத சூழ்நிலைகள், வேதனைகள், பயம், போன்றவைகளை உயிருள்ள உருவங்களாகக் காணவேண்டும். ஆவிஉலக கணவன் அல்லது மனைவியை அல்லது பிசாசுகளால் கொடுக்கப்பட்ட ஆவிஉலக போலியான பிள்ளைகளை, வறுமையால் பாதிக்கப்பட்ட நிலைமையை ஒரு உயிருள்ள உருவங்களாக நாம் காணவேண்டும். தேவன் இவைகளையெல்லாம் அகற்றிவிடுவார் என்ற நிச்சயத்தோடு செய்வதுதான் இரண்டாம் படி. இப்போது இருக்கிற நிலையை மாற்றுவது சாத்தியமல்லாதது போலத் தோன்றினாலும் இன்று இயேசுவின் நாமத்தில் தீர்வு உண்டு.

## (3) மூன்றாம் படி: **அவைகளை வேண்டாமென நிராகரித்துவிடுங்கள் (Renounce them) :**

> "விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள். மாயவித்தைக்காராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்." அப்போஸ்தலர் 19:18,19

பிசாசோடு செய்த உடன்படிக்கைக்கு முடிவுகட்டவேண்டுமெனில் அவனது வல்லமைகளை நிராகரிப்பதைத் தவிர பலம்வாய்ந்த வேறு முறை இல்லை. சத்துருவோடு கொண்டிருந்த ஒவ்வொரு உடன்படிக்கையையும் நிராகரித்து நமது கனவுகளின் மீதும் நமது எண்ணங்கள் மீதும், நமது வேதனைகள், பலவீனங்கள், தோல்விகள், கஷ்டங்கள், சாத்தியமில்லாத நிலைமைகள், குழப்பங்கள் போன்றவற்றின் மீதுள்ள அவனது வல்லமைகளை உடைத்துப்போட வேண்டும். மொத்தமாக எல்லாவற்றையும் விட்டுவிடுகிறேன் என்று பொதுவாக சொல்லிப்பயனில்லை. இருளின் வல்லமையோடுள்ள ஒவ்வொரு தொடர்பையும் அறிக்கையிட்டு ஒன்றன்பின் ஒன்றாய் துண்டித்துப்போடவேண்டும். இவ்வகையான ஜெபத்தை உரத்த குரலில் சொல்லவேண்டும்; நீங்கள் கோபமாயிருக்கிறீர்கள் என்பதை பிசாசு அறிந்திருக்க வேண்டும். பிசாசுக்கு எதிராக யுத்தம்செய்கிறோம் என்ற மனநிலையோடு ஜெபம் பண்ணவேண்டும்.

“யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்கிறார்கள்.” என்று மத்தேயு 11:12 சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் இனி பிசாசுக்குச் சொந்தமானவன் அல்ல; சொந்தமானவள் அல்ல. ஆகவே, “பிசாசே உன்னுடைய சரக்குகளையெல்லாம் எடுத்துக்கொண்டு என் வாழ்க்கையைவிட்டு வெளியேறு” என்று இயேசுவின் நாமத்தில் பிசாசுக்கு கட்டளை கொடுங்கள். ஒன்றோ அல்லது இரண்டோ நாட்கள் உபவாசித்துதுவிட்டு செய்வது சிறப்பாக இருக்கும். அப்படித்தான் மத்தேயு 17:21 இல் “இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது” என்று இயேசு குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கையில் நடந்த ஒரு உண்மையான அனுபவ சாட்சியை அறிவேன். ஒரு மனிதனும் அவனது மனைவியும். அவனது மைத்துனனும் (வளர்ப்பு மகனும்) என் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களுக்கு 1982 ஆம் ஆண்டில் திருமணமாயிற்று. ஆனால் பிள்ளைகள் இல்லை. அந்த பெண் கர்ப்பவதியானாள் ஆனால் ஆறுமாதங்கள் கழித்து கருவானது தானாக கலைந்துவிட்டது (miscarriage). இரண்டு பெரிய அறுவைசிகிச்சை செய்தும் ஒரு பலனும் இல்லை. இனி பிள்ளைப்பெற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கவேண்டாம் என்று இபதான் பகுதியிலுள்ள பெரிய மருத்துவர்கள் அம்மனிதனிடம் கூறினார்கள். காரணம் அவனுடைய விந்துவில் 80% அசாதாரணமானதாக இருந்தது. அவனுடைய மனைவியிடமும் ‘அவளது இனவிருத்தி உறுப்புகளில் அசாதாரணமான மாற்றங்கள் காணப்படுவதால் கருவுறுதல் என்பது சாத்தியமில்லாத காரியம்’ என்று மருத்துவர்கள் சொன்னார்கள். ஆயிரக்கணக்கான நைரா பணம் செலவளித்தும் ஒரு பலனில்லாமல் போனபிறகுதான் இக்கதைகளையெல்லாம் கூறினார்கள்.

அவர்களது வளர்ப்புமகன் ஒவ்வொருநாள் காலையும் எழுந்தவுடன் ஏதாவது ஒன்றைச் சேதப்படுத்துவதை கண்டனர். கண்ணாடிப் பாத்திரத்தை உடைப்பான் அல்லது சூப் பானையைத் தரையில் போடுவான், தொலைக்காட்சிப்பெட்டியை உடைப்பான், அல்லது ஏதாவது ஒன்றை சேதப்படுத்துவான், ஒவ்வொருமுறை அவனை அடிக்கும்போதும், ‘அவன் உயிரோடு இருக்கவேண்டுமென்றால், காலையில் முதல் வேலையாக, பொருட்களை நாசப்படுத்த வேண்டும்’ என்று ஒரு கிழவி அவனிடம் சொல்வதாகவும் ஆகவேதான் அவன் அப்படிச் செய்வதாகவும் அத்தவறுக்கு அவன் பொறுப்பாளி அல்ல என்று சொல்லுவான்.

பிறகுதான் உண்மை வெளிப்பட்டது. அப்பையனுடைய நெருங்கிய உறவினர் ஒருவர் ஆவிகளுடன் தொடர்பு கொள்ளக்கூடியவர் என்றும் இப்பையனை மந்திரவாதம் செய்யும் வேலையில் அவர் பயன்படுத்தியிருக்கிறார் என்பதும் தெரியவந்தது. அப்பையனின் தகப்பனார் இறந்ததும் இவனை இத்தம்பதியினர் தத்தெடுத்துக்கொண்டனர். இவ்வாறாக அறியாமையினாலே இவர்களது புதைக்குழியை இவர்களே தோண்டிக்கொண்டார்கள். இப்பெண்ணின் கர்ப்பத்தைத் தடை செய்வதற்கு மந்திரவாதி பயன்படுத்திய கருவியாக இப்பையன் இருந்திருக்கிறான். கர்த்தருடைய அபிஷேகம் நுகத்தடியை முறித்தபோது, அப்பையன் மனந்திரும்பி அநேக காரியங்களை ஒத்துக்கொண்டு அங்கிருந்து ஓடிப்போனான்.

அப்பையன் வெளியேறிய பிறகுதான் மருத்துவ சான்றுகளுக்கும் மருத்துவ ஆலோசனைகளுக்கும் மருத்துவகணிப்புகளுக்கும் எதிராக, அச்சகோதரி, செப்டம்பர் 1990இல் (அந்த பையன் வெளியே சென்ற அதேமாதம்) கருவுற்றாள். 1991ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒரு மகனைப்பெற்றாள். அற்புதம் என்ற அர்த்தமுள்ள ஆங்கில வார்த்தையான ‘மிராக்கிள்’ என்ற பெயரை மகனுக்கு சூட்டினாள். அவன் உண்மையிலேயே ஒரு அற்புதந்தான். மருத்துவ அறிவையே சார்ந்திருந்த மருத்துவர்களுக்கு அவர்களது கண்களையே நம்ப முடியவில்லை. தேவன், எல்லா மருத்துவ வல்லுநர்களைவிடவும் மருத்துவர்களைவிடவும் பெரியவர் என்று அறிந்த அனைவரும் கரங்களை உயர்த்தி கர்த்தர் இயேசுவின் நாமத்தை மகிமைப்படுத்தினர்.

## (4) நான்காம்படி: **கட்டுதலும் துரத்துதலும் ( Step 4: Bind & Cast) :**

> ‘‘பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்தில் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.’’ மத்தேயு 18:18

உங்கள் வாழ்வில் ‘பிசாசு ஒரு அந்நியன் என்றும் வாடகைக்கு வந்தவன் ஒருபோதும் உரிமையாளனை விரட்டவோ தொந்திரவு செய்யவோ முடியாது’ என்பதை நீங்கள் நன்றாக அறிந்திருக்கிறீர்கள் என்பதை அவனுக்கு நீங்கள் நினைப்பூட்டியாக வேண்டும். ‘எவனை விழுங்கலாம் என்று சுற்றித்திரிகிற அவனைவிட உங்களுக்குள்ளிருப்பவர் பெரியவர்’ என்பதை நீங்கள் முழுமையாய் அறிந்துவைத்திருப்பதை அவனுக்கு சொல்ல வேண்டும். அவனை கல்வாரி சிலுவையில் தோற்கடித்த ராஜாதி ராஜாவானவர் உங்களில் வாழ்வதால் நீங்கள் வாழும்பகுதி அவனுக்கு மிகஆபத்தான பகுதி என்பதை அவனுக்குச் சொல்லியாக வேண்டும். **‘‘நான் அபிஷேகம் பண்ணியவர்களை தொடாமலும், தீர்க்கதரிசிகளுக்கு தீங்கு செய்யாமலும் இருங்கள்.’’** என்று இயேசு ஒரு பெரிய அறிவுப்பு பலகையை உங்கள் வாழ்க்கையின் முன் தொங்க விட்டிருக்கிறார் என்பதை அவனுக்கு நினைப்பூட்டுங்கள். பொருத்தமான ஏற்ற வேதவசனங்களை தெரிந்தெடுத்து அவைகளை பிசாசின் மேல் கொட்டுங்கள். இயேசுவே தேவனுடைய வார்த்தையாக இருப்பதால் அவன் தேவவார்த்தைக்கு பயப்படுகிறான்; மரியாதை செலுத்துகிறான். வேதாகமம் சொல்கிறது: ‘‘ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.’’ வெளி12:11. பிசாசின் முகத்தை தாழ்த்தி அவன் கைகளை செயலற்றதாக்கி அவனை தோற்கடிப்பதற்கு கர்த்தாதி கர்த்தராகிய இயேசுவும்கூட வேதவார்த்தைகளைத்தான் பயன்படுத்தினார். தீய ஆவியை சவால் விட்டு துரத்தி வெளியே அனுப்பியாகவேண்டும். இயேசுவின் நாமத்தில் அவனை ஓட ஓட துரத்துங்கள்.

| |
|---|
| தேவனோ, இயேசுவோ அல்லது பரிசுத்த ஆவியானவரோ இனி உங்களுக்காக பிசாசை விரட்ட மாட்டார்கள். ஏனெனில் ‘‘நீங்கள் பிசாசுகளைத் துரத்துவீர்கள்.’’ என்று வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. |

கர்த்தர் சொன்ன நிபந்தனைக்கு கீழ்படிய மறுத்தீர்களானால் அதனால் வரும் விளைவுக்கு நீங்கள்தான் முழுப்பொறுப்பு. மிகுந்த ஜெபமோ, மிகுந்த உபவாசமோ அல்லது மிகுந்த விசுவாசஅறிக்கையோ பிசாசை விரட்டும் வேலையைச் செய்யாது. இவைகளெல்லாம் வேதவசனத்தின்படி சரியானதும் நன்மையானதுமாக இருந்தாலும், இயேசு சொன்னதுபோல நம் சூழ்நிலைக்கு பின்னால் மறைந்துள்ள பிசாசின் வல்லமைகளை கட்டிப்போட்டு அவைகளை வறண்ட இடங்களுக்கு விரட்டிவிட வேண்டும்.

## (5) ஐந்தாம் படி : **அவைகளை நிறுத்து (Step 5: Stop them):**

> ‘‘அப்பொழுது ஜனங்கள் கூட்டமாய் ஓடிவருகிறதை இயேசு கண்டு; அந்த அசுத்த ஆவியை நோக்கி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவளை விட்டுப்

புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதை அதட்டினார்.’’ - மாற்கு 9:25

‘குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்’ (யோவான் 8:36) என்று வேதாகமம் சொல்கிறது. ஏன் சிலர் இன்னும் கட்டப்பட்டவர்களாகவும் கஷ்டப்படுகிறவர்களாகவும் இருக்கிறார்கள் என்று ஒருவர் கேட்கக்கூடும்? சிலர் விடுதலை நாடி அநேக முறை சென்றிருக்கிறார்கள். ஆகையால் முழுமையான விடுதலையை ஒரே நேரத்தில் இயேசுவால் கொடுக்கமுடியாது என்று அர்த்தங்கொள்ளலாமா? பிசாசின் வல்லமைகளை நோக்கி, ‘உன் செயல்பாட்டை நிறுத்து, இனி திரும்பவராதே’ என்று நாம் கட்டளையிடாதிருப்பதால்தான் மீண்டும் பிரச்சினை வருகிறது. பிசாசுகளை அவர்களது சரக்குகளையெல்லாம் கட்டிஎடுத்துக்கொண்டு **போ, இனிதிரும்பவராதே** என்று நாம் பிசாசிடம்கட்டளையிடவேண்டும். இது பலன் கொடுக்கிறது. இன்றே முயற்சித்துப் பாருங்கள்.

## (6) ஆறாம் படி : நீங்கள் விரும்புகிறதை கட்டளையிடுங்கள். (Step 6: Decree what you desire)

‘‘நீர் ஒரு காரியத்தை நிருணயம் பண்ணினால் அது உமக்கு நிலைவரப்படும்; உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.’’ – யோபு 22:28

நீங்கள் கடைசிபகுதியை அடைந்திருக்கிறீர்கள். உங்கள் இயலாமைகளும் இல்லாமைகளும் இன்னல்களும் இல்லாமல் போகும் கடைசிபகுதிக்கு வந்திருக்கிறீர்கள். இக்கட்டத்தில்தான் உங்கள் வறுமைமாறி செழுமையும்; வறட்சிமாறி திரட்சியும்; பற்றாக்குறைமாறி பெருக்கமும், நம்பிக்கையற்ற நிலைமாறி மிகுந்த விசுவாசமும் உண்டாகிறது. தடைமலைகள் தகர்க்கப்பட்டு மண்துகள்களாக சிதறுகிறது. இது உங்களுக்குரியவைகளை பெற்றுக்கொள்ளும் - கைப்பற்றும் காலம்; சத்துருவால் பலிகடாவாக்கப்பட்டவர்கள் அவனை பழிதீர்த்து வெற்றிவாகை சூடும் காலம். தேவமக்களின் கைகளிலிருந்தும் கால்களிலிருந்தும் சங்கிலிகள் விழத்தக்கதாக இது கர்த்தரைத் துதிக்கும் காலம்.

1990, ஜுலை 11-24வரை அகில உலக பூரணசுவிசேஷ வியாபாரிகளின் ஐக்கியத்தில் எனக்கு நான்கு நாட்கள் விடுதலைமுகாம் இருந்தது. தினமும் காலை, மதியம், மாலை என மூன்று வேளையும் நடந்த கூட்டங்களில் தேவவார்த்தைகளை பகிர்ந்துகொண்டு ஜெபித்தோம். கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார். அற்புதங்கள் ஏராளமாயிருந்தன. ஆனால் 13ஆம் தியதி வெள்ளிக்கிழமைக் காலைகூட்டத்தில் எனது எல்லா போதனைவேளையிலும் கலந்துகொண்ட ஒரு மனிதர், ‘‘எனக்கு பார்க்க முடிவில்லை; நான் பார்க்க விரும்புகிறேன்’’ என்று சத்தமிட்டார். எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு அவரைத் திரும்பிப்பார்க்கக்கூடிய அளவுக்கு அவரது குரல் சத்தமாகத் தொனித்தது. தேவனுக்கு மகிமையாக மேற்குறிப்பிட்ட ஆறுபடிகளையும் செயல்படுத்தியபோது அம்மனிதர் தனது கரங்களை உயர்த்தி, ‘‘இப்பொழுது என்னால் பார்க்கமுடிகிறது. இப்பொழுது என்னால் பார்க்கமுடிகிறது’’ என்று சத்தமிட்டார். ‘பார்க்கமுடிகிறது என்று உமக்கு எப்படித்தெரியும்’ என்று கேட்டேன். ‘‘நீங்கள் அழகான தோற்றம் உடையவராக இருக்கிறீர்கள். உங்களை என்னால் பார்க்கமுடிகிறது’’ என்றார். அந்த 55வயதானவர் சொன்ன சாட்சியைகேட்டு கூட்டத்திற்கு வந்த அனைவரும் மகிழ்ச்சிக்கண்ணீர் வடித்தனர். இயேசுவுக்காக நம் கரங்களை ஒன்றுசேர்ப்போம்.

இச்சாட்சி இன்னொரு பெரிய பிரச்சினையைக் கொண்டுவரும் என்று எனக்கு கொஞ்சமும் தெரியாது. மதியவேளை செய்தியை முடித்துவிட்டு இறங்கும்போது பைத்தியமும் குருடும் செவிடுமான ஒரு பெண்ணை கூட்டத்திற்கு தூக்கிவந்தனர். அவளைக்கொண்டு வந்தவர்களிடம் இரவு செய்தி நேரத்திற்குப் பிறகு கொண்டுவரச்சொன்னேன். ஏனெனில் எனக்கு கொஞ்சம்

ஓய்வும் ஜெபமும் தேவைப்பட்டது. அந்தப் பெண் மூலம் பிசாசு, “இப்பொழுது நீ தொலைந்தாய், இப்பொழுது நீ என்ன செய்யப்போகிறாய்?” என்று பேசியது. ‘உன்னால் செய்யமுடியாத இந்தக்காரியத்தினால் மக்கள் இதுவரைபெற்ற அற்புதங்களும் சாட்சிகளும் இல்லாமல் போகப்போகிறது’ இதுபோன்ற இன்னும் அநேக எண்ணங்கள் என் மனதில் சிலநிமிடங்களுக்குள் ஓடிற்று.

மாலைநேரக்கூட்டத்திற்குப் பிறகு, அப்பெண்ணை மறுபடியும் சிலர் கொண்டுவருகிறதைப் பார்த்தவுடன் பயம் என்னைக் கவ்விப்பிடிக்க முயன்றது. நான் கர்த்தரிடம் கேட்டேன். ‘இளைப்பாறு’ என்று அவர் சொன்னார். அவரே எல்லாவற்றையும் ஆளுகை செய்துவருகிறார். பிசாசின் கிரியைகளுக்கு எதிராக வழக்கமாக தைரியமாக நிற்கிற நான் ஏன் என்னை பாதிக்க இடங்கொடுத்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. மறுநாள் காலை 6:45க்கு அவளை, மூன்று பேருடன் நான் தங்கியிருந்த விடுதிக்கு கொண்டுவரச்சொன்னேன். அவர்கள் சென்ற பின்னர் நான் ஜெபித்தேன். என் சந்தேகங்களைப் பாவம் என்று அறிக்கையிட்டேன். பின்னர் தைரியத்திற்காக தேவனிடம் விண்ணப்பித்து, அவளைப்பார்த்தபோது இழந்த தைரியத்தை திருப்பப் பெற்றுக்கொண்டேன்.

மறுநாள் காலை 6.30மணிக்கு எழுந்தபோது, “ எழும்பு, எல்லாம் முடிந்தது” என்ற பலமான உறுதியை என் மனதில் உணர்ந்தேன். ஜெபிப்பதையும் அழுவதையும் நிறுத்திவிட்டு புறப்பட ஆயத்தமாகுங்கள் என்று என்னோடு இருந்தவர்களிடம் சொன்னேன். அப்பெண்ணைச் சந்திப்பதற்கு நம்பிக்கையுடன் காத்துக்கொண்டிருந்தேன். கேள்வியினால் விசுவாசம் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தால் வரும். ஆனால் இப்பெண்ணால் பார்க்கமுடியாது; கேட்கமுடியாது; பைத்தியமாகவும் இருக்கிறாள், இப்படி இருக்க அவள் எப்படி அற்புதத்தைப் பெற்றுக்கொள்வாள்? என்று நினைத்து என் விசுவாசத்தை பலவீனப்படுத்த எனது ஐம்புலன்களுக்கு அனுமதிகொடுத்துவிட்டேன்.

கர்த்தருக்கு நன்றி! அவர்கள் வருகிற சமயத்தில் என் விசுவாசம் பலமடைந்து பழைய நிலைக்கு வந்தது விட்டது. அவளை கொண்டு வந்த பெண்ணிடம் அவள் தலையில் கைவைத்து அவள் சார்பாக அவளுடைய பாவங்களை அறிக்கையிடவும் பிசாசை விட்டுவிட்டு இயேசுவை ஏற்றுக்கொள்ளவும் சொன்னேன். அவளை அழைத்துவந்த அப்பெண் கீழ்படிந்தாள்; அதன் பின்னர் நாங்கள் ஆறுபடிகளை செயல்படுத்தினோம், தேவனுக்கு மகிமையாக அந்த 68வயதான மூதாட்டி பேசினாள், ஆனால் அவள் பேச்சை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவள் என்ன சொன்னாள் என்பதை அவளை அழைத்து வந்தவள் எங்களுக்கு புரியும்படி சொன்னாள். அவளால் எங்களைத் தெளிவாகப் பார்க்கமுடிந்தது. நாங்கள் அவளிடம் கேள்விகள் கேட்டோம் அம்மூதாட்டியும் பதில் சொன்னார்கள். நாங்கள் மகிழ்ச்சியில் துள்ளிகுதித்து நடனமாடினோம். வெற்றிமயமான சூழலோடு, நிகழ்ச்சி நடக்கும் ஒலிம்பிக் ஹோட்டலுக்கு சென்றோம். அன்றைய தினத்தில் நான் ஒரு பாடம் கற்றுக்கொண்டேன்.

கர்த்தரும், நம்மை குணப்படுத்துபவரும், அற்புதங்கள் செய்கிறவருமாகிய அவர் அற்புதம் செய்ய – அது சிறியதோ பெரியதோ, எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறார். அவளைக் கொண்டுவந்த அன்றே அப்பொழுதே நான் அசுத்தஆவியின் மீது அதிகாரத்தை பயன்படுத்தி அதைத் துரத்திவிட்டு நற்பலன் பெறுவதற்கு உதவாமல் அவர்களை ஏன் பிறகு வரச் சொன்னேன் என்று சிந்தித்தேன்.

இதைப்படித்துக்கொண்டிருக்கிற பிரியமானவர்களே! இயேசுவின் நாமத்தில் சகல முழங்கால்கள் யாவும் முடங்கும். ஆகவே உங்கள் பிரச்சினைகள் கஷ்டங்கள் எல்லாம் இயேசுவின் நாமத்திற்கு கீழ்ப்பட்டிருக்கிறது, பயப்படாமல் விசுவாசத்தில் காலடிஎடுத்துவைத்து உங்களது நிலைமையையும் பிரச்சினையையும் மாற்றுங்கள். நீங்கள் ஜெயங்கொண்டவர்கள். ஏனெனில் உங்களை அவர் உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரச்செய்திருக்கிறார். எல்லா துரைத்தனத்திற்கும், அதிகாரத்திற்கும் வல்லமைக்கும் கர்த்தத்துவத்திற்கும் மேலாக,

பிசாசினால் நெருங்க முடியாத உயரத்திலிருக்கிறீர்கள். பாவத்தையும், சாத்தானையும் உபத்திரவப்படுத்தும் அவனது ஏவலாட்களைவிடவும் உங்களுக்குள்ளிருப்பவர் பெரியவர். ஆகவே எழும்புங்கள்! அவைகளின் மீது அதிகாரம் செலுத்துங்கள்!

# பாகம் B

# சாபங்கள் (Curses)

## விளக்கம்:

'பிறர் மீது வன்முறையாக வெளிப்படுத்தும் தீமையான காரியந்தான் சாபமாகும்' என திறந்த வேதாகமமும் புதிய அமெரிக்க ஸ்டாண்டர்டு பைபிளும் கூறுகின்றது (A curse is a violent expression of evil upon others). 'சிலர் மீது அல்லது சிலவற்றின் மீது தண்டனையை, காயத்தை அல்லது அழிவை வருவிக்கப்பயன்படுத்தப்படும் வார்த்தை, சொற்றொடர் அல்லது வாக்கியந்தான் சாபமாகும்' என்று ஆக்ஸ்போர்டு சொல்லகராதி சொல்கிறது (Word, phrase or sentence calling for the punishment, injury or destruction of something or somebody).

அனேக மக்கள், குடும்பங்கள், சமுதாயங்கள், கிராமங்கள், நகரங்கள், ஏன் தேசங்கள் கூட ஏதோ ஒரு வகை சாபத்தின் கீழ் கட்டுண்டு கிடக்கிறது. கர்த்தரிடமிருந்து ஆசீர்வாதங்கள் வருவதற்கு சாபங்கள் தடையாக இருப்பதோடு அச்சாபத்தின் கீழ் இருக்கும் மக்களை பரிதாபத்திற்குரியவர்களாக மாற்றிவிடுகிறது.

## சாபங்கள் சும்மா வருவதில்லை (Curses do not just come):

> "அடைக்கலான் குருவி அலைந்துபோவதுபோலும், தகைவிலான் குருவி பறந்துபோவது போலும், காரணமில்லாமலிட்ட சாபம் தங்காது."
>
> நீதிமொழிகள் 26:2

சாபங்கள் என்பது மனிதர்கள் மேல் சும்மா வருவதில்லை. சரியான காரணமில்லாமல் ஒரு சாபம் நிலைத்து நிற்க முடியாது. உதாரணமாக சிமேயின் குடும்பத்தாரும் சவுல் ராஜாவின் வீட்டாரும் தாவீதை சபித்த காரியங்கள் நிறைவேறவில்லை (2சாமுவேல் 16:5-14). அதுமட்டுமல்ல கோலியாத்தும் தாவீதை சபித்தான் ஆனால் அவனுக்கு ஒன்றும் நேரவில்லை (1சாமுவேல் 17:43). தாவீதோ கர்த்தரின் நாமத்தினால் அவனை அதே நாளில் பட்டயத்தால் கொன்றுபோட்டான்.

பிறருக்கு நற்பலன் கொடுக்கிற ஜெபங்கள் உங்களுக்கு பலன்கொடுக்கவில்லை என்றால், இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் உங்கள் வாழ்வில் இப்படி

நடந்தது உண்டானால், நீங்கள் செய்யவேண்டிய மிகநல்ல காரியம், உங்களையும் உங்களை சூழ்ந்திருக்கும் நிலைமைகளை மறுபடியும் சரியாக பரிசோதித்துப் பாருங்கள். அப்படி செய்வதற்கு முன் இன்னொரு ஜெபக்கூட்டத்திற்கோ, ஊழியத்திற்கோ அல்லது உபவாசத்திற்கோ ஓடிச்செல்வதால் எந்த நற்பலனும் ஏற்படாது.

1992ஆம் ஆண்டு, மிக மோசமான நிலையிலிருந்த ஒரு சகோதரனுக்கு ஊழியம் செய்தேன். அவனுக்கு வேலை இல்லை; வறுமையின் கோரப்பிடியில் சிக்கியிருந்தான்; எல்லாவகையான பிரச்சினைகளும் அவருக்கு இருந்தது. எனினும் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியஞ்செய்து கொண்டிருந்தார். அவருக்காக மூன்றுமுறை விடுதலை ஊழியம் நடத்தியும் குறிப்பிடத்தக்க எந்த மாற்றத்தையும் காணமுடியவில்லை. ஆகவே, கிராமத்தில் வாழும் அவருடைய பெற்றோரை சென்று பார்த்து கேள்விகள் கேட்டு விசாரித்து அறிந்த பிறகு என்னிடம் ஜெபிக்கவரும்படி கூறினேன். ஆனால் அற்புதமாக அவருடைய தாயாரே அவரை பார்க்க வந்திருந்தார்கள். தாயாருடன் பலமணிநேரம் அமர்ந்திருந்து அவன் பிறந்த போது என்ன நடந்தது என்றெல்லாம் அநேக கேள்விகள் கேட்டு அறிந்து கொண்டார். அதன்பிறகு அவருடைய எல்லா பிரச்சினைக்களுக்கான மூல காரணம் (ஆணிவேர்) கிடைத்துவிட்டது என்று என்னிடம் வந்து சொன்னார்.

பிசாசோடு செய்த உடன்படிக்கையின்படி அதற்கு செய்யவேண்டியதை அக்குடும்பத்தார் செய்யாதபடியால் பிசாசுகள் எரிச்சலோடு இருந்தன. ஆகவே அவைகள் அவனால் தாங்க முடியாதஅளவுக்கு உபத்திரவப்படுத்தின. பிறகு நாங்கள் ஜெபித்து, அந்த உடன்படிக்கையினால் ஏற்பட்ட உடன்பாடுகளையும் சாபங்களையும் ரத்துசெய்துவிட்டு அதன் வல்லமையை இல்லாமலாக்கினோம். கர்த்தருக்கு மகிமையாக, மறுமுறை அவர் வந்தபோது நிலைமைகள் எல்லாம் முற்றிலும் மாறியிருந்தன. அவருக்கு வேலைகிடைத்தது; பின்னர் மோட்டார் சைக்கிள் வாங்கினார்; இப்படியாக கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்த்ததினால், விடுதலையும் சுகமும் அளிக்கும் ஊழியபாடசாலையில் சேர்ந்தார். இப்பொழுது அவர் வசதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதோடு கட்டுகளுக்குள்ளிருக்கும் மக்களை விடுதலையாக்கிக் கொண்டிருக்கிறார். 'தேவன்-இதை-செய்வார்-ஊழியங்களில்'(God–Will-Do-It-Ministries) உள்ள செயலாளர்களில் ஒருவராக இருக்கிறார்.

## யாரைச் சபிக்கக்கூடாது?

கீழே சொல்லப்பட்டவர்களின் மீது எச்சாபமும் போடக்கூடாது என்று வேதாகமம் கூறுகிறது.

### 1. பெற்றோர்கள் (Parents)

> "தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிறவன் நிச்சயமாய்க் கொலை செய்யப்படக்கடவன்." யாத்திராமம் 21:17

ஒருவனை போஷித்து, வளர்த்து ஆளாக்கும்படி பாடுபட்ட தகப்பனையும் தாயையும் சபிக்கிறவர்களுக்கு எதிராக தேவவார்த்தை இருக்கிறது. பெற்றோர்கள் மாம்சத்தில் தைக்கப்பட்ட முள்ளாக இருக்கிறார்களோ இல்லையோ, ஆனால் நாம் இப்பூமியில் நன்றாயிருப்பதற்கும் நீடிய நாட்கள் வாழ்வதற்கும் கர்த்தருக்குள் நம் பெற்றோருக்கு கீழ்படியவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நாம் அவர்களுக்காக ஜெபிக்கவேண்டுமே தவிர அவர்களைச் சபிக்கக்கூடாது. *"பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது." எபேசியர் 6:1-3*

## 2. ஆட்சியாளர்கள் (Rulers)

> “நியாயாதிபதிகளைத் தூஷியாமலும், உன் ஜனத்தின் அதிபதியைச் சபியாமலும் இருப்பாயாக.” - யாத்திராகமம் 22:28

> “அதற்குப்பவுல்: சகோதரரே, இவர் பிரதான ஆசாரியரென்று எனக்குத்தெரியாது; உன் ஜனத்தின் அதிபதியைத் தீது சொல்லாயாக என்று எழுதியிருக்கிறதே என்றான்.” –அப்போஸ்தலர் 23:5

ஆளுகைசெய்கிறவர்கள் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். தீய பாபிலோனிய அரசரான நெபுகாத்நேச்சரைக் குறித்து:

> “ராஜாவே, நீர் ராஜாதி ராஜாவாயிருக்கிறீர்; பரலோகத்தின் தேவன் உமக்கு ராஜரீகத்தையும், பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார். சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப்பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான அந்தத்தலை நீரே.” தானியேல் 2:37,38

தேவன் ஒருவனை உயர்த்தி இன்னொருவனை தாழ்த்திப்போடுகிறார் என்று வேதவசனம் கூறுகிறது. ஆகவே விசுவாசிகள் தங்களை ஆளுகின்றவர்களைக் குறித்து தீமையாக பேசவோ சபிக்கவோ கூடாது. 1திமோத்தேயு 2:1-4இல் பவுலினால் சொல்லப்பட்ட செய்தி நமக்கு எச்சரிக்கையாக இருக்கட்டும்.

> “நான் பிரதானமாய் சொல்லுகிற புத்தியென்னவெனில் எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப்பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.”

## 3. செவிடன் (The Deaf):

> “செவிடனை நிந்திக்காமலும், குருடனுக்கு முன்னே தடுக்கலை வையாமலும் உன் தேவனுக்குப் பயந்திருப்பாயாக.” லேவியராகமம் 19:14

நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பது செவிடனுக்கு கேட்காது, ஆகவே அவன் நீங்கள் எதிர்பார்க்கிறதற்கு எதிரிடையாக காரியங்ளைச் செய்தால் நீங்கள் அவனை சபிக்கக்கூடும். அதிலும் குறிப்பாக அவன் படிப்பற்றவனாக இருந்தால் சுற்றிலும் நடப்பதை புரிந்துகொள்ள முடியாதவனாக இருப்பான். காதுகேளாதவன், உங்களுக்கு எதாவது தீங்குசெய்தால் அவன்மேல் இரக்கம்கொண்டு அவனை மன்னித்து விடவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். அவன்மீது சாபங்களை மழைபோல் பொழிந்தாலும் அது தேவன் அருளிய வசனத்திற்கு முரணாக இருப்பதால் அத்தகைய சாபம் அவன் மேல் நிலைநிற்காது.

## 4. சத்துருக்கள் (Enemies)

“எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்கிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்.” – லூக்கா 6:27,28

நம்மை வெறுக்கிறவர்களை சபிப்பதை வேதாகமம் கண்டிக்கிறது; ஆனால் அதற்குப்பதில் நாம் அவர்களை நேசிக்க வேண்டும்; நன்மைசெய்ய வேண்டும்; ஆசீர்வதிக்க வேண்டும்; அவர்களுக்காக ஜெபிக்கவும் வேண்டும். இவ்வாறு செய்வதின் மூலம் நாம் எரிதழல்களை அவர்கள் மேல் குவித்துக்கொண்டிருக்கிறோம்.

## 5. தேவன் (God)

“அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனைவிடும் என்றாள். அதற்கு அவன் நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையில் நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான்; இவைகள் எல்லாவற்றிலும் யோபுதன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை.” யோபு 2:9,10

பிரச்சினைகள் வந்தாலும் தீங்கு நாட்கள் வந்தாலும் உங்களது அனைத்து பயங்களையும் சஞ்சலங்களையும் தவிப்புகளையும் சுருட்டி தள்ளிவிட்டு தேவனுக்கு பயந்திருக்க வேண்டுமே தவிர தேவனை சபிக்கக்கூடாது. தேவன் வல்லமையுள்ள சிருஷ்டிகர். அவர் ஆரம்பத்திலிருந்து முடிவையும் முடிவிலிருந்து அதன் ஆரம்பத்தையும் அறிவார். அவர் நம்மை பொல்லாங்கினால் சோதிக்கிறவராக இல்லாமல் நம்மை நேசிக்கிற தகப்பனாக இருக்கிறார் என்பதை நாம் அறிந்து, அவரை அப்படியே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நமக்கு என்ன நேர்ந்தாலும் அதை ஒரு பொருட்டாக எண்ணாமல் நாம் முற்றிலும் தேவனையே சார்ந்துகொண்டு அவரை நேசிக்கவேண்டுமே தவிர அவரை சபிக்கக் கூடாது.

## 6. தேவஜனங்கள் (God’s people)

“நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.” – ஆதியாகமம் 12:2

விசுவாசிகளும், தேவபிள்ளைகளும் ஏற்கெனவே ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள் (*எபேசியர் 1:3*). அவர்களை சபிக்கிறவர்கள் யாராக இருந்தாலும் தேவனுடைய சாபத்தை வருவித்துக் கொள்கிறார்கள். அவர்களை ஆசீர்வதிக்கிறவர்கள் யாராக இருந்தாலும் தேவன் அவர்களை ஆசீர்வதிக்கிறார். இவர்கள் மரணத்திலிருந்து ஜீவனுக்கும், தோல்வியிலிருந்து ஜெயத்திற்கும், வீழ்ச்சியிலிருந்து வெற்றிக்கும் கடந்துவந்த விசேஷமான மக்களாக இருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய கண்ணின்மணியாக இருப்பதினால் இவர்களை சபிக்கிறவர்கள் தேவனையே சபிக்கிறார்கள்; அப்படிச் செய்யும்போது தேவன் என்ன செய்வார் என்பதை கற்பனை செய்துகொள்ளுங்கள்.

தேவஜனங்களை சபிக்கும்படி பாலாக், பிலேயாமுக்கு கூலிகொடுத்தான். ஆனால் பாலாம் சொன்ன அறிக்கையோ:

“தேவன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி?” – எண்ணாகமம் 23:8

ஆனால் எண்ணாகமம் 24:10 சொல்கிற உண்மை என்வென்றால்,

> “அப்பொழுது பாலாக் பிலேயாமின்மேல் கோபம் மூண்டவனாகி, கையோடே கைதட்டி, பிலேயாமை நோக்கி: என் சத்துருக்களைச் சபிக்க உன்னை அழைத்தனுப்பினேன்; நீயோ இந்த மூன்று முறையும் அவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தாய்.”

தேவ ஜனங்களை சபிக்கவோ அல்லது அவர்களுக்கு எதிராக தீமையாய் பேசவோ கூடாது. அவர்கள் நம்மை உபத்திரவப்படுத்தினால், நாம் அவர்களுக்காக ஜெபிக்கவும், அவர்களுக்கு நன்மைசெய்யவும், அவர்களிடம் அன்புகாட்டவும் வேண்டும்.

## அப்படியானால் யார் சபிக்கப்பட்டவர்கள்?
## (Who then is cursed?)

### 1. ஒரு சமுதாயம் அல்லது ஒரு நிலம் ஒரு சாபத்தின் கீழிருக்க முடியும் (A community or land could be under a curse)

இப்போது பிரசங்கம் செய்யப்பட்டிருப்பதைப்போல 50வருடங்களுக்கு முன்பு நைஜிரியாவில் இயேசுவின் நற்செய்தி பிரசங்கிக்கப்படவில்லை. சில சமுதாயத்தினர் ஆசீர்வாதங்களுக்காகவும், சுகமடைவதற்காகவும், பாதுகாப்புக்காகவும், பலமடைவதற்காகவும், பிரபலமடைவதற்காகவும் அவர்கள் ஆராதித்துவந்த விக்கிரகங்கள் மூலமாக பிசாசுகளைத் தொடர்புகொண்டு அவைகளையே சார்ந்து கொண்டிருந்தனர். நம்மில் சிலர், பேய்கள் கட்டளையிட்டபடி ஒழுங்காக பலிகளை செலுத்தி பண்டிகைகளை கொண்டாடி வரும் சில புண்ணிய ஸ்தலங்களை பார்த்த சூழலில் வளர்ந்தவர்களாக இருக்கக்கூடும்.

சில சமுதாயத்தினரின் ராஜா இறந்துபோனால் அவருடைய கல்லறையின் கீழ் இன்னொருநபரை உயிரோடே புதைத்துவிடுவார்கள்; இன்னும் சில சமுதாயத்தினர், ராஜாவின் கீழே புதைக்கப்படவேண்டிய நபரைக்கொன்று அவரின் தலையை மட்டும் வெட்டி ராஜாவின் கல்லறைக்குக்கீழே புதைத்துவிடுவார்கள். இவைகளைப்பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இருக்கிறது, இவைகளெல்லாம் உண்மை. சிலநாடுகளில் இறந்த குழந்தைகளையும் தொழுநோயாளியாக இருந்து இறந்தவர்களையும் புதைப்பதற்கென்று நிலங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. சில சமுதாயத்தினர் மிகமோசமானவர்களாக இருந்தனர். அவர்கள், அநேக பெண்களை கற்பழித்து அவர்களை கற்பிணியாக்கி வாழ்க்கையில் அவர்களுக்கிருந்த வேலைகளை (careers) கெடுத்துபோடுவார்கள். இதுபோன்ற ஏராளமான நாசவிளைவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளில் சில சம்பவங்கள் வாசகர்களின் நினைவில் இன்னும் பசுமையாக இருக்கக்கூடும். இதுபோன்ற தீயபழக்கவழக்கங்களானது அந்நிலத்தின்மீதும் அல்லது அச்சமுதாயத்தினர் மீதும் சாபங்களை கொண்டுவருகிறது.

அப்படிப்பட்ட தீயநகரங்களில் ஒன்றுதான் எரிகோ. அவர்களுக்கு எதிராக சென்று யுத்தம் செய்யும்படி தேவன் யோசுவாவுக்கு சொன்னபோது அவன் கீழ்படிந்தான். அந்நகரத்தைக் கைப்பற்றி அந்நிலத்தை சபித்தான்.

> “அக்காலத்திலே யோசுவா: இந்த எரிகோ பட்டணத்தைக் கட்டும்படி எழும்பும் மனுஷன் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்பட்டிருக்கக் கடவன்; அவன் அதின் அஸ்திபாரத்தைப் போடுகிறபோது தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிறபோது தன் இளைய குமாரனையும் சாகக்கொடுக்கக் கடவன் என்று சாபம் கூறினான்.” -யோசுவா 6:26

ஜனங்கள் அதைகேட்டார்கள், அதைப்பற்றி மறந்துவிட்டார்கள். ஆனால் ஒரு சாபத்தை நமது விருப்பம்போல் ஒதுக்கிவைத்துவிட முடியாது. எரிகோ நாடானது குடியிருக்க வசதியற்று மோசமாக மாறிவிட்டது. அந்த நிலத்தின் தண்ணீர் மோசமானது என்றும் அதைக்குடித்த பெண்கள் மலடிகளானார்கள் என்றும் நமக்குச்சொல்லப்படுகிறது. ஒரு சபிக்கப்பட்ட நிலத்தில் வாழ்வது எவ்வளவு பரிதாபமானது! (தேவனுடைய ஜனமாகிய) 50 தீர்க்கதரிசன புத்திரர்களும்கூட உபத்திரவப்பட்டார்கள்:

> ''எரிகோவிலிருந்து அவனிடத்திற்குத் திரும்பிவந்தபோது, அவன் இவர்களைப் பார்த்து: போகவேண்டாம் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா என்றான். பின்பு அந்தப் பட்டணத்தின் மனுஷர் எலிசாவை நோக்கி: இதோ எங்கள் ஆண்டவன் காண்கிறபடி இந்தப் பட்டணம் குடியிருப்புக்கு நல்லது; தண்ணீரோ கெட்டது, நிலமும் பாழ்நிலம் என்றார்கள். அப்பொழுது அவன்: ஒரு புதுத்தோண்டியை எடுத்து, அதிலே உப்புப்போட்டுக் கொண்டு வாருங்கள் என்றான்; அதை அவனிடத்தில் கொண்டு வந்தபோது, அவன் நீரூற்றண்டைக்குப் போய், உப்பை அதிலே போட்டு: இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். எலிசா சொன்ன வார்த்தையின்படியே அந்தத்தண்ணீர் இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி ஆரோக்கியமாயிற்று.'' -2இராஜாக்கள் 2:18-22

ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட தேசமானது சபிக்கப்பட்ட தேசம்போலிருக்காது, அதோடு அதனை ஒப்பிட்டுப்பார்க்கவும் முடியாது.

> ''அவன் நாட்களிலே பெத்தேல் ஊரானாகிய ஈயேல் எரிகோவைக் கட்டினான்; கர்த்தர் நூனின் குமாரனாகிய யோசுவாவைக் கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே, அவன் அஸ்திபாரத்தைப் போடுகிறபோது, அபிராம் என்னும் தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிறபோது செகூப் என்னும் தன் இளையகுமாரனையும் சாகக்கொடுத்தான்.'' – 1இராஜாக்கள் 16:34

வேதாகம குறிப்புகளின்படி, ஒரு சாபமானது ஜனங்களையும், தேசங்களையும், அல்லது நிலங்களையும்கூட எரிகோவைப்போல் நிரந்தரமாக பாதிக்கக்கூடும் ஆனால் எலிசாவினால் அச்சாபம் நிறுத்தப்பட்டது.

1990 டிசம்பர் மாதத்தில் எனுகு மாநிலத்திலுள்ள எகா-அமு.ஃ.பு என்ற இடத்தில் வல்லமையான ஜெபகூட்டம் நடத்தினேன். அப்பகுதியிலுள்ள சபைகளும் கிறிஸ்தவ குழுக்களும் சேர்ந்து எகா-அமு.ஃ.பு விசுவாச ஐக்கியத்தை உருவாக்கினார்கள். அந்த முழுநிலப்பகுதியும் ஒரு சாபத்தின் கீழ் இருப்பதாக உணர்ந்தார்கள். தீயபழக்கவழக்கங்களைக் கடைபிடித்து பிசாசை மேன்மைப் படுத்தும் அநேக விக்கிரக ஆராதனைக்காரர்கள் அங்கு இருந்தனர். அவர்களுக்கு சக்திவாய்ந்த பேய்த்தனமான தெய்வம் ஒன்று இருந்தது, அது வெளியே செல்லும் வேளையில் எவரையாவது பிடித்துக்கொண்டால் அதைத் துதிக்கும் மந்திரங்களைச் சொல்லவேண்டும், சொல்லத்தவறினால் நினைவை இழக்கும் அளவுக்கு அவர்களை அடித்துவிடும். ஒருமுறை கர்ப்பிணியாக இருந்த ஒரு சகோதரி அதை துதிக்க மறுத்ததால் அவள் அடிக்கப்பட்டாள். இப்பிசாசை வணங்கும் குழுவினர் ஒவ்வொருவரையும் கண்டு மக்கள் பயந்தார்கள்.

'ஓடோ' என்ற பெயருள்ள அந்த பிசாசு இருந்த கோயிலையும் அது அமைந்திருந்த காட்டையும் எனக்கு காட்டினார்கள். நான் கிறிஸ்தவ பொதுகூட்டம் நடத்திக்கொண்டிருந்த அதே நாட்களில் அங்குள்ள மக்கள் அப்பிசாசுக்கு விருந்துகொடுத்து கொண்டாடிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு மாலைப்பொழுதிலும் குறிப்பிட்ட நேரத்திற்குள் கூட்டத்தை முடித்துவிடவேண்டும் என்றும் அப்போதுதான் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒவ்வொரு சகோதரர்களும் அந்த

மந்திரவாதகுழுவினரால் பாதிக்கப்படாதபடி பாதுகாப்பாக வீடுபோய் சேரமுடியும் என்றும் சொல்லியிருந்தார்கள். ஆகவே அந்நிலப்பகுதியின் மீது இருந்த பிசாசின் ஒவ்வொரு உடன்படிக்கைக்கும் சாபத்துக்கும் ஒரு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும் என்று விசுவாசிகள் விரும்பினார்கள். அச்சமுதாயத்தினரிடையே எங்கும் சாபத்திற்கு அடையாளமான வறுமையும் ஏமாற்றமும் காணப்பட்டது. அந்த முழுநிலப்பகுதியில் இருந்த மக்கள் மீது எனக்கு மிகுந்த மனஉருக்கம் உண்டாயிற்று.

தேவவார்த்தையை சுமார் 3000 ஜனங்களுக்கு பிரசங்கித்தேன். ஒரே இரவில் சுமார் 1500பேர் இயேசுவை ஏற்றுக்கொள்ள முன்வந்தனர். நான் ஜெபித்தேன்; அழுதேன்; அம்முழுசமுதாயத்தை சார்ந்த மக்களுக்காக மன்றாடினேன். அந்த தேசத்தைக்குறித்து நான் என்னவெல்லாம் விரும்புகின்றேனோ அதையெல்லாம் நிறைவேற்றி கனப்படுத்துவேன் என்று என் இதயத்தில் ஆண்டவர் பேசினார். நான் பரவசப்பட்டேன். அந்நாட்டிற்கும் அம்மக்களுக்கும் நாளையத்தினத்தில் தேவன் விடுதலை கொடுக்கப் போகிறார் என்று சபையாருக்கு உறுதி கூறினேன். ஒரு குழுவினர் என்னோடிருந்து உபவாசித்து ஜெபித்தார்கள். மறுநாள் டிசம்பர் 29ஆம் நாள், அந்த நகரில் குடியிருக்கிற, மறுபடியும் பிறந்து பரிசுத்த ஆவியினால் நிரம்பிய ஒரு மனிதனையும் ஒரு மனுஷியும் அக்கூட்டத்தினரின் முன்பாக வந்து அந்த தேசத்தின் பாவங்களை அறிக்கையிட்டு, இருளின் வல்லமைகளோடு அவர்களுக்கு இருக்கும் ஒவ்வொரு உடன்படிக்கையையும் உடைத்து அந்த முழுசமுதாயத்தின் மீதும் போடப்பட்ட சாபத்தை செயலற்றதாக்கும்படி நான் வேண்டிக்கொண்டேன். அந்த இரவு, அந்த முழு இடமும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தால் நிரப்பப்பட்டது. ஏராளமானவர்கள் அன்று இரட்சிக்கப்பட்டார்கள். மூன்று குருடர்கள் முன்வந்தார்கள், தேவனுடைய அபிசேகத்தால் அவர்களது கண்களின்மீது இருந்த பிசாசின் நுகங்கள் உடைக்கப்பட்டு அவர்கள் கண்பார்வையை பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் குணமான சாட்சியை சொன்னபோது அச்சாட்சியானது அந்த முழுசமுதாயத்தையும் அசைத்துவிட்டது. அதே நாளில்தானே இன்னும் அநேக அற்புதங்கள் நிகழ்ந்தது. இருளின் வல்லமையின் அடிமைத்தளையினின்று அம்முழுநகரமும் விடுவிக்கப்பட்டது. தேவமக்கள் ஜெபித்தபோது வறுமையும் தோல்வியும் துரத்தப்பட்டன.

ஐந்து மாதங்களுக்குப் பிறகு, இப்பெருங்கூட்டத்திற்கு அழைத்தவர் இரண்டு வாகனங்களை வாங்கினார், ஒன்று அவருக்கும் இன்னொன்று அவரது மனைவிக்காகவும். உங்களது சமுதாயத்தில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று எனக்குத் தெரியாது. விரும்பத்தக்கதாக இல்லை என்றால் இயேசுவின் நாமத்தில் தீர்வு இருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் சாபத்தினின்று இயேசு நம்மை விடுவித்திருக்கிறார். இக்கட்டினின்று வெளியே வர ஒரு வழி இருக்கிறது.

### 2. ஒரு தனிநபர் அல்லது ஒரு குடும்பமானது ஒரு சாபத்தின் கீழ் இருக்கக்கூடும் (An individual or a family could be under a curse).

சாபங்கள், பேய்த்தனமான வலிமைகொண்டதாகவும் அதனால் கட்டப்பட்டிருக்கும் எவருடைய வேலையிலும் பேரழிவுகளை உருவாக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

> “ரூபனே, நீ என் சேஷ்டபுத்திரன். நீ என் சத்துவமும், என் முதற்பெலனுமானவன். நீ மேன்மையில் பிரதானமும் வல்லமையில் விசேஷமுமானவன்.
> தண்ணீரைப்போல தளம்பினவனே, நீ மேன்மை அடையமாட்டாய். உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேல் ஏறினாய். நீ அதைத் தீட்டுப்படுத்தினாய். என் படுக்கையின்மேல் ஏறினானே.” ஆதியாகமம் 49:3-4

தகப்பனின் திருமணம் செய்யாமல் வாழ்ந்த பெண்களில் ஒருத்தியோடு ரூபன் உடலுறவு கொண்டான். அவனுடைய தகப்பனார் அதை கேட்டு அமைதியாக இருந்தார். ஆனால் அவர் மரணமடையும் வேளையில் அச்செயலுக்காக அவர் ரூபனை ‘நீ மேன்மையடைய மாட்டாய்’ என்று சொல்லி சபித்தார்.

“ரூபன் இஸ்ரவேலுக்கு முதற்பிறந்த சேஷ்டபுத்திரன்; ஆனாலும் அவன் தன் தகப்பனுடைய மஞ்சத்தைத் தீட்டுப்படுத்தினபடியினால், கோத்திரத்து அட்டவணையிலே அவன் முதற் பிறந்தவனாக எண்ணப்படாமல், அவனுடைய சேஷ்டபுத்திர சுதந்திரம் இஸ்ரவேலின் குமாரனாகிய யோசேப்பின் குமாரருக்குக் கொடுக்கப்பட்டது. யூதா தன் சகோதரரிலே பலத்தினால் ராஜாதிபத்தியம் அவன் சந்நிதியில் உண்டானது; ஆகிலும் சேஷ்டபுத்திர சுதந்திரம் யோசேப்புடையதாயிற்று.” - 1நாளாகமம் 5:1.2

ரூபன் மீது யாக்கோபு சொன்ன சாபமானது, முதற்பிறந்தவனாகிய அவனுக்கு வரவேண்டிய சட்டபூர்வமான அந்தஸ்தையும் மதிப்பையும் அவனைவிட்டு நீக்கிப்போட்டது. அது மட்டுமல்லாமல் அவன் இருக்க வேண்டிய இடத்தில் யோசேப்பின் பிள்ளைகளாகிய இப்ராகிம் மற்றும் மானாசே என்பவர்கள் அமர்த்தபட்டனர். இயேசுவின் நாமத்தில் சாபங்களை செயலற்றுப் போகச்செய்யாவிட்டால், அதனால் அது அந்நபருக்கோ, அக்குடும்பத்தாருக்கோ நிரந்தரமான சேதத்தை உருவாக்கமுடியும்.

# அத்தியாயம். 6

# சாபங்கள் எப்படி வருகின்றன?

**(How Curses Come?)**

ஆசீர்வாதத்திற்கு நேர் எதிரான வார்த்தை சாபமாகும். சாபமானது ஒருவரை தோல்வியடையவும், பாடுபடவும் அல்லது துயரச் சம்பவங்களை நேரிடவும் செய்கிறது. ஆசீர்வாதங்களை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு இது தடைசெய்வதோடு தேவன் அவர்களுக்காக ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் நன்மைகள் எவைகள் என்பதை அறியாதபடியும் தடுக்கிறது. சாபங்கள் பொதுவாக கீழே குறிப்பிடப்பட்ட வழிகள் மூலமாக வருகிறது.

## 1. ஒப்பந்தத்தை கடைபிடிக்காததால் (உடன்படிக்கையை உடைத்துப் போடுவதால்) (Not keeping to Agreement – Breaking Covenants):

நீங்கள் ஒருவரோடு ஒரு ஒப்பந்தம் செய்யும்போது, “நாம் ஒருவரையொருவர் சார்ந்துள்ளோம், நம்பியுள்ளோம், நாம் கொடுத்த வாக்குறுதிகளை காத்துக்கொள்வோம்” என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்கிறீர்கள் என்று அர்த்தம். ஒப்பந்தத்திலுள்ள ஒரு கட்சிக்காரர் வேதனைப்படுத்தப்பட்டால், காயப்படுத்தப்பட்டால் அல்லது ஏமாற்றப்பட்டால், அப்படி செய்த கட்சிக்காரர்மீது அது ஒரு சாபத்தை கொண்டுவருகிறது (யோசுவா 9:18; 2சாமுவேல் 21:1-6). இப்படிப்பட்ட ஒப்பந்தங்களின் மூலம் அநேக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிறந்தநாள் முதலே அநேக குழந்தைகள் விக்கிரகங்களுக்கு அற்பணிக்கப்பட்டிருப்பதால் அவர்களெல்லாரும் விக்கிரகங்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறார்கள். அப்படிப்பட்ட மக்கள் அத்தகைய ஒரு சாபத்தின் கீழ் இருப்பதால் அச்சாபங்களையெல்லாம் இயேசுவின் நாமத்தில் நிராகரித்தால்தான், ரத்துசெய்தால்தான் (renounce) அவர்கள் விடுதலையாக முடியும்.

> *ஒரு முறை 'மறுபடியும் பிறந்து' விட்டாலே பழையவைகள் எல்லாம் கடந்து போய்விட்டன, பழைய சாபங்களும் உடன்படிக்கைகளும் அதோடுபோய்விட்டன என்று சிலர் எண்ணுகின்றனர். அது உண்மையல்ல.*

இரட்சிக்கப்பட்டபிறகும் "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்." என்று களங்கமில்லாத தேவவார்த்தை சொல்கிறது (பிலி 2:12). மறுபடியும் பிறந்த பிறகும்கூட சாபத்தையும் அதோடு சம்பந்தமானவைகளையும் நிர்மூலமாக்க எதாவது செய்தாக வேண்டும்.

### 2. பரம்பரையாக பெற்றோரிடமிருந்து வருகின்றன (Through inheritance from parents):

> "நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்." – யாத்திராகமம் 20:5

பிறப்பதற்கு முன்னதாகவே அநேக சகோதரர்கள், அவர்களது முன்னோர்களால் செய்யப்பட்ட காரியங்களின் விளைவாக இப்போது துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் தகப்பன் மீதும், உங்கள் தாத்தா பாட்டி மீதும், அவர்களது பெற்றோர்கள் மீதும் எவ்வகையான தீமைகளெல்லாம் வந்ததோ, அது வேதவசனத்தின்படி உங்களையும் கூட பாதிக்கக்கூடும். ஏன்? நம்மில் சிலர் சிறுவயதாயிருந்தபோது ஜூ ஜூ வீடுகளிலும் விக்கிரகங்களுக்கும் செலுத்தப்பட்ட பலிகளை சாப்பிட்டதுண்டு. சாத்தானின் அபிஷேகத்தினால் சபிக்கப்பட்ட அந்த ஆகாரங்களானது ஜீரணமாகி அதன் கொடியவிளைவுகள் இரத்த ஓட்டத்தோடு கலந்திருக்கக் கூடும். இயேசுவின் இரத்தத்தால் மட்டுமே அச்சாத்தானின் அபிஷேகத்தை செயலிழக்கச்செய்யமுடியும் அப்படிச் செய்யாவிட்டால் குடும்பத்தில் குழந்தைகள் பிறக்கும்போது அச்சாபமானது அவர்கள் மீதும் கடத்திவிடப்படுகிறது. தேவன் நமக்கு உதவிசெய்வாராக!

### 3. வேண்டுமென்றே பெற்றோர் செய்த பாவங்களால் வந்த விளைவு (Consequences of Parents's Deliberate Sin):

2சாமுவேல் 12:10-12, 2சாமுவேல் 16:21-22, மற்றும் 1சாமுவேல் 2:23-25. தாவீது ராஜாவின் வாழ்க்கையை பார்க்கும்போது அவனது மகன்களில் ஒருவன் அவனது மகள்களில் ஒருத்தியிடம் ஒழுக்கக்கேடாய் நடந்துகொள்கிறான். அதுமட்டுமல்ல, அவனது இன்னொரு மகனான அப்சலோமின் மீதும் பிசாசின் விசேஷ அபிஷேகம் இருந்ததால் அனைத்து இஸ்ரவேலருக்கு முன்னிலையிலும் சூரியனுக்கு முன்பாகவும் தகப்பனாருடைய பத்து மறுமனையாட்டிகளோடு ஒரே வேளையில் முறைகேடாக நடந்துகொண்டான். என்ன தைரியமான வெட்கங்கெட்ட செய்கை அது. பாலியலில் செய்யப்பட்ட எல்லா சாதனைகளையும் அவன் உடைத்து பாவத்தில் சாதனைப்படைத்துவிட்டான். "தாவீது பாவத்தை அறிக்கை செய்து மனந்திரும்பிவிட்டானே ஏன் இப்படி நடக்க வேண்டும்?" என்று ஒருவேளை நீங்கள் என்னிடம் கேட்கக் கூடும். அவன் மனந்திரும்பிவிட்டது உண்மைதான். பாவமானது அறிக்கை செய்யப்பட்டு விட்டுவிடப்பட்டு மறந்துபோனாலும் அதின் பின்விளைவை, இயேசுகிறிஸ்துவின்

பெயரிலும் இரத்தத்திலும் உள்ள வல்லமையையும் அபிஷேகத்தையும் பயன்படுத்தி உடைத்துபோட்டாகவேண்டும்.

### 4. எதிர்மறையான வார்த்தைகள் (Negative Words):

சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் மீது எதிர்மறையான (பாதகமான) வார்த்தைகளை சொல்வதில் விருப்பமுடையவர்களாக இருக்கின்றனர். ''முட்டாளே, அறிவுகெட்டவனே, புத்தியில்லாதவனே, உருப்படாதவனே, ஒன்றுக்கும் உதவாதவனே, நீ ஒருபோதும் முன்னேறமாட்டாய்'' என்றெல்லாம் சொல்வார்கள். அப்படி எவராவது எதாவது உங்கள் மீது சொல்லப்பட்டிருந்தால் உடனே அங்கேயே அப்போதே உங்கள் மனதுக்குள்ளேயாவது அதைப்புறக்கணித்துவிடுங்கள்; நிராகரித்து, ரத்துசெய்து விடுங்கள். அப்படி செய்யாவிட்டால் சொன்னபடியே நடந்துவிடக்கூடும்.

### 5. வேண்டுமென்றே தேவனுக்கு கீழ்படியாமலிருந்ததால் (Deliberate Disobedience to God):

> ''சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு, நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல்,'' - எபிரேயர் 10:26

பணம் சம்பாதிப்பதற்காக எதையும் செய்யக்கூடியவர்களாக ஏராளமான கிறிஸ்தவர்கள் இருப்பது துக்கப்படவேண்டிய காரியமாக இருக்கிறது. பொய்யான காரியத்தைத்திட்டமிட்டு தங்கள் சித்தப்படி பொய்யை நிறைவேற்றி ஒழுக்கங்கெட்ட காரியத்திற்குள் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். இவைகளெல்லாம் ஒரு சாபத்தை கொண்டுவருகிறது.

> ''இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின் படியும் கட்டளைகளின் படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதே போவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப்பலிக்கும். – உபாகமம் 28:15

### 6. கர்த்தருடைய மகிமையை சுயநலத்திற்காக பயன்படுத்துவதால் (Misappropriation of God's Glory):

> ''நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்.'' – ஏசாயா 42:8

இந்த இடத்தில்தான் அநேக ஊழியக்காரர்கள் கவனமாக இருந்தாக வேண்டும். 'நான் செய்தேன், நான் சொன்னேன், நான் சொன்னது போல அல்லது நான் செய்ததுபோல அற்புதம் நடந்தது' என்று சொல்கிறார்கள். சிலர் பேசுவதைப்பார்த்தால் ஆண்டவர் அல்ல மனிதனாகிய அவர்கள்தான் செய்கிறதுபோலத்தோன்றும். நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் தேவனுக்குரிய மகிமையை நாம் எடுத்துக்கொள்ளாமல் அவருக்கே செலுத்த முடியும் (மல்கியா 2:2).

### 7. தசமபாகங்களையும் காணிக்கைகளையும் தனக்கென்று பயன்படுத்துதல் (Embezzling Tithes and Offerings):

> ''மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும்

காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்.'' -மல்கியா3:8-9

ஆகவே, இன்று சில கிறிஸ்தவர்கள் பற்றாக்குறையில் பாடுபடுவதும் வறுமையில் வாடுவதும் ஆச்சரியமில்லை. ''அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை.'' என்று ஆதிசபையைக்குறித்து அப்போஸ்தலர் 4:34இல் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது அநேக கிறிஸ்தவர்கள் வாங்குவதற்கு முந்திக்கொள்கிறார்களே தவிர இயேசுவின் நற்செய்தி ஊழியங்களையும் தங்களுடனிருக்கும் வசதிகுறைந்த சகோதரர்களையும் ஆதரிப்பதற்கு முன்வருவதில்லை. பிறகு கொடுப்பேன் என்று வாக்குறுதி கொடுத்து அநேகர் தசமபாக காணிக்கைகளை கொடுக்காமலே காலங்களைக்கடத்தி வருகிறார்கள்.

*எச்சரிக்கை*: இம்மாதம் தசமபாககாணிக்கையை செலுத்தாமல் பிறகு செலுத்தலாம் என்று உங்களைத் தாமதப்படுத்துகிற பிரச்சினையானது அடுத்த மாதம் அதிகரிக்கககூடும், ஒருவேளை இருமடங்காகக்கூடும். ஆகவே இப்போதே தசமபாகங்களையும் காணிக்கைகளையும் உடனடியாக செலுத்துவிடுங்கள். ஏனென்றால் தேவனுடைய வார்த்தையானது மிகஅவசரமாக பிரசங்கிக்கப்படவேண்டியதாய் இருக்கிறது. இதற்கு, உங்களது தசமபாககாணிக்கைகளும், பரிசுப்பொருட்களும், காணிக்கைகளும் உதவியாயிருக்கும்.

## 8. மந்திரவாதத்தால் பிறரை உபத்திரவப்படுத்துதல் (Magic Persecution):

ஜெபம்செய்து ஒரு விசுவாசி தன்னை தொந்திரவு செய்கிறான் என்று ஒரு அவிசுவாசி விசுவாசிக்கும்போது அவனை ஆவியில் துன்புறுத்த அவன் முயற்சிக்கக்கூடும். அதிலும் அப்படித் துன்புறுத்துகிறவர்கள் ரகசிய வழிபாடுசெய்யும் மந்திரக்குழுக்களைச் சேர்ந்த அவிசுவாசிகளாக இருந்தால், வல்லமையான இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் செய்யப்படும் எந்த ஜெபமும் எய்யப்பட்ட ஒரு கூர்மையான அம்பைப்போல அவனுடைய சரீரத்திற்குள் பாயும். அவிசுவாசியான அவனோ ஒரு விசுவாசியை ஒருவேளை பயங்கரமான சொப்பனங்களையும் பலவகையான ஏமாற்றங்களையும் ஏற்படுத்தி உபத்திரவப்படுத்தக் கூடும்.

## 9. போலிமதம் (False Religion):

வியாதியிலிருந்தோ வேறுஎதாவது பிரச்சினையிலிருந்தோ விடுதலைஅடையும்படும்படி, ஒரு நபர் எதாவது ஒரு ரகசியமதவழிபாடும் செய்யும் மந்திரகுழுக்களுடனோ அல்லது மெழுகுவர்த்தி கொழுத்தி, சாம்பிராணி புகைத்து தூபங்காட்டும் அல்லது இரவில் கல்லறை தோட்டங்களில் சென்று ஜெபிக்கும் வழக்கமுள்ள ஒரு சபையோடு சேர்ந்திருந்தாலோ, அந்நபர் உபத்திரவத்தை விரும்பி அழைத்துக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். **<u>இதுபோன்ற அநேக குழுக்களும் சபைகளும் ஒருவேளை இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறவர்களாகவோ ஜெபிக்காதவர்களாகவோ இருந்தாலும்கூட தேவவார்த்தைக்கு மதிப்பளிக்காமல் நீண்ட உபவாசத்திற்கும் தரிசனங்கள் பார்ப்பதற்கும்தான் அதிகமுக்கியத்துவம் கொடுக்கிறார்கள்</u>**. வழக்கமாக அவர்கள் காணும் தரிசனங்கள் எல்லாம் மரணமாகவும் பிரச்சினைகளாகவும் இருப்பதால் அந்த அப்பாவி மக்கள் இன்னும் பயமுறுத்தப்பட்டவர்களாக அவ்வகை சபை என்ற சங்கங்களிலேயே நிரந்தரமாக இருந்துவிடுகின்றனர். ஆகவே, அக்குழுவின் அங்கத்தினர் என்ற உரிமையை இழக்காமலிருக்கிறார்கள். அத்தகைய சபைகளும் ரகசியகுழுக்களும் இருளின் வல்லமையால் ஆளப்படுகிறது. ஆகவே தான் வேதாகமம் சொல்கிறது:

''அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத்தரித்துக்

கொண்டவர்களாயிருக்கிறார்கள், அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும்.'' - 2கொரிந்தியர் 11:13-15.

ஆகவே பெயரளவில் சபைகள் என்று அழைக்கப்படுகின்ற இதற்குள் யார் நுழைந்தாலும் அவர்கள் அவ்விடத்தை ஆளுகைசெய்யும் பிசாசோடு உடன்படிக்கை செய்தவர்களாக இருப்பதோடு, அந்நபர்களின் பெயர்கள் பிசாசின் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும். தொடர்ந்து அவர்களோடு இருக்க மறுத்தால் அந்நபர் தன்மீது ஒரு சாபத்தை (உடன்படிக்கையை உடைத்ததற்காக) வருவித்துக்கொள்கிறான். அச்சாபம் வியாதியாகவோ அதிகநெருக்கடியைகொடுக்கிற பிரச்சினைகளாகவோ இருக்கும். அந்நபர் மறுபடியும் அவர்களுடைய மந்தைக்குள் வரவழைக்கச் செய்யும் நோக்கதிற்காகவே இப்படிச்செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள், மறுபடிபிறந்தும், அந்நியபாஷை அடையாளத்தோடு அபிஷேகத்தில் நிறைந்தவர்களாயிருந்தும், பிசாசினால் ஏற்படுத்தப்பட்ட உபத்திரவத்தாலும் வேதனையாலும் ஆட்கொள்ளப் பட்டவர்களாகவும் இருக்கின்றனர். இதிலிருந்து விடுதலை பெறுவதற்காக எவ்வளவு அதிகமாக அந்நியபாஷை பேசினாலும், உபவாசித்தாலும், விசுவாச அறிக்கை செய்தாலும் பலனிருக்காது. ஒருவருடைய வாழ்விலிருக்கும் சாபத்தால் வந்த பிசாசின் கிரியைகளை இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தையும் நாமத்தையும் பயன்படுத்தி அவைகளை ரத்துசெய்யும் போதுதான் பலன்கிடைக்கும்.

## 10. சுயமாய் போட்ட சாபங்கள் (Self-imposed curses):

சில மக்கள் வாயினால் சொல்லுகிற அறிக்கைகளானது அவர்களையே கட்டிப்போடுவதோடு அவர்கள் மீது சாபங்களை சுமத்துகிறது. உதாரணமாக, 'நான் செத்துப் பிணமானால்தான் அந்நபரை மன்னிப்பேன்.' சிலநாட்கள் கழிந்ததும் சண்டை சச்சரவுகள் தீர்ந்து சமாதானமாய் இருப்பார்கள். ஆனால் இவர் தனக்குத்தானே போட்டுக்கொண்ட சாபத்தை மறந்துவிடுவார். சிலர், 'அந்த மனிதனின் வாழ்க்கையில் நான் எக்காரியத்திலாவது ஈடுபட்டால் நான் உருப்படவே மாட்டேன்- முன்னேறவே மாட்டேன்' என்றுகூட சொல்வார்கள். இவர்கள் வருடங்கள் பலகழிந்து இறுதியில் ஒன்றாயிருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். போடப்பட்ட சாபத்தைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

1988 இல் 'தேவனே நான் என்றாவது ஆபாசகாட்சிகளை பார்க்கும் பாவத்தில் விழுந்தால் அன்றே என்னைக் கொன்றுபோடும்' என்று தேவனோடு உடன்படிக்கை செய்து கொண்டதாக ஒரு சகோதரன் என்னிடம் சொன்னார். இப்படிப்பட்ட எதிர்மறையான (பாதகமான) அறிக்கைகள் மிக நல்லதல்ல. இது சாபத்தைக்கொண்டுவருகிறது.

## 11. அதிகாரத்திலுள்ளவர்களால் சொல்லப்பட்ட எதிர்மறையான / பாதகமான வார்த்தைகள் (Negative words spoken by those in authority):

நம்முடைய பெற்றோர்களுக்கு நம்மீது ஒரு அதிகாரம் இருக்கிறது, அது பெற்றோர்களுக்கென்று கொடுக்கப்பட்ட அதிகாரம். நாம் அவர்களை உபத்திரவப்படுத்தும்போது அவர்கள் நம்மீது ஒரு சாபத்தைப் போடுகிறார்கள் அது நிலைத்து நிற்கிறது. அதுபோல நமது மேய்ப்பர்களுக்கும் (பாஸ்டர்களுக்கும்) போதகர்களுக்கும் நம்மீது ஒரு அதிகாரம் இருக்கிறது. தேவனுடைய வீடாகிய சபையில் நாம் பிரச்சினைக்குரியவர்களாக மாறினால் அவர்கள் நம்மீது ஒரு சாபம்போடுகிறார்கள் அது நிலைத்து நிற்கிறது. அவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்கள் ஆனபடியால் அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யம்படி, அவர்களுக்குக் கீழ்படிந்து

அடங்குங்கள் (எபிரேயர்13:17) என்று வேதாகமம் சொல்கிறது. படிக்கும் பள்ளியிலோ அல்லது வகுப்பிலோ நம்மீது ஆசிரியர்களுக்கு ஒரு அதிகாரம் இருக்கிறது. நாம் பிடிவாதமாகவும் கேடுசெய்பவர்களாக இருந்தால் அவர்கள் நம்மீது போடும் எச்சாபமும் நிலைநிற்கிறது. நம் மனைவி, நம்மைத்திருமணம் செய்யும்படி, அவர்களுடைய அப்பா வீட்டையும், கலாச்சாரத்தையும், பழக்கமான எல்லா பின்னணிகள் அனைத்தையும் விட்டு வந்திருக்கிறாள். இவர்களை நாம் ஏமாற்றினால், கொடுத்த திருமணவாக்குறுதிகளை உடைத்தால், அவர்கள் சொல்லும் எச்சாபமும் நிலைநிற்கும். நமது கணவர்கள் நம்மை நம்பி நம்மை நேசிக்கிறவர்களாக இருக்கும்போது நாம் உண்மையில்லாதவர்களாக இருந்து வேசித்தனம் செய்யத்துவங்கினால் அவர்கள் நம்மீது சொல்லுகிற எச்சாபமும் அப்படியே நிறைவேறும். ஆகவேதான் நாம் எல்லா மனுஷரோடும் அதிலும் குறிப்பாக உறவுமுறையினால் நம்மீது ஒரு அதிகாரம் உடையவர்களோடு சமாதானமாக வாழவேண்டியது முக்கியமான காரியமாகும்.

## 12. கள்ளத்தனமான, சட்டவிரோதமான மற்றும் இயற்கைக்கு முரணான பாலுறவு: (illicit and unnatural sex):

திருமணத்திற்கு பிறகுதான் பாலுறவு அனுமதிக்கப்படுகிறது. திருமணமில்லாத எவ்வகையான பாலுறவும் சட்டத்திற்குப் புறம்பானதும் அனுமதிக்கப்படாததாகவும் இருக்கிறது. திருமணத்தை நிச்சயம் செய்துகொண்டவர்களுக்கு வேதாகமம் சொல்கிறது:

> “விவாகமானது யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்.” – எபிரேயர் 13:5

ஆகவே ஒருவர் அதிகாரப்பூர்வமாய் திருமணம் ஆகும்வரை எந்த ஒரு உடலுறவும் இருக்கக் கூடாது.

மேலும் நாயுடனோ அல்லது வேறு எந்த மிருகத்தோடோ உடலுறவில் ஈடுபட்டிருந்தால் அல்லது வாய்வழி மூலம் சிற்றின்பத்தில் ஈடுபட்ட எந்நபராக இருந்தாலும் அவர்கள் தங்களுக்குத் தாங்களே சாபங்களை வருவித்துக்கொள்கிறார்கள். அதுபோல ஆணோடு ஆணும் பெண்ணோடு பெண்ணும் தகாத பாலுறவில் ஈடுபட்டவர்களும் ஒரு சாபத்தின் கீழிருக்கிறார்கள்.

> “அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து. தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.
>
> இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.
>
> தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். ஆமென்.
>
> இதனிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள்.
>
> அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண்

அவலட்சணமானதை நடப்பித்து. தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்.

தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடானசிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்.'' - ரோமர் 1:21-28

## 13. அநீதியும் அடக்குமுறையும் சாபங்களை கொண்டுவருகிறது (Injustice and oppression brings curses):

தங்களைவிட வசதியிலும் அந்தஸ்திலும் குறைந்தவர்களாக காணப்படுகின்ற தகப்பனற்றோர், விதவைகள், போன்றவர்களிடம் அநேகர் முழுநாசத்தை விளைவிக்கும் அனைத்துவகையான காரியங்களையும் செய்கின்றனர்.

''உன் பிரபுக்கள் முரடரும் திருடரின் தோழருமாயிருக்கிறார்கள்; அவர்களில் ஒவ்வொருவனும் பரிதானத்தை விரும்பி, கைக்கூலியை நாடித்திரிகிறான்; திக்கற்ற பிள்ளையின் நியாயத்தை விசாரியார்கள்; விதவையின் வழக்கு அவர்களிடத்தில் ஏறுகிறதில்லை.'' ஏசாயா 1:23

விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் ஒடுக்காமல் இருப்பீர்களாக; அவர்களை எவ்வளவாகிலும் ஒடுக்கும்போது; அவர்கள் என்னை நோக்கி முறையிட்டால், அவர்கள் முறையிடுதலை நான் நிச்சயமாய்க் கேட்டு, கோபமூண்டவராகி, உங்களைப் பட்டயத்தினால் கொலைசெய்வேன்; உங்கள் மனைவிகள் விதவைகளும், உங்கள் பிள்ளைகள் திக்கற்ற பிள்ளைகளுமாவார்கள்.'' -யாத்திராகமம் 22:22-24

## 14. உண்மையற்ற ஆசாரியர்கள் (Unfaithful Priests) :

''இப்போதும் ஆசாரியர்களே, இந்தக் கட்டளை உங்களுக்குரியது. நீங்கள் கேளாமலும் என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதைச் சிந்தியாமலுமிருந்தால், நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன்; ஆம், நீங்கள் அதைச் சிந்தியாமற்போனதினால் அவைகளைச்சபித்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.'' - மல்கியா 2:1,2

அநேக தேவமக்கள் தேவனை ஏமாற்றி இருக்கிறார்கள். அநேகர் ஒழுக்கங் கெட்டவர்களாக, சபையிலுள்ள பெண்அங்கத்தினரோடு கள்ளத்தொடர்பு வைத்திருக்கிறார்கள். சொந்த இடங்களைவிட்டு வெளியூருக்கு பிரயாணம் செய்யும்போது சிலர் இக்காரியங்களில் ஈடுபடுகின்றனர். சிலர் பணக்காரியங்களில் உண்மையற்றவர்களாக இருக்கின்றனர். இன்னும் சிலர் திருடுகிறவர்களாக இருக்கின்றனர். சிலர் பழங்கால மகிமையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதை கண்டுபிடித்து உணருவதற்குள் நீண்டகாலம் கடந்துபோய்விடுகிறது. வேறுசிலர் மீது குடும்பசாபமிருக்கிறது.

எவ்வளவுதான் கடினமாக உழைத்தாலும் முயன்றாலும் இப்படிப்பட்ட மேய்ப்பர் அல்லது ஊழியர்கள் நடத்துகின்ற சபையில், ஆக்கபூர்வமான எப்பலனையும் காணமுடியாது. மற்ற சபைகளில் பலன்கொடுக்கிற ஜெபங்களும் உபவாசங்களும் இங்கு பலனளிக்காது. இச்சபையின் அங்கத்தினரின் எண்ணிக்கை எக்காரணமும் இல்லாமல் குறைந்துகொண்டிருக்கும். இதற்கெல்லாம் அர்த்தம் எங்கேயோ ஒரு சாபம் இருக்கிறது என்பதுதான். எவ்வளவுதான் பணத்தை இங்கே முதலீடுசெய்து பார்த்தாலும் ஒரு பலனும்

கிடைக்காது. அதனால்தான் சில மக்கள் தசமபாகங்களும் காணிக்கைகளும் கொடுத்தும் நிலைமைகள் மோசமாக உள்ளது. காரணம் அவர்கள் தங்கள் பணத்தை மலட்டு நிலத்தில் (சாபங்களோடு போராடிக்கொண்டிருக்கும் ஒரு இடத்தில்) விதைத்திருக்கிறார்கள். இதற்கான பரிகாரம் எளிமையானது. சாபங்களை எப்படி முறிக்கவேண்டும் என்று அறிந்த தேவஊழியர்களோடு சேர்ந்து அந்த ஊழியத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் ஒரு முழுமையான தற்பரிசோதனையை மறுபடியும் செய்து ஜெபத்தோடு உபவாசத்தோடும் விடுதலை ஊழியத்தில் கலந்து விடுதலையை பெற்றுக்கொள்ளலாம்.

தவறான நடத்தைக்காகவும், வேசித்தனத்திற்காகவும், உண்மையில்லாததற்காகவும் சபைகளில் அல்லது ஊழியங்களில் கண்டிக்கப்பட்டவர்கள், கர்த்தர் சமூகத்திலே தாழ்மையாக பொறுமையுடன் காத்திருந்து, உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை வாழவேண்டும் என்ற தீர்மானத்துடன் பாவமன்னிப்புகேட்டு வாழ்வதற்குப் பதிலாக, உடனேயே அவர்களாகவே சொந்தமாக ஒரு ஊழியத்தை அல்லது சபையை ஆரம்பித்துவிடுகின்றனர் - இப்படிப்பட்ட ஊழியங்களும் சபைகளும் அதிகமாக காணப்படுகின்றன. அச்சாபத்தை செயலிழக்கச் செய்யும்வரை இப்படிப்பட்ட இடங்களில் ஆராதிக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்விலும் சொல்வதற்கு ஒரு சோக கதை இருந்துகொண்டே இருக்கும்.

## 15. தேவனிடத்திலிருந்து வந்த சாபங்கள் (Curses from God):

1) “துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது. நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார்.” - நீதி 3:33

ஒவ்வொரு துன்மார்க்கனுடைய வீட்டிலும் கர்த்தரிடமிருந்து வந்த சாபம் தங்கியிருக்கும் என்று வேதாகமம் சொல்கிறது. அவன் ஒரு துன்மார்க்கனாய் இருப்பதால்தான் இச்சாபம் வருகிறது. வியாபாரத்திலோ, தொழிலோ, திருமண வாழ்க்கையிலோ, கல்வியிலோ, அலுவலகத்திலோ, சாலையிலோ . . . பிற இடங்களிலோ எவ்வித நியாயமான காரணமும் இல்லாமல் தங்களது செயல்களால் பிறரை அழவைக்கும் அனைவர்மீதும் சாபங்கள் நிலைத்திருக்கும்.

2) “உமது கற்பனைகளைவிட்டு வழிவிலகின சபிக்கப்பட்ட அகங்காரிகளை நீர் கடிந்துகொள்ளுகிறீர்.” - சங் 119:21

வேதாகமத்தின்படி தேவன் பெருமையுள்ளவர்களை சபித்திருக்கிறார். சிலர் படித்திருப்பதினாலும், சிலர் சரளமாய் ஆங்கிலம் பேசுவதினாலும், சிலர் ஒரு குறிப்பிட்ட ஜாதியிலிருந்து அல்லது நகரத்திலிருந்து வந்ததினாலும், சிலரது பெற்றோர்கள் பணக்காரர்களாக இருப்பதினாலும் பெருமை பாராட்டுகிறார்கள்.

“அன்றியும் உன்னை விசேஷித்தவனாக்கும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன் போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?” - 1கொரி 4:7

3) நாம் என்ன செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அதை செய்யாமலிருப்பதால் தேவனிடமிருந்து சாபம் வருகிறது. ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் குறித்து தேவன் என்ன சொல்கிறார் என்று சரியாக தெரியாமலிருந்தால் பிரச்சினை இல்லை. ஆனால் தேவன் ஒரு காரியத்தை சொல்லியிருக்கிறார் என்றால் அதுவே இறுதியானது. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமலிருப்பதன் விளைவாக உங்களை ஒரு சாபத்திற்குள்ளாக்கிவிடாதீர்கள்.

“அவர்கள் என் வார்த்தையைக் கேளாமற்போனபடியால், நான் அவர்களைப் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் பின்தொடர்ந்து, அவர்களைப் பூமியிலுள்ள எல்லாராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்களாகவும், நான் அவர்களைத் துரத்துகிற எல்லா ஜாதிகளிடத்திலும் சாபமாகவும், பாழாகவும், ஈசலிடுதலுக்கிடமாகவும், நிந்தையாகவும் வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.” - எரேமியா 29: 18

இவ்வகையான சாபத்திலிருந்து விடுதலையடைந்து எதாவது தீர்வும் வரவேண்டுமெனில் முதலாவதாக நாம் தேவனுக்கு கீழ்படிந்து, மனந்திரும்பி. பாவங்களை அறிக்கைசெய்து, அவைகளை விட்டுவிடவேண்டும்.

## 16. தேவஊழியத்தை வஞ்சகமாக செய்தல் (Doing God’s work deceitfully):

“கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்கப்பட்டவன். இரத்தம் சிந்தாதபடிக்கு பட்டயத்தை அடக்கிக்கொள்ளுகிறவன் சபிக்கப்பட்டவன்.” – எரேமியா 48:10

தேவனுடைய வீட்டில் ஒரு நோயைக் காண்கிறேன். ‘தேவனுடைய வேலையை அசதியாய் செய்வதுதான்’ அந்த நோய். தங்கள் சேவையை கர்த்தர் கண்டு உயர்த்தட்டும் என்று கர்த்தர் மீது நம்பிக்கைவைக்காமல், மேய்ப்பர் (பாஸ்டர்) கண்டு உயர்த்தட்டும் என்று சபையில் அநேகர் பாஸ்டருக்காக சுயநலமில்லாமல் சேவை செய்கின்றனர். தசமபாகம் ஒழுங்காக கொடுப்பதை பாஸ்டருக்கு தெரிந்திருக்க வேண்டும் என்று அனேக ஜனங்கள் விரும்புகின்றனர். அது மட்டுமல்லாமல் சபையில் அந்தகாரியம் இந்தகாரியம் என்று எல்லாக் காரியத்தையும் அவர்கள்தான் செய்கிறார்கள் என்று காட்டிக்கொள்ள விரும்புகின்றனர். அவர்களை இயேசுவின் நற்செய்தியை அறிவிக்கப்போகும்படி சொல்லிப்பாருங்கள், அவர்கள் போகாமலிருக்கிறதற்கு எதாவது நொண்டிச்சாக்கை கூறுவார்கள். அவர்களை, உபவாசித்து ஜெபிக்கும்படி ஜெபக்குழுவோடு அனுப்பிப்பாருங்கள், அதில் அவர்களுக்கு விருப்பமிருக்காது. ஆனால் துதி ஆராதனை நடத்துவதற்கு அல்லது ஜெபத்தைநடத்துவற்கு அவர்களை அனுமதிக்கவில்லை என்றால் முறுமுறுத்துக் கொண்டிருப்பார்கள். ஏனென்றால் மக்கள் முன்னால் நின்று துதிஆராதனை அல்லது ஜெபம் நடத்தினால்தான் எல்லாரும் அவர்களை பார்க்கவும் பாராட்டவும் முடியும். அப்போஸ்தலா் பவுல் சொல்கிறார்,

“இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப்போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே.” – கலாத்தியர் 1:10

சபையில் நாம் யாரைப்பிரியப்படுத்த விரும்புகிறோம் என்பதைக் கண்டுபிடித்துவிட்டோமென்றால் நாம் சாபத்தில் இருக்கிறோமா இல்லையா என்பதை தீர்மானித்துவிடலாம்.

# அத்தியாயம். 7

# சாபங்கள் எப்படி செயல்படுகின்றன?

**(How Curses Operate)**

ஒரு தனிநபரிடமோ, ஒரு குடும்பத்திலோ, ஒரு தேசத்திலோ ஒரு சாபம் இருக்கிறது என்பதற்கான அறிகுறி பல்வேறுவகையான அளவுகளில் காணப்படுகிறது. ஒருவரது அல்லது சமுதாயத்தினரின் அன்றாட வாழ்வில் வெளிப்படுகின்ற ஆதாரமான அறிகுறிகள் பின்வருமாறு:

## 1. குறிப்பிட்ட காலங்களில் திரும்பத்திரும்ப வரும் வியாதிகள் (Seasonal sickness):

சில மக்கள் ஒருகுறிப்பிட்ட வியாதிக்காக பலமுறை அறுவைசிகிச்சை செய்தும் குணமாகாத நிலையிலிருப்பார்கள்; சிலர் அடிக்கடி பலவீனப்படுவார்கள்; இன்னும் சிலர் ஒரு குறிப்பிட்ட காலங்களில் அல்லது மாதங்களில் நோயினால் வேதனைப்படுவார்கள்; சிலர் எப்போதுமே மருந்துகளைச் சார்ந்துகொண்டு பழைய அனுபவங்களை நினைத்தே பயந்து கொண்டிருப்பார்கள். உங்கள் வாழ்க்கையில் இது தேவனுடைய பரிபூரண சித்தமல்ல. காரணம், “சத்துரு அதைச்செய்தான்” (மத்தேயு 13:28). இவைகளெல்லாம் ஒரு நபர் சாபத்தின்கீழ் இருக்கிறார் என்றும் அவருக்கு அவசரமான விடுதலைஊழியம் தேவை என்பதையும் காண்பிக்கிறது.

சில வியாதிகள் பரம்பரையாக வருகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. நீங்கள் எவ்வியாதியினால் அல்லது பலவீனத்தால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறீர்களோ அதே வியாதியால், பலவீனத்தால் உங்கள் தகப்பனோ தாத்தாவோ அல்லது குடும்பத்திலுள்ள வேறுசில அங்கத்தினரோ பாடுஅனுவித்துக்கொண்டிருந்தால் அது ஒரு சாபத்தால் வந்தது என்பதை அறிந்துகொள்ளலாம். இப்படிப்பட்டவர்களுக்கு மருத்துவமனைக்கு செல்வதால் இப்பிரச்சினை தீராது. விடுதலை ஊழியத்தின் மூலம் இயேசுவுக்குள்ளேதான் தீர்வு இருக்கிறது.

1991ஆம்ஆண்டில் கார்கோர்ட் துறைமுகத்திலுள்ள ஒரு மனிதனை கலந்தாய்வு (counselling) செய்து அவனுக்கு விடுதலை ஊழியத்தை செய்தேன். அவருடைய தாத்தா நீரழிவு வியாதியினால் இறந்துபோனதாகச் சொன்னான். அவனது தகப்பனாரும் 54வதுவயதில் நீரழிவு நோயினால் மரித்தார். அதுமட்டுமல்ல அவருடைய மூத்த சகோதரனும் 55வது வயதில் நீரழிவு நோயினால் மரித்தார். இப்பொழுது இம்மனிதரும் அவ்வயதை நெருங்கிவிட்டார். ஆனால் 8 வருடங்களுக்கு முன்னதாகவே இந்த நீரழிவுநோய் வந்ததால் அவருடைய ஆரோக்கியம் மிகவும் நலிவடைந்துவிட்டது என்றும் எவ்வகை மருத்துவசிகிச்சைக்கும் நோய் கட்டுப்படவில்லை என்று இங்கிலாந்திலுள்ள மருத்துவர்கள் சொன்னதாக சொன்னார். மிகப்பெரிய மருத்துவரான டாக்டர். இயேசு அவரைக் குணமாக்குவார் என்று நான் சொன்னேன். நான் ஜெபித்தபோது அந்நபர் கீழேவிழுவதை உணர்ந்தேன். அந்த பருமனான மனிதர் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து சற்று அப்பால்போய் விழுந்துகிடந்தார். அவர் எழுந்தபோது அவர் குணமாக்கப்பட்டிருந்தார். இன்றும் அவர் சுகமாக இருக்கிறார்.

## 2. பலனற்ற விடுதலைகள் (Fruitless Deliverance):

மற்றவர்களுக்கு கைகொடுக்கிற காரியங்கள் உங்களுக்கு கைகொடுக்கவில்லை என்பதும் அல்லது வல்லமையான அபிஷேகம்பெற்ற அநேக நற்செய்தி ஊழியர்கள் உங்களுக்காக ஜெபித்து எவ்வித வெற்றியும் இல்லை என்பதும், நீங்கள் உண்மையாக ஜெபித்தும், விசுவாசத்தை செயல்படுத்தியும், ஆக்கப்பூர்வமான வாக்குதத்தங்களை அறிக்கைசெய்தும், ஆவியோடும் உண்மையோடும் தேவனுக்கேற்ற வாழ்க்கை வாழ்ந்தும், ஒன்றும் நடக்கவில்லை என்பது உங்களது அனுபவமானால் நீங்கள் ஒரு சாபத்தின் கீழ் இருக்கிறீர்கள் என்று அர்த்தம். நீங்கள் அமர்ந்திருந்து உங்களது வாழ்க்கையை மறுபடியும் சோதித்துப்பாருங்கள். பரிசுத்தஆவியானவரின் உதவியுடன் ‘ஆனால்’ என்பதற்கான காரணங்களை கண்டுபிடியுங்கள். பிறருக்கு பலன்கொடுக்கிற வேதாகம வழிமுறைகளும், தீர்வுகளும் உங்களுக்கு

வாய்க்காமலிருந்தால், சத்துரு உங்கள் வாழ்க்கையில் எதோ ஒரு பகுதியை சட்டபூர்வமாக பிடித்துவைத்துக்கொண்டு உரிமைபாராட்டிவருகிறான் என்று பொருள். அது என்ன என்பதைக்கண்டுபிடித்து அதைச் சரிசெய்யாமல் ஊருக்கு வருகிற இன்னொரு பெரிய ஊழியக்காரரிடம் சென்று ஜெபிப்பதால் ஒரு பலனும் கிடைக்காது.

## 3. தானாக கருஅழிதல், மலட்டுத்தன்மை, அகால மரணம் / குறைஆயுசில் மரித்தல் (Miscarriage, barrenness and untimely death):

"கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை; உன் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவேன்." - யாத்திராகமம் 23:26

கர்ப்பம் விழுகிறதும் மலட்டுத்தன்மையும் ஒரு தம்பதியினரிடம் இருக்குமானால், அது எக்காரணமாக இருந்தாலும், விடுதலை அவர்களுக்கு தேவையாக இருக்கிறது. வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம்வரை பார்த்தாலும் சவுலின் மகளான மீகாளைத்தவிர வேறு எப்பெண்ணும் வாழ்நாள் முழுவதும் மலடாய் இருந்ததில்லை. தேவனை ஆடிப்பாடி புகழ்ந்த தாவீதை அவள் தன் இருதயத்தில் அவமதித்த காரணத்தால் அவளுக்கு மரணமடையும் நாள் மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது. சட்டபூர்வமாய் திருமணமான ஒவ்வொரு தம்பதிகளும் தேவன் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும்படி வழிவகைகளை தேவன் கொடுத்துள்ளார்.. ஆகவே பிள்ளை இல்லாததற்கு காரணம் புருஷனிடமோ மனைவியிடமோ காணப்பட்டால் அதற்கு காரணம் தேவனல்ல அது ஒரு சாபமாகும்; அச்சாபத்தை நிராகரிக்க வேண்டும். நம்முடைய பரலோக தேவன், ஒரு தம்பதியருக்கு குழந்தைகளைக் கொடுத்துவிட்டு பின்னர் அவைகளைத் மரணத்தினால் திடீரென்று பறித்து அவர்கள் வேதனைப்படுவதில் சந்தோசப்படுகிறவரல்ல. தேவன் ஒருவரையும் பொல்லாங்கினால் சோதிப்பதில்லை, மலட்டுத்தனமும் மரணமும் பொல்லாங்கான காரியாகும்.

"யோபுவைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?" என்று நீங்கள் கேட்கக்கூடும். யோபு பிசாசுக்கு இடங்கொடுத்தான் ஏனென்றால், அவன்:

"தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ? என்றான். யோபு 2:10

யோபுவின் கருத்துப்படி இன்று கர்த்தர் உன்னை ஆசீர்வதித்தால் நாளை அவரிடமிருந்து தீமையை எதிர்பார்த்திரு என்று சொல்வதுபோல இருக்கிறது. **இது அறியாமை.** ஆனால் இத்தவறான எதிர்பார்ப்பே மிகுந்த பொருள் அழிவுக்கு காரணமாகிவிட்டது. அதுமட்டுமல்லாமல் யோபு சொன்னது என்னவென்றால்:

"நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது." யோபு 3:25

ஏன் அவன் மிகவும் பயப்படவேண்டும்? தேவன் அவனை ஆசீர்வதித்தார், அவனை காப்பாற்றினார்; இதை பிசாசுங்கூட உறுதிப்படுத்துகிறான். ஆனால் யோபு எப்போதும் பயந்துகொண்டும் எந்நாளில் தீங்கு வருகிறதோ என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

பயம் வேதனைஉள்ளது என்று வேதாகமம் சொல்வதில் ஆச்சரியமில்லை. இறுதியாக யோபு சொல்கிறான்:

"எனக்குச் சுகமுமில்லை. இளைப்பாறுதலுமில்லை. அமைதலுமில்லை; எனக்குத் தத்தளிப்பே நேரிட்டது." - யோபு 3:26

நான் பாதுகாப்பாக இல்லை என்று அவன் அறிக்கைசெய்தான். எதை அவன் விசுவாசித்து அறிக்கை செய்தானோ அதையே பெற்றுக்கொண்டான். ஏனென்றால் வேதாகமம் சொல்கிறது:

> ‘‘நீர் ஒரு காரியத்தை நிருணயம் பண்ணினால், அது உமக்கு நிலைவரப்படும்; உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.’’ - யோபு 22:28

யோபுவைக்குறித்து பிசாசே சாட்சிசொல்கிறான்:

> ‘‘நீர் அவனையும் அவன் வீட்டாரையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியை ஆசீர்வதித்தீர்; அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று.’’
>
> - யோபு 1:10

எனினும், யோபு விசுவாசித்ததும் அறிக்கைசெய்தது என்னவென்றால் பயமும் உபத்திரவமும் தீமையும் தான். **தேவனுக்குப்பயந்து அவரை விசுவாசி. தேவனுடைய வார்த்தைகளின் படி வாயினால் அறிக்கை பண்ணு, அப்போது நீ அற்புதங்களை பெறுவாய்.** வேலைகிடைத்து குடும்பத்திற்காக சம்பாதித்துக்கொண்டிருக்கும் அருமையான வேளையில் அவர்களை அகாலமரணத்தினால் இழந்துவிடுகின்றனர். இது ரத்துச்செய்யப்பட வேண்டிய ஒரு சாபமாக இருக்கிறது. .

நான் கூட்டம் நடத்திக்கொண்டிருந்தபோது திடீரென்று வெளியே செல்ல புறப்பட்ட ஒரு சகோதரியை என்னால் மறக்கமுடியாது. அவள் குடும்பத்தில் அநேகர் அகால மரணமடைந்தனர். அவளுடைய கொழுந்தன் ஒருநாள் பண்ணைக்குச் சென்றபோது திடீரென்று இறந்துவிட்டார். அவரை வீட்டுக்கு எடுத்துவந்து புதைத்துவிட்டனர். அவளது கணவன் சைக்கிளில் வேலைக்கு செல்லும் போது பிசாசுகள் அறைந்துவிட்டதால் இறந்துவிட்டார். அடக்கம் செய்வதற்கு வீட்டிற்கு கொண்டு வந்தனர். படுக்கையில் கிடத்தப்பட்டிருந்த மனிதனைப் பார்த்தேன்; அவர் இறந்துவிட்டார் என்பதை என்னால் நம்பமுடியவில்லை. எந்த வியாதியும் அவருக்கு இல்லை. ஆதலால் பார்ப்பதற்கு அவர் உறங்கிக்கொண்டிருந்தது போல இருந்தது. அந்த குடும்பம் முன்னேறாமல் இருந்த காரணம் அக்குடும்பத்தில் ஆண்கள் சம்பாதிக்கத்துவங்கும் சமயத்தில் அகால மரணத்தில் இறந்துவிடுவதுதான்.

இறுதியாக அப்பிசாசுகள் (மரணத்தின் ஏவலாட்கள்) மறுபடியும் பிறந்த இப்பெண்ணைச் சந்தித்து, ‘இப்பொழுது நீயும் சாகும் காலம் வந்துவிட்டது’ என்று சொல்லியிருக்கிறது. அவளுக்கென்று பிசாசு குறித்த நாளுக்கு முந்தினநாளில் நான் கூட்டம் நடத்திக்கொண்டிருந்தபோது அப்பெண்ணிடம் பிசாசு, ‘உனக்கு சமாதானம் வேண்டுமென்றால் உன் பொருட்களை எடுத்துக்கொண்டு வெளியேறிவிடு’ என்று சொன்னது. அவள் வேதாகமத்தை தூக்கிக்கொண்டு அக்கூட்டத்தை விட்டு வெளியேற ஆயத்தமாகும்போது, கர்த்தர் என்னிடம் பேசினார்: ‘‘இங்கே கூட்டத்தில் ஒரு பெண் இருக்கிறாள். நீ செத்துவிடுவாய் என்று அவளிடம் பிசாசு சொல்லியிருக்கிறான். இயேசுவின் நாமத்தில் நீ இறப்பதில்லை’’ என்று .அவளுக்கு உறுதியளித்தேன். இதை அவள் கேட்டதும் கர்த்தர் விரும்பினால் அக்கூட்டத்திலேயே இறந்தாலும் பரவாயில்லை ஆனால் இக்கூட்டத்தை வெளியேறக்கூடாது என்று தீர்மானித்தாள்.

விடுதலை ஊழியம் நடத்தும்போது அவள் எழுந்து முன்வந்தாள். கொடுக்கப்பட்ட வேதவசனத்தின்படி விசுவாசத்தில் அவளை நடத்தி அவளுக்காக ஜெபித்தோம்.

1986, டிசம்பர், 28இல் நான் இன்னொரு நகரத்தில் இருக்கும்போது இந்த சகோதரி என்னிடம் வந்து? ‘‘ஐயா என்னை உங்களுக்கு நினைவிருக்கிறதா? என்று என்னிடம் கேட்டாள். ‘‘இல்லை’’ என்று அவளிடம் சொன்னேன். ‘‘செத்துப்போவாய் என்று ஒரு பெண்ணிடம் பிசாசுசொல்லியிருக்கிறான் ஆனால் நீ இறப்பதில்லை என்று இயேசுவின் நாமத்தில் சொல்கிறேன்’’ என்று பரிசுத்தஆவியானவர் உங்கள் மூலமாக வெளிப்படுத்திய பெண் நான்தான். நீங்கள் எனக்காக ஜெபித்தீர்கள். நான் சாவேன் என்று பிசாசு குறித்த நாட்கள் கடந்து வெகுகாலமாயிற்று. பாருங்கள் நான் இந்நாள் வரை உயிரோடிருக்கிறேன்’’ என்று சொன்னாள்.

புன்னகைபூத்தவாறு கர்த்தரை மகிமைப்படுத்தும்படி கரங்களை உயர்த்தினேன். அன்றிலிருந்து இந்நாள் வரை மரணத்தின் கரங்கள் அக்குடும்பத்தின் மீது அமரவில்லை. இயேசுகிறிஸ்து நம்மை முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக மாற்றியபிறகு நம்மால் தோல்வியடைய முடியாது. இன்று காணும் அந்த எகிப்தியர்களை (பிரச்சினைகளை) இயேசுவின் நாமத்தில் நீங்கள் இனி ஒருபோதும் காணமாட்டீர்கள். மோசே இந்த வார்த்தைகளைச் சொன்னான் அப்படியே நடந்தது. **பழைய உடன்படிக்கையிலிருந்த பரிசுத்தவான்களைவிடவும் அதிக நன்மையான புதிய உடன்படிக்கைக்குள் நாம் வந்திருக்கிறோம்** என்று வேதாகமம் கூறுகிறது. இதை நாம் கட்டளையிடுவோம் அப்படியே நடக்கும்.

## 4. தாமதமான மற்றும் உடைந்துபோன திருமணங்கள் (Delayed and broken-down marriages):

> ‘‘பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். – ஆதியாகமம் 2:18
>
> ‘‘அந்நாளில் ஏழு ஸ்திரீகள் ஒரே புருஷனைப்பிடித்து: நாங்கள் எங்கள் சொந்த ஆகாரத்தைப் புசித்து, எங்கள் சொந்த வஸ்திரத்தை உடுப்போம்; எங்கள் நிந்தை நீங்கும்படிக்கு உன்பேர் மாத்திரம் எங்கள் மேல் விளங்கட்டும் என்பார்கள்.’’ - ஏசாயா 4:1

ஆதியில் தேவன் ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்தார்: ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்று படைத்தார். அப்பெண், விசேஷித்தவகையில், இணையற்ற ரீதியில் அம்மனிதனுக்கு ஏற்ற துணையாய் இருக்கும்படி உருவாக்கப்பட்டிருந்தாள். பிசாசானவன் அந்த ஒழுங்கான அமைப்பினை ஆதாம் ஏவாள் மூலமாய் கெடுத்துவிட்டான். ஆனால் இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நம்மை அச்சாபத்திலிருந்து நம்மை மீட்டு அனைத்தையும் புதிப்பித்துவிட்டார். ஆகவே ஒரு விசுவாசியை ஏழு பெண்கள் பிடித்துக்கொண்டு உம்முடைய மனைவிகளைப்போல எங்களை ஏற்றுக்கொள்ளும் என்று சொல்கிற, வேதவசனத்திற்குப் புறம்பாக இருக்கிற அச்சாபத்தை இயேசுவின நாமத்தில் உங்கள் சார்பாக அதை ரத்துசெய்கிறேன்.

கொஞ்ச காலத்திற்கு முன்பாக ஓகன் மாநிலத்தில் சாபோவில் நான் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது, அங்கே நெருங்கிய உறவுகளுக்குள்ளே ஒருவரையொருவர் திருமணம் செய்துகொள்ளும் வழக்கத்தைக் கொண்ட ஒரு சமுதாயத்தினர் இருப்பதாக சொன்னார்கள். ஆண்கள், எந்த சகோதரிகளையும், சொந்த பெற்றோருக்கு பிறக்காத எந்த சகோதரிகளையும், திருமணம் செய்துகொள்வதாக சொன்னார்கள். என்ன வெட்கங்கெட்ட செய்கை.

இதுபோன்ற ஒழுக்கங்கெட்ட காரியங்களை பரப்புகின்ற அசுத்தஆவிகள் தான் இன்று வீடுகளில் காணப்படுகின்ற முறைகேடுகளுக்கு பொறுப்பாக இருக்கின்றன. திருமணவயதில்

மூன்றோ அதற்கு மேற்பட்ட பெண்கள் இருக்கின்ற சில வீடுகளில், அவர்களை திருமணம் செய்ய ஒருவரும் வராததால், அவர்கள் திருமணமாகும் முன்னதாகவே, தகப்பன்வீட்டிலேயே குழந்தைகளோடு காணப்படுகின்றனர்.

அநேக பெண்களை கர்ப்பிணிகளாக்கிவிட்டு அவர்களில் ஒருவரையும் மனைவியாக ஏற்றுக்கொள்ளாதிருக்கும் சில ஆண்களும் இதற்குக் காரணமாக இருக்கிறார்கள். இது ஒரு சாபம். இதனை செயலிழக்கச்செய்தாகவேண்டும். சில பெண்கள் இன்று ஒரு உறவை ஆரம்பித்தால் இன்னொரு நாளில் அது எக்காரணமும் இல்லாமலே முறிந்துபோகும்.

நைஜீரியாவிலுள்ள கிறிஸ்தவ ஐக்கியத்தில் நடந்த கூட்டத்தில் ஊழியஞ்செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு பெண் என்னிடத்தில் வந்தாள். நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது அவளிடம் எனக்கு மிகுந்த மனஉருக்கம் உண்டாயிற்று. பல ஆண்டுகளுக்கு முன்பு பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்றதிலிருந்து அவளுக்கு வேலை இல்லை, கணவன் இல்லை, பணம் இல்லை, ஒன்றுமில்லை. அவள் கதை சோகமாக இருந்தது. அவளுடைய தந்தையிடம் பல்தேய்ப்பதற்கு பற்பசையோ அல்லது வேறு எச்சிறுஉதவி கேட்டாலும், ‘‘இன்னும் எவ்வளவு காலம் இங்கேயே இருப்பாய் உன் வயது பெண்களெல்லாம் பிள்ளைகளோடு இருக்கிறார்களே . . .’’ இதுபோன்று வேதனைப்படுத்தும் எல்லாவகையான கொடூர வார்த்தைகளால் அவள் தந்தைமூலமாக பிசாசு அவளைத்தாக்கி துன்புறுத்தியது. அவ்வேளைகளிலெல்லாம் அழுவாள், உபவாசமிருந்து ஜெபிப்பாள். ஆனால் ஒரு பலனும் இல்லை.

இரண்டு நாட்கள் உபவாசக்கூட்டம் ஏற்பாடுசெய்து இறுதிநாளில் அவளுக்கு விடுதலை ஊழியம் செய்தோம். உடன்படிக்கைகள் உடைக்கப்பட்டன, சாபங்கள் செயலற்றதாக்கப்பட்டன, அவளுக்கு ஒரு வேலையும் ஒரு கணவனும் உண்டாயிருப்பதாக என்று கட்டளையிட்டோம். இயேசுவின் நாமத்தில் விசுவாசத்தில் அவைகளை அனைத்தையும் பெற்றுக்கொண்டோம்.

18 நாட்களுக்கு பிறகு, அவள் சாட்சிகளோடு வந்தாள். முதலாவது ஓயோ மாநில அரசாங்கம் அவளுக்கு ஒரு வேலைகொடுத்தது, அவளோடு பணியாற்றுகிறவர்களையும்விட மேலான பதவிஉயர்வு அவளுக்குக் கொடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் அரசாங்க அதிகாரிகளை சிறைப்படுத்தினார். பலஆண்டுகளுக்கு முன் கொடுக்கப்பட்டு காணாமல் போன இப்பெண்ணின் மனு கண்டுபிடிக்கப்பட்டு, வேலைக்கான ஆணைபிறப்பிக்கப்பட்டு அவளிடம் கொடுக்கப்பட்டது. இரண்டாவதாக, ஒருவன் அவளிடம் வந்து, ‘‘நான் மிகவும் வருந்துகிறேன், பலவருடங்களுக்கு முன் தேவன் உன்னைக்குறித்து என்னிடம் கூறினார், ஆனால் நீ ஒரு பொல்லாதபெண் என்று பிசாசு என்னை நம்பச்செய்தான். தயவுசெய்து மன்னித்துவிடு. ஆனால் நான்கு நாட்களுக்கு முன்னர்தான் என் கண்கள் திறந்தது, உலகத்திலேயே எனக்கு ஏற்ற சிறந்த பெண் நீதான் என்பதை உணர்ந்துகொண்டேன். ஆகவே ஜெபித்துப்பார், தேவன் உனக்கு உறுதிப்படுத்தினால் உன்னை என் மனைவியாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறேன்’’ என்று அவன் சொன்னதாக சாட்சி சொன்னாள்.

30வயதுக்கு மேலாக ஒரு பெண் அதுவும் தனியாக இருப்பதென்பது எளிதான காரியமல்ல. இந்த திருமணகாரியத்தில் தேவன் ஒரு தெளிவை கொடுக்கவேண்டும் என்று நாங்கள் ஜெபித்தோம் கொஞ்ச நேர இடைவெளிக்குப் பிறகு அது தேவனுடைய வழிநடத்துதல்தான் என்பதை நாங்கள் கண்டுகொண்டோம். 1991. ஆகஸ்ட் 10இல் இபதானில் அவர்கள் திருமணம்செய்துகொண்டனர். இது கர்த்தரால் வந்தது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ஜெபத்திற்கு பிறகு அநேக சாபங்கள் செயலற்றுப்போவதை நான் கண்டுவருகிறேன். சமீபத்தில் 35வயதான ஒரு பெண்ணுக்கு இவ்வருடம் ஜூன் மாதம் திருமணமானது. இன்று அவள் ஒரு சாட்சியாயிருக்கிறாள்.

1993 ஆம் ஆண்டு ஒரு பெண் ஜெபிப்பதற்காக வந்தாள். முஸ்லீம் பின்னணியைச் சேர்ந்தவள், இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு பின்னர் ஒரு கிறிஸ்தவரை திருமணம்செய்து கொண்டாள். அவளுடைய அபிப்பிராயப்படி, அவர்களுடைய குடும்பத்திலுள்ள எல்லாபெண்களும், சுமார் 20பேர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களை திருமணம் செய்திருக்கிறார்கள். இப்போது அவளுக்கு ஒரு சந்தோசமான திருமணவாழ்க்கை அமைந்துள்ளது. மற்றவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைபோல தனக்கு ஏற்படுமோ என்று பயந்தாள். ஒன்றாக ஜெபித்தோம் இந்நாள் வரை அவளுடைய திருமணவாழ்க்கை சந்தோசமாக இருந்துவருகிறது

அந்த 20 பெண்களுக்கு நேர்ந்தகாரியம் ஒரு குடும்ப சாபத்தின் விளைவாக வந்தது. அது சாபம் என்பதை அறிந்து விடுதலையை நாடியிருப்பார்களானால் அச்சாபமானது நிறுத்தப்பட்டு உடைக்கப்பட்டிருக்கும்.

## 5. தரித்திரம் (Poverty) :

> "உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறது போல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்." - உபாகமம் 8:18

வறுமை என்பது ஒரு சாபம். இது பலவழிகள் மூலமாக வருகிறது. ஒரு கணவனும் மனைவியும் வேலைசெய்தும் சம்பாத்தியம் என்று காட்டிக்கொள்வதற்கு ஒன்றுமிருக்காது. வயது 55ஆகியும் சொந்தமான வீடுஇல்லாமல் அவர்கள் வாடகைவீட்டில்தான் வசித்துவருகின்றனர். அவர்களுக்கு எப்போதும் கடன்தான். அவர்களைவிட வயதுகுறைந்த சின்னவேலையிலிருப்பவர்களிடம் கடன் வாங்குவார்கள். பணம் எப்படி செலவாகிறது என்று கணக்கு பார்க்க இயலாதவர்களாக இருக்கின்றனர். இது தேவனுடைய சித்தம் அல்ல என்பதை ஒத்துக்கொள்வீர்கள். தீர்வு இயேசுவிடம் இருக்கிறது.

> "மேலும் நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும். சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்."
> - 2கொரிந்தியர் 9:8

## 6. அடிக்கடி நிகழும் விபத்துகள் (Frequent accidents):

அநேகருக்கு அடிக்கடி விபத்துநேரிடும். இப்படிப்பட்டவர்கள் சாபங்களுக்கு உட்பட்டிருக்கிறார்கள் என்று அர்த்தம். சிலவேளைகளில் ஒரு சிறிய தவறு ஒரு பெரிய விபத்தைத் தூண்டுவிடுகிறது. சிலருடைய வாழ்க்கையில், எவ்வளவுதான் கவனமாக இருந்தாலும் அவர்கள் எத்தவறும் செய்யாமலே யாராவது அவர்கள்மீது மோதுகின்றனர் அல்லது வேறுஎதாவது நடக்கிறது. சிலர் ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் ஒரே இடத்தில் அவர்களது கைகளையோ கால்களையோ பலமுறை முறிவுக்குள்ளாக்கி இருப்பார்கள். இப்படி காரியங்கள் நடக்குமானால் அவர்கள் அவர்களை நொந்துகொள்வதாலோ அல்லது பிறரை குறைசொல்வதாலோ தீர்வு கிடைக்காது. இவர்களுக்கு விடுதலை ஊழியம் தேவையாக உள்ளது. சிலர் 10வருடங்களுக்கு மேலாக எந்த ஒரு விபத்தும் ஏற்படாமல் காரை ஓட்டிக்கொண்டிருப்பார்கள். சிலர் வழக்கமாக ஆண்டுதோறும் விபத்து சம்பந்தமான வழக்குக்காக ஒரு காவல்துறையிலிருந்து இன்னொரு காவல் துறைக்கு சென்றுகொண்டும் சிலர் தங்களுடைய வாகனங்களை அல்லது பிறருடைய காரை பழுது பார்த்தவண்ணம் இருப்பார்கள். இச்சாபத்திலிருந்து வெளிவர ஒரு வழி இருக்கிறது. இயேசுவே தீர்வாக இருக்கிறார்.

## 7. மனநிலை பாதிப்பு (Mental breakdown) :

'தேவன்-சித்தம்-செய்வார்-ஊழியங்களுக்கு' 1993ஆம் ஆண்டு ஒரு சுறுசுறுப்பான ஆண்டாக இருந்தது. ஜனவரி மாதம் தொடங்கி டிசம்பர் வரையும் அநேக மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊழியம் செய்தோம். தேவனுக்கு மகிமை உண்டாகட்டும்! சிலர் இரும்புச்சங்கிலிகளால் கட்டுண்டவர்களாகவும், சிலர் நிர்வாணமாகவும் வந்தவர்கள் விடுதலை பெற்று திரும்பியபோது புன்னகை பூத்தவாறும் தேவனுக்கு துதிசெலுத்தியவாறும் சென்றார்கள். யாராவது பைத்தியமாக இருந்தால், அவர்களில் பெரும்பாலோரது வாழ்க்கையில், ஒரு சூழ்நிலையில் அல்லது ஒரு உடன்படிக்கையில், நிபந்தனைகளில் ஒன்றை அவர்கள் நிறைவேற்றாததால் பிசாசுகள் அவர்கள் மீது மரணதண்டனையை நிறைவேற்றும் முன்னதாக அவர்களை பைத்தியமாக்குகின்றன. இவ்வேளையில் அக்குடும்பத்தார் செய்யவேண்டிய மிகச்சிறந்த காரியம் என்னவென்றால் கடந்தகாலங்களில் நடந்த காரியங்களையும் அவைகளின் பின்னணிகளையும் நன்றாக சோதித்துப் பார்க்கவேண்டும். சத்துரு நுழையக் காரணமான ஓட்டையை அடையாளங்கண்டு கொண்டால் அதற்கான பரிகாரத்தை விடுதலை ஊழியத்தின் மூலம் சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

1993, மே மாதத்தில் 'விடுவிக்கும் சுகமாக்கும் பள்ளி'யில் பட்டம்பெற்ற ஒரு சகோதரி, ஒரு நபரை என்னிடம் அழைத்துவந்தாள். அவளுடைய இளைய சகோதரி பைத்தியமாக இருந்தாள். அக்குடும்பத்தினர் மருத்துவமனைகளுக்கும் ஜுஜு வீடுகளுக்கும் எல்லா இடங்களுக்கும் சென்றும் ஒரு மாற்றமும் அவளுக்கு ஏற்படவில்லை. அவளை எப்பொழுதும் சங்கிலியால் கட்டிப்போட்டிருந்தார்கள். அவளுக்கு உணவு கொண்டுசெல்பவர்கள்கூட வேகமாக உணவை வைத்துவிட்டு ஓடிவந்துவிடுவார்கள். அப்படி இல்லாவிட்டால் அங்கே அவளால் உபத்திரவம்தான். எல்லா பணமும் செலவளித்தும் ஒருபயனும் இல்லாததால் அவளை வடக்குபகுதிக்கு எடுத்துசென்று அங்குள்ள புதருக்குள் போட்டுவிடலாம் என்று தீர்மானித்தனர். ஆனால் இச்சகோதரி 'மறுபடியும் பிறந்தவளாக' இருந்ததால், இயேசுவால் கூடாதது ஒன்றுமில்லை என்று விசுவாசித்தாள். அவளது ஊருக்குச் சென்று அவளது தங்கையை இபதானுக்கு ஜெபிப்பதற்காக அழைத்துக்கொண்டு வரவிரும்பியதாக என்னிடம் சொன்னாள். ஆனால் அவளுக்கு இருந்த பயமெல்லாம், தனியாக அவளை எப்படி கொண்டுவருவது? பொது வாகனத்தில் சங்கிலிகளோடு அவளை எப்படி கொண்டுவருவது? என்பதுதான்.

அவள் வீட்டிற்கு சென்று குடும்பத்தாரிடம் விருப்பத்தைச் சொன்னாள். யாரும் அவளுக்கு ஆதரவுதெரிவிக்காமல் அதைரியப்படுத்தினார்கள். அவளது பக்கத்திலேயே போக முடியவில்லை இப்படியிருக்க தனியாக அவளை பொது வாகனத்தில் கொண்டுசெல்வது ஞானமற்ற யோசனை என்றார்கள். கடைசியாக இச்சகோதரி விசுவாசத்தோடு அநேக பிரச்சினைகளின் மத்தியிலும் அவள் தங்கையை அழைத்துக் கொண்டுவந்ததாக சொன்னாள். தேவனுடைய நாமத்துக்கு மகிமையாக, அவள் வாகனத்தில் பிரயாணம் செய்யும் போது பைத்தியம் என்று எவரும் சந்தேகப்படமுடியாதவாறு சாதாரணமாக நடந்துகொண்டாள். ஆனால் இபதானிலுள்ள அவளுடைய சகோதரியின் வீட்டிற்கு வந்ததும் பிசாசுகள் கொடூரமாக செயல்படத்துவங்கினதால் அவள் வன்முறையில் ஈடுபடுகிறவளாக மாறிவிட்டாள். அவளைப் பலவந்தப்படுத்தி விடுதலை ஊழியத்தின் செயலகத்திற்கு கொண்டுவந்தார்கள். அங்கே வந்ததும், உடன்படிக்கைளை உடைத்து சாபங்களை செயலிழக்கச் செய்யத் துவங்கினோம்.

அவளுக்கு ஊழியம் செய்வதற்கு எங்களுக்கு பலநாட்களாயிற்று. ஒரு கட்டத்தில் அவள் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்தாள். இப்பொழுது, தேவனுக்கு மகிமையாக இயேசு அவளை முற்றிலும் விடுதலையாக்கினார். புத்திதெளிந்த அவள் இப்பொழுது விடுதலையோடு கர்த்தருக்கு சேவைசெய்துகொண்டிருக்கிறாள். அவள் வீட்டிற்குத் திரும்பிச்சென்று ஒரு வேலை தேடவேண்டுமென்று விரும்புவதாக என்னிடம் ஒரு நாள் சொன்னாள். அங்கே தங்கியிருந்தால் அதிகமாக தேவனுடைய வார்த்தைகேட்டு வளரமுடியும் என்று அவளுக்கு ஆலோசனை

அளித்தேன். இப்பொழுது எங்களது ஊழியத்தின் ஊழியக்குழுவிலுள்ள ஒரு அங்கத்தினராக இருக்கிறாள். உதவியற்றவர்களுக்கு மகத்தான உதவி ஒத்தாசை செய்கிறவளாக இருக்கிறாள்.

கர்த்தரைத் துதிப்போம்.

## அத்தியாயம். 8

# சாபங்களிலிருந்து வெளிவரும்வழி

(Way out of Curses)

சூரியனுக்கு கீழேயுள்ள, ஒவ்வொரு சிரமமான காரியத்திற்கும், சாத்தியமற்ற சூழ்நிலைக்கும் ஒரு தீர்வு இருக்கிறது. சாபங்களினால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கான ஒவ்வொரு தீர்வும் கல்வாரி சிலுவையில் இயேசு செய்துமுடித்தவைகளாலும், இயேசுவின் இரத்தத்திலும் இயேசுவின் நாமத்திலும் இருக்கிறது.

> “மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.” - கலாத்தியர் 3:13

தீர்வைக் கொண்டுவரும் என்று சொல்லும் பிற அனைத்து வழிமுறைகளும் போலியானது.

### 1. விடுவிக்கப்படவேண்டும் என்ற விருப்பம் வேண்டும் (Willingness to be free) :

> “ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.” - வெளி 22:17

எவரையும் கட்டாயப்படுத்துவதால் தீர்வு வராது. ஒரு சாபத்தின் கீழிருக்கிற ஒரு நபரை விடுவிப்பதற்காகக் வற்புறுத்திக்கட்டாயப்படுத்தினால் அதனுடைய பலன் அவ்வளவு நன்றாக இருக்காது, அதிலும் குறிப்பாக அந்நபர் மறுபடியும் பிறவாதவராகவும் அல்லது மறுபடியும் பிறக்க விரும்பாதவராகவும் இருந்தால் நன்றாகவே இருக்காது. அப்படிப்பட்ட நபருக்கு உதவுவது பயங்கரமானது, ஏனென்றால், “அசுத்த ஆவி ஒரு மனுசனைவிட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: நான் விட்டுவந்த என் வீட்டுக்குத்திரும்பிப்போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு, திரும்பிப்போய் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது அந்த மனுசனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும் (மத்தேயு 12:43:45). அந்நபரின் வாழ்வை இயேசு ஆளுகை செய்யாவிட்டால் அவளது அல்லது அவனது பின்னிலையானது மிகமோசமாக இருக்கும்.

### 2. பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்பு (Confession and repentance):

உடன்படிக்கைகளுக்கும் சாபங்களுக்கும் ஒரு முடிவுகட்டுவதற்காக அனேக மக்கள் விடுதலை பெற வருகின்றனர். ஆனால் அவர்களுடைய பாவங்களைவிட்டு மனந்திரும்புவற்கு

அவர்களுக்கு விரும்பமில்லை. அநேகர் பாவங்களை அறிக்கையிட தயாராக உள்ளனர் ஆனால் வெகுசிலர் மட்டுமே அப்பாவங்களை விட்டுவிடத்தயாராக இருக்கின்றனர். பாவஅறிக்கை செய்யும் போது செய்தபாவங்களுக்காக மனந்திரும்புதலும் இனி செய்யாதபடி அப்பாவங்கள் விட்டுவிடுதலும் இணைந்து செல்லவேண்டும். பிசாசின் இராஜ்யத்தை விட்டு ஓடிவருகிறேன் என்று உரிமைபாராட்டுகிற நாம் அதை முழுமையாக விட்டுவிட வேண்டும்.

> “இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம், [குமாரனாகிய] அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.” - கொலோசெயர் 1:13,14

புாவ இன்பத்தை அனுபவித்துக்கொண்டு அப்பாவத்தை விட்டுவிட விரும்பாத ஒருநபருக்காக தேவன் கிரியை செய்யமாட்டார். நாம் நமக்கும் நம் தேவனுக்கும் உண்மையும் உத்தமமுமாக இருந்தாக வேண்டும். நாம் நமது பாவங்களையும் நம்முற்பிதாக்களின் பாவங்களையும் அறிக்கைசெய்து விட்டுவிடும்போதுதான் சாபங்களும் உடன்படிக்கைகளும் உடைக்கப்படும்.

1993ஆம் ஆண்டு ஒரு மனிதனும் ஒரு பெண்ணும் என்னிடத்தில் வந்தார்கள். அவர்களுக்கு பிள்ளைகிடைப்பதற்காக நான் ஜெபிக்கவேண்டுமென்று விரும்பினார்கள். அவர்களது பிரச்சினைகள் மற்றும் துன்பங்களைக்குறித்து புலம்பிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நான் ஊழியம் செய்ய விரும்பியபோது, “இவர்களுக்காக ஜெபிக்காதே” என்று பரிசுத்தஆவியானவர் என்னிடம் சொன்னார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஒருபோதும் என் வாழ்நாளில் தேவனிடமிருந்து இப்படி ஒரு ஆலோசனையை நான் கேட்டதில்லை. அவருடைய பிள்ளைகளுக்காக எப்போதும் உதவ விரும்பும் இரக்கமுள்ள தேவன் என்றுதான் நான் அறிந்திருக்கிறேன். இரண்டு நிமிடங்கள் தயங்கிவிட்டு மறுபடியும் அவர்களுக்காக நான் ஜெபிக்க முயன்றபோது, “இவர்களுக்காக ஜெபிக்கவேண்டாம் என்று ஏற்கெனவே உனக்கு சொல்லியிருக்கிறேனே” என்று அவர் என்னை தீர்க்கமாக கடிந்துகொண்டார். அதன் பிறகு தான் ஏன் என்று கேட்டேன். அவர்கள் திருமணமானவர்களா என்று என்னிடம் கேட்டார். ஆகவே அவர்களிடம் நீங்கள் எப்போது திருமணம் செய்துகொண்டீர்கள் என்று கேட்டேன். அப்பெண் தலைகவிழ்ந்தவாறு நவம்பர் மாதம் திருமணம் செய்யப்போகிறோம் என்றாள். அவர்கள் பாவத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்றும் பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்பி இயேசுவை அவர்களது சொந்தஇரட்சகராக ஏற்றுக்கொண்டு ஒழுக்கக்கேடான வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளிவைக்காவிட்டால் கர்த்தரின் முகத்தைக் காணமுடியாது என்று அவர்களிடம் வெளிப்படையாக தெரிவித்தேன்.

ஏராளமான மக்கள் இவர்களைப்போல இருக்கிறார்கள். **ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள் ஆனால் ஆசீர்வதிக்கிறவரோடு ஒரு உறவை ஐக்கியத்தை வைத்துக்கொள்வதை** சிரமமாக கருதுகிறார்கள்.

### 3. ஆசாரியனைப்போல செயல்படுங்கள் (Act as a Priest) :

தேவனுக்கு முன்பாக ஒரு ஆசாரியனாக போய் நில்லுங்கள். ஒரு ஆசாரியனுக்கு அநேக கடமைகள் உண்டு :

- பரிசுத்த ஸ்தலத்தைக் காவல் பண்ணவேண்டும் (எண்ணாகமம் 3:38)
- குத்துவிளக்கை எப்பொழுதும் எரியவைக்க வேண்டும் (யாத்திராகமம்27:21-21)
- பலிபீடத்தின்மேல் அக்கினிஎப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கவேண்டும்(லேவி6:12-13)
- பாளையம் புறப்படும்போது, சகலபணிமுட்டுகளையும் மூட வேண்டும் (எண்4:5-15)
- தூபம் காட்டவேண்டும் (யாத் 30:7-8)
- பலிகள் செலுத்தவேண்டும் (லேவி 1:1-17)

- ஜனங்களை ஆசீர்வதிக்கவேண்டும் (எண் 6:23-27)
- தீட்டுபட்டவர்களை சுத்தமாக்கவேண்டும் (லேவி 15:15-31)
- குஷ்டரோகத்தை கண்டுபிடிக்கவேண்டும் (லேவி 13:2-59)
- எக்காளம் ஊதவேண்டும் (எண் 10:1-10)
- உடன்படிக்கை பெட்டியை சுமக்கவேண்டும் (யோசுவா 3:6-17)
- சகல பிரமாணங்களையும் போதிக்கவேண்டும் (லேவி 10:11)

விசுவாசிகள்தான் இன்றைய ஆசாரியர்கள் என்று வேதாகமம் சொல்கிறது.

> ‘‘நம்மிடத்தில் அன்பு கூர்ந்து. தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.’’ - வெளி 1:6

இந்த ஆசாரியர்கள் (இயேசுகிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாக இருப்பவர்கள்) **ஆவிக்குரிய பலிகளை** செலுத்த கடமைப்பட்டவர்கள்.

> ‘‘இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்.’’ - 1பேதுரு 2:5

எவ்வளவு விசுவாச அறிக்கைசெய்தாலும் அல்லது அசுத்த ஆவிகளை கட்டினாலும் துரத்தினாலும், உரிமைபாராட்டினாலும், இயேசுவின் இரத்தத்தால் வேண்டுதல் செய்தாலும் இதுபோன்று வேறு என்ன செய்தாலும் **தேவனுக்கும் உங்கள் குடும்பத்தாருக்குமிடையே நீங்கள் ஆயத்தத்துடன் ஒரு ஆசாரியனாக நிற்கும் வரையில்,** எதையும் சாதிக்க முடியாது. மேலேகுறிப்பிட்ட அனைத்து முயற்சிகளும் பயனுள்ளவைகள்தான் ஆனால் அவைகள் நிரந்தரமான பலனை ஏற்படுத்தாது. நாம் எழுந்து நமது பாவங்களையும் நமது குடும்பத்தாரின் பாவங்களையும் அறிக்கைசெய்து விட்டுவிட வேண்டும். ஆவிக்குரிய காரியங்கள் அவிசுவாசிகளுக்கு முட்டாள்தனமாக தோன்றுவதால் அவர்கள் சார்பாக நாம்தான் தேவனை தேடியாகவேண்டும். ஒருவேளை ஆவிக்குரிய தேவைகளை இவர்களால் கண்டுகொள்ள முடியாமல் இருக்கக்கூடும். மேலும் அவர்கள் இயேசுவை அறியாததால், ஒரு ஆசாரியனாக வேலை செய்யும் தகுதிபெறாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சார்பாக பாவஅறிக்கை செய்யும் வேலையை செய்வதற்கு நாம்தான் விசேஷமான வெளிச்சம் பெற்றிருக்கிறோம். ஆகவே நாம்தான் மன்றாடவேண்டும் என்பது மிகமுக்கியமான காரியமாகும். உங்களது பாவங்களுக்காகவும் உங்களது குடும்பத்தாரின் பாவங்களுக்காகவும் மன்னிப்பு கேளுங்கள்.

### 4. உங்களுக்காகவும் முன்னோர்களுக்காகவும் மன்னிப்பு கேளுங்கள் (Ask for forgiveness for yourself and ancestors):

உங்கள் பாவங்களை அறிக்கைசெய்து மனந்திரும்பி, அவைகளை விட்டுவிடுவதற்கு உங்கள் இதயத்தில் தீர்மானித்துக்கொள்ளுங்கள். இவைகளைச் செய்தபின், தேவன் உங்களை மன்னித்துவிட்டார் என்று விசுவாசியுங்கள். இதை நீங்கள் விசுவாசிக்காவிட்டால் கடந்தகால பாவங்களை பிசாசு உங்களுக்கு நினைப்பூட்டி, உங்களது தைரியத்தையும் விசுவாசத்தையும் களவாடி, அவனை எதிர்த்து நிற்க முடியாதபடி ஆக்கிவிடுவான். நாம் இயேசுவை நமது கர்த்தராகவும் சொந்த இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும்போது, நாம் இந்த உலகத்துக்கு செத்துவிடுகிறோம் (ரோமர் 6:6,7) என்றும் கிறிஸ்துவே நம்மில் வாழ்கிறார் என்றும் வேதாகமம் சொல்கிறது.

‘‘கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நாம் மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.’’ – கலாத் 2:20

தாவீது அற்புதமாக பாடியுள்ளார்.

‘‘அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச்செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபை அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார், நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்றுநினைவுகூறுகிறார்’’.
– சங்கீதம் 103: 10-14

தேவனுடைய வார்த்தையை விசுவாசியுங்கள். உங்கள் பாவங்களெல்லாம் தேவனால் மன்னிக்கப்பட்டுவிட்டது என்ற நபரைப்போலவும் உங்களுடைய ஆசீர்வாதங்களை இனி எதுவும் தடைசெய்யமுடியாது என்பது போலவும் நடந்துகொள்ளுங்கள்.

## 5. நிபந்தனையின்றி பிறரை மன்னித்துவிடுங்கள் (Forgive others unconditionally) :

‘‘நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை மன்னிக்கும்படி, அந்தக்குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார்.’’

- மாற்கு 11:25.26

தனது பாவத்தையும் தனது முன்னோர்களின் பாவங்களையும் தேவன் மன்னிக்க வேண்டும் என்று ஒருவர் விரும்பினால், முதலாவதாக அவர், கடந்தகாலங்களில் பிறரால் (பிறர் ஏற்றுக்கொண்டாலும் அல்லது ஏற்றுக்கொள்ளாவிட்டாலும்) அவருக்குச் செய்யப்பட்ட தீமைகளுக்காக அவர்களை மன்னித்துவிடவேண்டும். மன்னிக்கப்படுவதற்கு அவர்கள் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக அல்ல, நாம் பிறரை மன்னிக்கவேண்டும் என்று நம்மிடம் தேவன் எதிர்பார்ப்பதினால், தேவன் நமக்கு சொல்லியிருக்கும் நிபந்தனையினாலும் அவர்களை மன்னித்துவிடவேண்டும். தேவனை திருப்திப்படுத்தும்படியாக நாம் அப்படி செய்தாக வேண்டும்.

**நீங்கள் அவர்களை மனப்பூர்வமாக மன்னிப்பதற்கு முடியாது என்று மறுத்தால், நீங்கள் எத்தனை முறை, எவ்வளவு நேரம் ஜெபித்தாலும் உபவாசித்தாலும் ஒரு அற்புதமும் நடக்காது.** நீங்கள் <u>தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாதபடி தடுக்கும் பிசாசுகள் உங்களுக்கு வரவேண்டிய விடுதலையையும் அற்புதங்களையும்கூட தடுக்கின்றன</u>. ஆகவே எல்லாரையும் இதயப்பூர்வமாக மன்னித்துவிடுங்கள் - ஒருவேளை அந்நபர் உங்களை தொழிலில் ஏமாற்றியவராகக்கூட இருக்கலாம், அல்லது முன்பு உங்களைத்தான் திருமணம் செய்வேன் என்று நிச்சயம் செய்து ஏமாற்றிய நபராக இருக்கலாம், உங்களது கணவனோ, மனைவியோ, அல்லது பிள்ளைகளோ யாராக இருந்தாலும் அனைவரையும் மன்னித்துவிடுங்கள். நீங்கள்

பிறந்ததிலிருந்து இந்நாள்வரை நீங்கள் செய்த எல்லாகாரியங்களையும் தேவன் மன்னித்திருக்கும்போது உங்களால் பிறரை மன்னிக்கவும் மறக்கமுடியாதபடி தடுக்கிற காரியம் எது?

## 6. பழைய வம்சவாழ்க்கை ஏடுகளைப் புரட்டிப்பாருங்கள் (Search for the Old Records) :

> "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்."
> -யோவான் 8:32

உங்கள் பெற்றோர்கள், முற்பிதாக்கள், உங்கள் குடும்பத்திலிருக்கும் முதியவர்கள், மூத்தவர்கள் அல்லது உங்கள் வளாகத்திலுள்ளவர்களிடமிருந்து முன்னோர்கள் வழிபட்டவைகளைக் குறித்தும் அல்லது சமுதாயத்தில் உங்களுக்காக / பிறருக்காக கொடுக்கப்பட்ட பலி அல்லது இரத்தபலி போன்றவற்றை கண்டறிந்து கொள்ளுங்கள். இவ்விபரங்களை அறிவதற்காக நீங்கள் செலவழிக்கும் நேரங்கள் வீணானது அல்ல. விடுதலைக்காக செய்யத்தகுந்தவைகளை செவ்வையாக செய்துமுடிப்பதே சிறந்தது. அவர்கள் கடைபிடித்துவந்த பழக்கவழக்கங்களில் பலவற்றை நாம் மறந்திருந்தாலும் அவர்கள் சொல்கிற சின்ன காரியங்களின் மூலமாக மற்றகாரியங்களில் எப்படி நடந்திருப்பார்கள் என்பதை நீங்கள் ஊகித்தறிய தேவஆவியானவர் உங்களுக்கு உதவிசெய்வார்.

**குறிப்பு**:- ஒரு ஊழியக்காரர் மீது அல்லது ஒரு மேய்ப்பர் (பாஸ்டர்) மீது இருக்கும் சாபமானது அவருடைய ஊழியத்தையும் அவரது சபையின் வளர்ச்சியையும்கூட பாதிக்க முடியும் என்பதை நன்கு அறிந்துகொண்டவனாக பேசுகிறேன்.

## 7. தீயதொடர்புகள் அனைத்தையும் துண்டித்துவிடுங்கள் (Renounce all evil contacts):

> "வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவவசனத்தை புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்." 2கொரி4:2

> "விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள். மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கும் முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத்தொகை பார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்." - அப் 19:18,19

இந்நேரத்தில் சாத்தானுடனோ, இரகசிய வழிபாடுசெய்யும்குழுவோடோ உள்ள எத்தொடர்பையும் உறவையும் நீங்கள் உடைத்துப்போடவேண்டும். அவைகளை நீங்கள் நிராகரித்தாகவேண்டும்; அவைகள் இனி உங்களோடு உரிமைகொண்டாட முடியாதபடி உங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும். உங்களிடத்திலிருக்கும் அவைகளோடு தொடர்புடைய பொருட்களை, சொத்துக்களை, பரிசுப்பொருட்களை, அலங்காரங்கள் போன்றவைகளை அழித்தாக வேண்டும். உங்களுக்கு உண்மையாகவே ஒரு முழுமையான விடுதலைவேண்டும் என்றால் அப்பொருட்கள் எவ்வளவு விலைஉயர்ந்ததாக இருந்தாலும் அவைகளை நிராகரித்து அழித்தாகவேண்டும்.

கேக்கை சாப்பிடுவேன் ஆனால் அது குறைந்துவிடாமல் பார்த்துக்கொள்வேன் என்பது முடியாத காரியம். *(ஆம்பிளேட்டும் வேணும் ஆனால் முட்டையை உடைக்கக்கூடாது என்றால்*

*எப்படி?)* நீங்கள் சிறுபிள்ளையாக இருக்கும்போதோ அல்லது சமீபகாலத்திலோ உங்கள் சார்பாக பலி செலுத்தியதோ அல்லது உங்கள் சார்பாக அங்கிருந்து பூஜிக்கப்பட்ட பொருளோ வேறு காரியமே செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால், உங்கள் வீட்டிற்கு சென்று அவைகளை எல்லாம் சேகரித்து இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அவைகளை அழித்தாகவேண்டும். **இயேசுகிறிஸ்துவுக்காக இவ்வித தியாகங்களை செய்ய விருப்பமில்லை என்றால், நீங்கள் முழுமையான விடுதலைக்கு ஆயத்தமாக இல்லை என்று பொருள். இப்படிப்பட்ட பொருட்களை அழிக்காமல் அதற்குமுன்னதாக செய்யப்படும் ஜெபமும் உபவாசமும் ஒரு முதலுதவி தான்.** அவைகளோடு சம்பந்தப்பட்ட பொருட்களை அழிக்காமல் உங்களோடு வைத்துக்கொண்டால் அந்த உண்மையான பிசாசுகள் உங்களைவிட்டுப்போகாது.

ஆகவே, இத்தீய அனைத்தையும் துறந்துவிட்டு (விட்டுவிட்டு), இப்பிசாசுகளோடு உள்ள தொடர்புகளை இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உடைத்துவிட்டு, அவைகளுக்குச் சொந்தமான எல்லாபொருட்களையும் அழித்துவிடுங்கள்.

### 8. இயேசுகிறிஸ்துவின் நிவாரணபலியிலும், இரத்தத்திலும், அவர் செய்துமுடித்தவைகளிலும் விசுவாசம் வைத்தல் (Faith in the atonement, blood and finished work of Jesus) :

> “நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக்குலைத்து அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி. அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.” - கொலோசெயர் 2:14-15

பிசாசு உங்களுக்கு எதிராக உயர்த்திப்பிடித்துக்கொண்டிருந்த அனைத்து குற்றஞ்சாட்டுகளையும் இயேசுகிறிஸ்து குலைத்துப்போட்டார். அவைகள் அனைத்தையும் அவருடைய சிலுவையில் ஆணி அடித்துவிட்டார். இது பிசாசுக்கு தெரியும் ஆனாலும் நாம் அவனுக்கு நினைப்பூட்டியாக வேண்டும் அப்போதுதான் கிறிஸ்து இயேசுவால் அவனுடைய முதுகெலும்பானது உடைக்கப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டது என்பதை நாம் அறிந்திருக்கிறோம் என்பதை அவன் அறிந்துகொள்வான்.

> வேதாகமம் கூறுகிறது, “ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.” - கொலோசெயர் 3:3

உங்கள் உயிரானது – உங்கள் வாழ்க்கையானது பிசாசின் தயவில் இல்லை ஏனென்றால் அது கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. இதை பிசாசு அறிந்திருக்கிறான், ஆகவே அவனால் அதை எடுக்கமுடியாது ஏனென்றால், “உலகத்திலிருக்கிறவனைப் பார்க்கிலும் உங்களுக்குள்ளிருப்பவர் பெரியவராயிருக்கிறார்” (1யோவான் 4:4). மேலும் வேதாகமம், “தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் (அவர்களுக்காக இயேசு என்னவெல்லாம் செய்துமுடித்திருக்கிறார் என்பதை அறிந்த ஜனங்கள்) திடங்கொண்டு அதற்கேற்றபடி செய்வார்கள்” (தானியேல் 11:32) என்றும் சொல்கிறது. இச்சத்தியங்களை அறியாத அவனோ அவளோ தான் பிசாசுக்கு பயந்து அவனுக்கு மரியாதை செலுத்த ஆரம்பிக்கிறார்கள். அதனால்தான் தேவன், “என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்” (ஓசியா4:6) என்று சொன்னார்.

கவலைப்படாதீர்கள், இயேசுவின் நாமத்தில் நீங்கள் ஜெபித்தபின்னர் உங்கள் மேலிருந்த சாபங்கள் ஒருபோதும் இனி இருப்பதில்லை.

### 9. திறப்பின் வாசலில் நில்லுங்கள் (Stand in the Gap) :

> “நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்.” – எசேக்கியேல் 22:30

உங்கள் குடும்ப அங்கத்தினரிடையே திறப்பின் வாசலில் நிற்கக்கூடிய ஒரு மனுஷனை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார். உங்கள் குடும்பத்தில் இரண்டோ அதற்கு அதிகமானவர்கள் மறுபடியும் பிறந்தவர்களாக இருந்தால் கர்த்தருக்கே துதியும் ஸ்தோத்திரம் செலுத்துவோம்! மன்றாட்டு நேரத்தின் போது எல்லாரும் ஒன்றுகூடுங்கள். தேவனுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் நடுவில் நில்லுங்கள். உங்கள் குடும்பத்தாரின், உங்கள் பெற்றோரின், உங்கள் முற்பிதாக்களின் மற்றும் நீங்கள் சார்ந்துள்ள சமுதாயத்தின் பாவங்களையும் அறிக்கையிடுங்கள். கடந்தகாலத்தில் நிகழ்ந்த எல்லாவற்றிற்காகவும் கர்த்தரிடம் மன்னிப்பு கேளுங்கள்.

நீங்கள் இருளின் கிரியைகளை சுற்றி வெற்றிநடைபோடுங்கள். ஏனென்றால், “நான் மோசேக்கு சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன் (பிசாசுக்கு என்று எதுவும் இல்லை). –யோசுவா 1:3

## **10. சிலரோடு சேர்ந்து ஒரு கூட்டுஜெபம் செய்யுங்கள்** (Have a corporate prayer with some people):

> “நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.” – யாக்கோபு 5:16

நம்பகமான, அர்ப்பணிக்கப்பட்ட ஒத்தமனமுடையவர்கள் ஒன்று சேர்ந்து ஜெபிக்கும்போது சாதாரணமாக நிகழாத காரியங்கள் கூட நிகழத்துவங்கும். ஏனென்றால் உலகிலுள்ள அனைத்து ஏவுகணைகளையும் இரசாயன ஆயுதங்களையும் ஒன்று சேர்த்தாலும்கூட அவைகளைப்பார்க்கிலும் இயேசுகிறிஸ்துவின் நாமத்திலும் இரத்தத்திலும் உள்ள வல்லமையே மேலானது.

அப்போஸ்தல நடவடிக்கைகள் 12அதிகாரத்தில், அப்போஸ்தலனாகிய பேதுருவை குறித்து நாம் படிக்கிறோம். இயேசுவின் நாமத்திற்காக அவரை கைதுசெய்து சிறைப்படுத்தினார்கள். சில விசுவாசிகள் ஒன்றுகூடி ஜெபித்தார்கள் *(வசனம் 12:5)*. கர்த்தர் ஒரு தூதனை அனுப்பி அவன் மீதுபோடப்பட்ட சங்கிலிகளை கட்டவிழச்செய்து அவனை விடுதலையாக்கினார். நடந்தவைகளை குறித்து பேதுருவால் புரிந்துகொள்ள முடியவில்லை. *‘சங்கிலிகள் அவன் கைகளிலிருந்த கழன்று விழுந்தன.’ (வசனம் 12:7)*

சங்கிலிகளானது உங்கள் கைகளிலிருந்தும் உங்களது குடும்பத்தாரின் கைகளிலிருந்தும் இயேசுவின் நாமத்தில் கழன்று விழும்.

> “அவர்கள் முதலாங்காவலையும் இரண்டாம் காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இருப்புக் கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது; அதின் வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதிநெடுக நடந்துபோனார்கள்; உடனே தூதன் அவனை விட்டுப்போய்விட்டான்.” – அப்போஸ்தலர் 12:10

உன்னுடைய தூதன் முதலாம் காவலாகிய நோயின் தடைவாசலையும் கடந்து, இரண்டாம்

காவலாகிய வறுமை என்னும் இருப்புக் கதவையும் தாண்டி, உன்வாழ்வில் விடுதலை அடைய முடியாதபடி இருக்கிற எல்லா பிரச்சினைக்கதவுகளும் இயேசுவின் நாமத்தில் தானாய் திறக்கும்.

> “பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது: ஏரோதின் கைக்கும் யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான்.” அப் 12:11

விசுவாசிகளின் கூட்டுஜெபமானது முதலாம் காவலையும் இரண்டாம் காவலையும் உடைத்து இவ்வளவு வேகமாக பதில்வருமா என்று நம்பமுடியாத அளவுக்கு இரும்புக்கதவுகளையும் திறக்கவைத்தது. சகோதரி ரோதை சொன்னதை அவர்கள் நம்பவில்லை. பேதுரு கதவைத்தட்டுகிறதைக் கேட்டார்கள் ஆனால் ‘அது அவருடைய தூதனாக இருக்கும்’ என்றார்கள். அவருடைய தூதனாக இருந்தால் ஜெபஅறைக்குள் நேரடியாக உள்ளே வந்திருப்பானே! இயேசுவின் நாமத்தையும் இயேசுவின் இரத்தத்தையும் பயன்படுத்துகிற கூட்டுஜெபத்தில் வல்லமையிருக்கிறது. **இந்த ஜெபக்கூட்டமானது உபவாசத்தோடும் ஜெபத்தோடும் இரண்டு அல்லது மூன்று நாட்கள் நடத்தப்படவேண்டும்**.

1991ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நாங்கள் திருமணம்செய்துகொண்டோம். அதே மாதத்தில் கடைசிவாரத்தில், அவசரமாக அற்புதங்களை நாடிய 5சகோதரர்களோடு சேர்ந்து நானும் என் மனைவியும் 3நாள் இரவு உபவாசஜெபம்செய்தோம். சாதாரண ஜெபங்களால் பிரச்சினைகளுக்கு பலன்கிடைக்கவில்லை என்றால் தீவிரமான ஜெபமும் உபவாசமும் தேவை என்பதை தேவன் எனக்கு போதிக்க இதை பயன்படுத்தினார். அந்த 3 நாட்களும் நாங்கள் தாகமாயிருந்தபோது தண்ணீர் மட்டும் குடித்தோம், நாங்கள் சாப்பிடவில்லை. நாங்கள் ஒன்றாக தங்கியிருந்து ஒருவருக்கொருவர் ஊழியம் செய்தோம். ஒரு சகோதரி ஊழியம் செய்யும் முறைவந்தபோது வியாதி உடனடியாக குணமானது. உடன்படிக்கைகளும் சாபங்களும் வெற்றிகரமாக அகற்றப்படும்போது ஆசீர்வாதங்களை மறுபடியும் எதுவும் தடைசெய்யமுடியாது என்பதை நான் அறிவேன்.

அவளுக்கு 25வயது. அவளுடைய தலையில் முடி இல்லை, அவளை திருமணம் செய்ய எந்த ஆளும் இல்லை, வேலையில்லை, வருமானத்திற்கான வழியும் இல்லை மற்றும் தகப்பனும் இல்லை. இத்துன்பங்களுக்கெல்லாம் கிரீடம் வைத்ததுபோல அவள் யாரோடு தங்கியிருந்தாளோ அந்த மாமாவும் அவளை வெறுத்தார். அவள் ஒன்றரைவயதாக இருக்கும்போது அவள் ஒரு வியாதி வந்ததால் உள்ளூர் மருத்துவரிடம் அவளை கொண்டுசென்றார்கள். வியாதியிலிருந்து குணமான உடனே அவளுடைய தலைமுடியெல்லாம் முற்றிலும் உதிர்ந்துபோயிற்று. இருபத்துமூன்றரை வருடங்களாக பிறர் கண்டு கொள்ளாமலிருக்கும்படி தலையை தினமும் முக்காடிட்டு மூடிக்கொள்வாள். ஆரம்பபள்ளிக்கூடத்தில் அவள் படிக்கும்போது அவள் அனுபவித்து வந்த வேதனைகளை எல்லாம் தெரிவித்தாள். பொதுவாக பள்ளியில் ‘அந்த தலையில் முடியில்லாதபிள்ளை’ என்று தான் அடையாளம் காட்டி பேசப்படும் பிள்யைாக இருந்தாள்.

ஏனென்றால் அவளுடைய அப்பா அவளுக்காக வாழ்நாள் முழுவதும் செலவளித்தும் ஒரு முன்னேற்றமும் இல்லாதிருந்ததால் அவளுடைய அப்பா இறந்தபிறகு அவளுடைய மாமா திடீரென்று இவளுக்கு எதிராக மாறிவிட்டார். பண்டிகை காலங்களில் இவளைத்தவிர மற்ற பிள்ளைகளுக்கெல்லாம் அவர் புத்தாடைகள் எடுப்பார். ஏனென்றால் அந்த வருடத்தில் அவளுக்காக மருத்துவ மனையில் அதிகமான பணம் ஏற்கெனவே செலவளிக்கப்பட்டுவிட்டது என்று காரணம் காட்டுவார்.

நாங்கள் ஜெபிக்கும்போது அவள் கீழே விழுந்தாள். அவள் எழுந்தபோது தலையில் முடிகள் காணப்பட்டன. ஒரு கனவு காண்பது போல இருந்தது.

மூன்றாம் நாளின் கடைசியில், விடுதலைபெற வந்தவா்களெல்லாம் விடுதலைபெற்று சென்றுவிட்டனா். ஆனால் இவளோ இன்னும் ஒருவாரம் அங்கே தங்கியிருந்து நடந்தது உண்மைதானா என்று உறுதிபடுத்திவிட்டுப் போகிறேன் என்றாள். ஒரு வாரம் தங்கிவிட்டு போய்விட்டாள். இரண்டு வாரங்கள் கழித்து சுருள்முடிகளோடு முழுமையானஆடைஅணிந்து என் அலுவலகத்திற்கு வந்திருந்ததைப் பார்த்து மகிழ்ச்சியில் நான் கெம்பீரமாக சத்தமிட்டேன். அவளுடைய சாட்சியை எனக்குச் சொன்னாள்.

அவள் வீட்டிற்கு சென்றபோது அவளுடைய மாமா, இவ்வளவுகாலமாக ‘உன்னை சரியாக கவனிக்கவில்லை’ என்று அவளிடம் மன்னிப்புகேட்டு இனி நல்லபடியாக நடந்துகொள்வேன் என்று வாக்குறுதி அளித்தாராம். லாகோஸ் என்ற இடத்திலுள்ள ஒரு பிரபலமான அங்காடியிலிருந்து ஒரு அவசரமான கடிதம் வந்தது. பலவருடங்களுக்கு முன் இவள் அனுப்பிய விண்ணப்பம் தவறுதலாக இன்னொரு கோப்புக்குள் கிடந்ததை அப்போதுதான் கவனித்தார்கள் என்றும் அவளுக்கு விருப்பம் இருந்தால் வேலையில் சேர்ந்துகொள்ளலாம் என்று ஒரு வேண்டுகோளை அனுப்பியிருந்தனா். அன்றிலிருந்து அவள் இபதான் அலுவலகத்தில் வேலைசெய்ய ஆரம்பித்தாள்.

இலண்டனிலிருந்து ஒருவா் ஒரு செய்தியை கூரியா் மூலமாக அனுப்பியிருந்தாா். அவள்தான் அவருக்கு ஏற்ற சிறந்ததுணை என்று அவருக்கு தெளிவாக உணா்வுவந்தது என்றும் அவள் ஜெபித்து உறுதிசெய்திகொண்டால் அவளை திருமணம் செய்ய விரும்புவதாகவும் தெரிவித்திருந்தாா்.

என்னை ஆச்சரியப்படுத்தியது என்வென்றால் தேவனிடம் நாங்கள் கேட்ட, சுகம், கணவன், தேவனுடைய தயவு, வேலை இவைகள் எல்லாம் 2வாரங்களுக்குள் வந்ததுதான். இன்று தேவன் அவளை திரளாக ஆசீா்வதித்திருக்கிறாா். நீங்கள் எதிா்பாா்க்கும் அற்புதம்கூட இயேசுவின் நாமத்தில் வரும்.

உங்களோடு சோ்ந்து உபவாசித்து ஜெபிக்கும் விருப்பமுள்ள சில சகோதரா்களை தெரிந்தெடுத்துக்கொள்ளுங்கள். 2 அல்லது 3நாட்கள் ஒருவருக்காக ஒருவா் தீவிரமான ஜெபத்தோடும் உபவாசத்தோடும் ஊழியம்செய்து தேவசமூகத்தில் செல்லும்போது அற்புதத்தின் தேவன் உங்களை சந்திப்பாா் நீங்கள் அனைவரும் இயேசுவின் நாமத்தில் சாட்சி சொல்வீா்கள்.

நானும் அந்த ஜெபத்தின்வேளையில் ஆசீா்வதிக்கப்பட்டேன். அது போன்ற ஜெபத்தை ஒவ்வொரு மாதமும் நடத்தவேண்டும் என்று ஒரு சகோதரன் ஆலோசனை தெரிவித்தாா். இத்தகைய மாத உபவாசஜெபத்திலிருந்து பிறந்ததுதான் ‘தேவன்-இதைச்-செய்கிறாா் ஊழியங்களின் வல்லமையான இரவு ஜெபமாகும்’. கா்த்தரைத் துதிப்போம். தேவனுக்கு கீழ்படிவது ஆசீா்வாதத்தை தருகிறது.

## 11. ஒருமனப்பட்டு ஜெபிக்கும் ஜெபம் ((Pray a prayer of agreement)):

> “அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியில் ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவா்களுக்கு உண்டாகும், என்று உங்களுக்குச் சொல்கிறேன்.” – மத்தேயு 18:19

தேவனிடம் தயவுபெற்ற அபிஷேகம் பண்ணப்பட்ட மனிதனோடு அல்லது மனுஷியோடு ஒருமனப்பட்டு ஜெபிக்கும் போது சாதாரணமாக நடக்காத காரியங்கள் நடக்கத்துவங்குகின்றன.

அங்கே எல்லா பாவங்களும் சாபங்களும் செயலிழக்க பட்டுவிட்டன என்பதற்கு ஒரு உண்மையான அத்தாட்சியாக அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் கூடியிருப்பது தெரிவிக்கிறது. இது பலன்கொடுக்கிற ஊழியம் என்பதற்கு எங்களிடம் ஆதாரமுள்ளது.

**12. உங்கள்மீதும் ஜனத்தார் மீதும் ஆசீர்வாதத்தை கட்டளையிடுங்கள்: (Decree blessings upon yourself and people) :**

"நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குதத்தத்தின் படி சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." - கலாத்தியர் 3:29

"கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப்புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ. நான் உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப்பெருமைப் படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்." – ஆதி 12:1-3

"நீர் ஒரு காரியத்தை நிருணயம் பண்ணினால் அது, உமக்கு நிலைவரப்படும்; உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்." – யோபு 22:28

எதற்காக இயேசு மரித்தாரோ அதனால் வரும் அனைத்து பலன்களையும் நீங்கள் பெற்றுகொண்டவராக இருப்பதையும் எல்லாவற்றையும் ஜெயங்கொண்டவராக இருப்பதையும் பிசாசிடம் சொல்லுங்கள். அனைத்து வல்லமைகளும் அதிகாரங்களும் எங்கிருந்து பாய்ந்து வருகிறதோ அந்த உயர் ஸ்தலங்களில் நீங்கள் உட்கார்ந்திருக்கிறீர்கள் என்பதை அவனுக்கு நினைப்பூட்டுங்கள். அவனுடைய தந்திரங்கள் ஒருபொருட்டு அல்ல, சந்தேகத்தை நிராகரித்துவிட்டு, கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு இருக்கும் சுதந்தரத்தையும் அந்தஸ்தையும் அறிந்துகொண்டவர்களாக நம்பி செயல்படுங்கள்.

ஒருவருடைய வாழ்க்கையை விட்டு உடன்படிக்கைகளையும் சாபங்களையும் இல்லாமல் ஆக்கும்போது வாழ்க்கையை வேதனைப்படுத்திய, சிரமப்படுத்திய பிசாசுகள் அகற்றப்பட்டதால் ஆசீர்வாதங்கள் பின்தொடருகின்றன. ஆனால் இது இயந்திரம்போல தானாக நடைபெறாது. இல்லாதவைகளை இருப்பவைகளைப்போல தேவன் அழைத்ததுபோல நாம் அற்புதங்களை அழைக்கவேண்டும் (ரோமர் 4:17). தேவனுடைய சிங்காசன அறையிலிருந்து இங்கே பூமிக்கு வரும்படி அவைகளை அழைக்கவேண்டும். தடைசெய்த ஆவி சென்றுவிட்டபடியால், சின்ன முயற்சியில் பெரியவெற்றிகளை நீங்கள் காணலாம்.

இந்நேரந்தான் உங்கள் விருப்பத்திற்காக, உங்களுக்கு தேவையான அனைத்துக்காகவும் ஜெபிக்கிற வேளை:

"நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்." -மாற்கு 11:24

நீங்கள் இழந்துபோன எல்லாகாரியங்களையும் அல்லது எல்லா தாமதங்களினால் பாடுபட்டு இழந்துபோனவைகளையும் திரும்பப்பெற்றுக்கொள்ளச்செய்யும்படி தேவனிடம் கேட்டுக் கொள்ளும் நேரமாக இருக்கிறது.

“நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரியசேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப்பூச்சிகளும், பச்சைப்புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன். நீங்கள் சம்பூரணமாய் சாப்பிட்டுத்திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.” – யோவேல் 2:25,26

லாகோஸ் நகரில் ஒரு சகோதரிக்கு இப்படியே நடந்தது. திருமணமான அவளுக்கு சுமார் பத்து வருடங்களாக பிள்ளை இல்லை. அவளது விடுதலைக்காக கர்த்தரைநோக்கி கூப்பிட்டாள். அவளுக்கு தடையாக இருந்த பிசாசுகள் துரத்தப்பட்டபின், அவளுடைய அனைத்து அற்புதங்களுக்காகவும் வேண்டிக்கொண்டாள் உரிமைபாராட்டினாள், விசேசமாக தடைபட்ட பிள்ளைசெல்வங்களை திருப்பித்தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். அது அவளுக்கு அப்படியே நிறைவேறிற்று. ஒரே பிரசவத்தில் 4குழந்தைகள் பிறந்தன, 3மகன்களும் 1மகளும்! இவ்வளவு காலமாக பிசாசினால் தடைசெய்யப்பட்ட அத்தனை பிள்ளைகளும் தனக்கு வந்தாக வேண்டும் என்று தேவனிடம் வேண்டிக்கொண்டதாக இச்சாட்சியை என்னிடம் பகிர்ந்துகொண்ட அவளுடைய உறவுப்பெண் சொன்னாள். கேட்டவைகள் எல்லாம் அவர்களுக்கு வந்துவிட்டன. அதுபோல உங்களுக்கு உரியவைகளும் வரும். அது காரோ, நிலங்களோ, வீடுகளோ, பிள்ளைகளோ, கணவனோ அல்லது மனைவியோ, வெற்றியோ அல்லது கல்லூரியில் நுழைவுஅனுமதியோ, பெயரிட்டு வரும்படி கட்டளையிடுங்கள். அவைகளை பரலோகத்திலிருந்து கொண்டுவருவதற்கு தூதர்கள் தயாராக, எப்பொழுது ஜெபிப்பார்கள் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நற்செய்திகள்! நீங்கள் ஜெபிக்கும்போது, நீங்கள் கேட்பதற்கு மறந்த காரியங்கள் அல்லது பலவருடங்களுக்கு முன்னதாக நீங்கள் பெற்றுக்கொள்ளமுடியாதபடி பிசாசினால் தடுக்கப்பட்ட காரியங்களும் இருக்கக்கூடும். அவைகளை நீங்கள் கேட்காவிட்டாலும்கூட உங்களுக்கு அனுப்பும் பரிசு பொட்டலத்திற்குள் (பார்சலோடு) அவைகளையும் உங்களுக்கு கூட்டித்தருவார் என்று வேதாகமம் சொல்கிறது.

“நாம் வேண்டிக்கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச்செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.” – எபேசியர் 3:20,21

வேதாகமத்தில் உபாகமம் 28இல் தொகுத்துச் சொல்லப்பட்ட எல்லா ஆசீர்வாதங்களையும் உடனடியாக உரிமைபாராட்டியாக வேண்டும். மனிதனுக்காக தேவனுடைய வெற்றிகரமான ஆசீர்வாதங்கள் உண்டு; நிகழ்காலத்திற்காகவும் வருங்காலத்திற்காகவும் பரிபூரண செழிப்பு உண்டு; நல்லஆரோக்கியம் உங்களுக்காகவும் உங்கள் குடும்பத்தார் மற்றும் உறவினர் அனைவருக்காகவும் உண்டு; வாழ்க்கையின் எல்லாபகுதிகளிலும் வளமும் விளைச்சலும் உண்டு; வேலை செய்கின்ற இடத்திலும், தொழிலிலும். குடும்பத்திலும் எல்லாஇடங்களிலும் உங்களுக்கு உயர்வு உண்டு.

ஒரு தீர்க்கதரிசனம் உங்கள் வாழ்வில் நிறைவேறப்போகிறது, நீங்கள் தொழிலோ வியாபாரமோ செய்பவராக இருந்தால் மக்கள் உங்களைத்தேடிவந்து கொடுப்பார்கள், நீங்கள் அவர்களைத் தேடிப்பின்னால் போகமாட்டீர்கள். அவர்கள் உங்களைத்தேடி வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் வருவார்கள். முதலிலேயே வேலைக்கு முன்பணம்கூட தருவார்கள். ஆம், உடன்படிக்கைகளும் சாபங்களும் முற்றுமாக அகற்றப்படும்போது, எல்லா தாமதங்களும் மறைந்துவிடும், அற்புதங்கள் உங்கள் வாழ்க்கையில் செழித்தோங்கும். தேவன் சொன்னதை நான் உங்களிடம் சொல்லியாக வேண்டும்.

“அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்.” -ஏசாயா 65:24